அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018 - 2019

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | **முன்னுரை** | 1 |
| 2. | **ஊராட்சி நிர்வாகம்** | 12 |
| 3. | **மாநில அரசுத் திட்டங்கள்** | |
| 3.1 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 85 |
| 3.2 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 91 |
| 3.3 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 98 |
| 3.4 | நபார்டு சாலைகள் | 99 |
| 3.5 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 110 |
| 3.6 | தன்னிறைவுத் திட்டம் | 121 |
| 3.7 | சுகாதாரம் – முழு சுகாதார தமிழகம் | 125 |
| 3.8 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் | 131 |
| 3.9 | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 132 |
| 3.10 | தூய்மையான கிராம இயக்கம் | 133 |





| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.11 | ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 133 |
| 3.12 | பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல் | 135 |
| 3.13 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 137 |
| 4 | **மத்திய அரசுத் திட்டங்கள்** | |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 139 |
| 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 174 |
| 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 177 |
| 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 178 |
| 4.5 | தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்) | 183 |
| 4.6 | தேசிய ரூர்பன் இயக்கம் | 187 |
| 4.7 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் | 190 |
| 4.8 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 193 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **5** | **பணியமைப்பு** | |
| 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 196 |
| 5.2 | பொறியியல் பணியமைப்பு | 197 |
| 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 199 |
| 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 200 |
| 6 | **திறன் மேம்பாடு** | 206 |
| 7 | **தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்** | 236 |
| 8 | **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (புதுவாழ்வு திட்டம் – II)** | 298 |
| 9 | **பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்** | 309 |
| 10 | வரவு செலவுத் திட்டம் 2018–19 | 326 |
| 11 | **முடிவுரை** | 328 |

# 1. முன்னுரை



## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–19

**முன்னுரை**

***"உண்மையான ஜனநாயக இந்தியாவின் அடிப்படை அலகு கிராமம் ஆகும். உண்மையான ஜனநாயகத்தை கிராமத்தில் உள்ள மக்களால் கிராமத்தின் அடித்தளத்திலிருந்து அமைக்க பாடுபட வேண்டும். என்னுடைய கணிப்பில் 'கிராமம்' என்ற அமைப்பு தான் மிகவும் வலிமையிலும் வலிமையானது. இத்தகைய ஒரு சுயசார்பு அடிப்படையில் உருவாக்கப்பட்ட கிராமமே மிகச் சிறந்த தன்மையை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட சுயசார்பு மிக்க ஒரு சிறந்த கிராமத்தை ஒருவர் உருவாக்கினால் அவர் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே வடிவமைப்பு ஒன்றினை கொடுத்துள்ளார்."***

***–மகாத்மா காந்தி***

---

தமிழ்நாட்டில், ஊரக வளர்ச்சி என்பது பல்வேறு வளங்களையும் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் திறமையான விநியோக முறையின் மூலம் அனைத்து வள ஆதாரங்களையும் சமமான முறையில் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்கிறது. ஊரகப் பகுதிகளில்

வாழும் மக்களின் வறுமையை ஒழிப்பதற்கும் மற்றும் உயர்தரமான சேவைகளை வழங்குவதற்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது. வருகின்றது.

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடி திட்டங்களில் ஒன்றாகும். கிராமப் புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே இந்த வகையில் செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். 2011–12 ஆம் ஆண்டு முதல் 2017–18 ஆம் ஆண்டு வரை, மொத்தம் 3.40 இலட்சம் பசுமை வீடுகள் ரூ.6,780 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு சூரிய மின்சக்தி விளக்குகளும் பொருத்தப்படுகின்றன.

பரந்த ஊரகச் சாலைத் தொகுப்பு வலுவான ஊரகப் பொருளாதாரத்தில் முக்கியமான அங்கம் வகிக்கிறது. தொலை தூரத்தில் ஆங்காங்கே வாழும் மக்களை முக்கிய பகுதியுடன் இணைப்பதற்கு முன்னுரிமை அளிப்பதே இந்த அரசின் முக்கிய கொள்கையாகும். அதன்படி, ஊரக சாலைகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களின் மூலம் பெருமளவு நிதியினை அரசு தொடர்ந்து ஒதுக்கீடு செய்து வருகிறது. இதுதவிர, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கையையும் அரசு வகுத்துள்ளது.



குக்கிராமங்களை வளர்ச்சிக்கான அடிப்படை அலகாக கொண்டு 2011 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் தமிழக அரசின் மற்றொரு சிறப்பு முயற்சி தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம். இத்திட்டம் சமமற்ற முறையில் கிராம ஊராட்சிகளுக்கு நிதி ஒதிக்கீடு செய்வதை மாற்றி வள ஆதாரங்களை சமமாக பகிர்ந்தளிப்பதை உறுதி செய்கிறது. குறைந்தபட்ச அடிப்படை வசதிகளாகிய, குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், இடுகாடு / சுடுகாட்டினை மேம்படுத்துதல், இடுகாடு/சுடுகாடு செல்லும் பாதை அமைத்தல் மற்றும் கூடுதல் தேவைகளாகிய அங்கன்வாடி மையங்கள், பொது விநியோக கடைகள், சுய உதவிக் குழு கட்டடங்கள், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் மற்றும் இதர அத்தியாவசிய பணிகள் அனைத்து குக்கிராமங்களிலும் தேவையான அளவிற்கு முடிக்கப்பட்டு விட்டது. அதனால் 2016–17 ஆம் ஆண்டில், தாய் திட்டத்தின் முன்னுரிமைகள் உள்ளூர் தேவைக்கேற்ப மாற்றம் பெற்றன. அதன்படி, சிறுபாசன ஏரிகளை புனரமைத்தல், ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், தெருக்களை மேம்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் வலுவான சட்ட வடிவமைப்பின் மூலம் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும்

சலுகைகளை வழங்கும் மிகப்பெரிய சமூக பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டம் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் அதிகபட்சமாக ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வாய்ப்பு அளிக்கிறது. மகளிர் மூலம் மனித சக்தி நாட்களை உருவாக்குவதில் தேசிய சராசரியான 52 சதவிகிதத்தை ஒப்பிடுகையில் 86 சதவிகிதத்தை எய்தியதன் மூலம் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மேலும், தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் 99.18 சதவிகிதம் குறிப்பிட்ட காலக்கொடுவிற்குள் வழங்கியுள்ளதன் மூலம் தமிழகம் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மாநிலத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் 65% இயற்கை வள மேம்பாட்டு பணிகளான தடுப்பணை கட்டுதல், பாரம்பரிய நீர் நிலைகளை புனரமைத்தல், உறிஞ்சுக் குழி அமைத்தல், பெருமளவில் மரங்கள் நடுதல் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் சமூக நலத் துறையுடன் ஒருங்கிணைந்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சொத்துக்களான அங்கன்வாடி மையக் கட்டடங்கள் மற்றும் சுய உதவிக்குழு கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் போன்ற பிற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்துவதன் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியின்



குறிக்கோள்களான "பசியின்மை", "வறுமையின்மை", "பாலின வேறுபாடின்மை" மற்றும் "பருவநிலை மாறுபாடு" ஆகியவற்றை அடைய 100 நாட்கள் வேலை உறுதித் திட்டம் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம ஊதியம் வழங்குதல் மற்றும் ஊரக பகுதிகளில் வறட்சிநீக்கப் பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு நமது மாநிலம் இலக்கினை எய்தியுள்ளது.

நாட்டின் வளர்ச்சியை வடிவமைப்பதில், சுகாதார வசதி மேம்படுத்துதல் என்பது முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், அது சமூக பொருளாதார மற்றும் சுகாதாரக் குறியீடுகளுக்கு நேரடியான தொடர்பினை கொண்டதாகும். எனவே, சுத்தமான சுற்றுச்சூழலை பராமரித்தல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை எய்த வழிவகை செய்யும் சுகாதார திட்டங்களுக்கு இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. சுகாதார நிலையினை அடைதல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு மூலம் தேவையான மனமாற்றத்தினை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் கட்டப்பட்ட கழிப்பறைகளின் பயன்பாட்டினை உறுதி செய்யவும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை கிராம ஊராட்சிகள் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. சமூக அணுகு முறையில் பயிற்சி பெற்ற ஊக்குநர்கள் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், திறந்த வெளியில்

மலம் கழித்தலற்ற நிலையினை அடைவதற்கும், தொடர்ந்து அந்நிலையை தக்க வைப்பதற்கும் முக்கிய பங்காற்றுகின்றன.

மாநிலத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 'தூய்மைக் காவலர்களை' ஈடுபடுத்தி, வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் அவற்றை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய திடக்கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகளை ஊரக பகுதிகளில் ஏற்படுத்தியதின் மூலம், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இத்திட்டத்திற்கு பாராட்டுகள் குவிந்துள்ளன. மேற்படி திட்டம், தூய்மையான சுற்றுப்புறச் சூழலை பராமரிப்பதற்கு மட்டுமல்லாது, மறு சுழற்சி செய்யக் கூடிய கழிவுகள், உரம் மற்றும் மண்புழு உரங்களை விற்பதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வருவாய் ஈட்டும் பொருளாதார பயன்களையும் ஏற்படுத்துகிறது.

பெண்கள் சமூக பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டும் மற்றும் ஆற்றல் மேம்பாடு அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரை சமூக பொருளாதார மாற்றத்தினை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் அவர்களை அதற்கான சமூக மூலதனமாகவும் மாற்றுகின்ற இரு நோக்கங்களின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. மகளிரை சுய உதவிக்குழுக்களாக அமைத்து, அவர்களின் திறன் சார்ந்த ஊதிய வேலைவாய்ப்பிற்கும், சுய வேலை வாய்ப்பிற்கும் உதவியாக பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகளுக்கு வழியமைத்து, உள்கடன் மற்றும் வங்கி கடன் வழங்கி, வேளாண் மற்றும் வேளாண் அல்லாத துறைகளில் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், சமுதாய உள்ளாக்கத்திற்காக மகளிரை சமூக மூலதனமாக பயன்படுத்தியும், கல்வி, சுகாதாரம் மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைத்தும் இந்த சாதனையை செய்து வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் உப திட்டங்களான தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம், கிராமிய தொழில் முனைவோர் திட்டம், பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் போன்றவற்றின் மூலம் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தும் வளர்ச்சி அணுகுமுறையில் ஊரக பகுதிகளில், மகளிரை ஆற்றல் படுத்தி வறுமையை குறைக்கும் இலக்கினைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மக்கள் பங்கேற்புடன் கூடிய "மக்கள் நிலை ஆய்வு முறை" என்பது தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிறப்பு அம்சமாகும். இதன் அடிப்படையில் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகிய இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு உதவி செய்யப்படுகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டு அவைகளின் உதவியுடன் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வேலைக்கு செல்லும் மகளிர் தாங்கள் பணியாற்றும் நிறுவனங்கள், பணியிடங்கள் மற்றும் வங்கிகள் போன்றவற்றிற்கு எளிதில் செல்வதற்காக பெண்களுக்கு வசதியான மொபட் / ஸ்கூட்டர் போன்ற இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு உதவும் வண்ணம் மாநில அரசு மானியத்துடன் கூடிய **அம்மா இரு சக்கர வாகனத்திட்டத்தை** செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களைச் சார்ந்த ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறுவர். தொலை தூரங்களில் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மகளிர், மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், கைவிடப்பட்ட



பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளி பெண்கள், 35 வயதிற்கு மேற்பட்ட மணமாகாத பெண்கள், ஆதி திராவிடர் / பழங்குடியினப் பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இரு சக்கர வாகனத்தின் மதிப்பில் 50 சதவிகிதத் தொகை அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

அடித்தட்டு அளவில் ஏழைகளுக்கான வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் ஏழ்மை மற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைத்து, இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்வதே தீன் தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY – NULM) நோக்கமாகும். இத்திட்டம் 2014–15 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசுத் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுவாழ்வு திட்டத்தின் தொடர்ச்சியாக உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP).

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டின் 120 வட்டாரங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், நிதி சேவைகள் அளித்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். இத்திட்டத்திற்கான பங்கீட்டுத் தொகை உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற விகிதாச்சார அடிப்படையில் ரூபாய் 919.73 கோடி (142.75 மில்லியன் டாலர்) மதிப்பீட்டில் அமையும்.

நீடித்த நிலையான வளர்ச்சி மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை உருவாக்குதல், ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துதல், சுகாதாரத்தை மேம்படுத்துதல், வறுமையை அகற்றுதல், இயற்கை வளங்களை காத்தல், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இடைவெளியை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் வளமான ஊரக இந்தியாவை உருவாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயல்பட்டு வருகின்றது.

தமிழ் நாடு தொடர்ந்து முதல் மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் தனது கடமைகளை தொடர்ந்து ஆற்றும்.



# 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் சோழப் பேரரசு காலத்திலேயே உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரிலுள்ள ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோவில் கல்வெட்டுகள் விளங்குகின்றன. கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்குழுக்கள் பொருளாதார மற்றும் நிர்வாக அமைப்புகளாக முழுமையான சுதந்திரத்துடன் செயல்பட்டன. மன்னராட்சியில் காணப்பட்ட இம்மக்களாட்சி முறையில் கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது வியக்கத்தக்க அம்சமாகும்.

ஆனால், ஆங்கிலேய காலனி ஆட்சிக்கு உகந்த வகையில், ஒரு மாறுபட்ட உள்ளாட்சி தத்துவத்தினை ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தினர். நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாகம்–IV, பிரிவு 40ன்படி, கிராம ஊராட்சிகளைஅமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பித்த அறிக்கையில்



மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.

இதனைத் தொடர்ந்து மதராஸ் அரசு, மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம், 1958 மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றை இயற்றியது. இவற்றின் முக்கிய அம்சங்களாவன:

1. ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான சம எல்லையுடைய அமைப்புகளாக உருவாக்குதல்.

2. மாவட்ட ஊராட்சிக் குழுக்களை கலைத்தல்

3. ஆலோசனை வழங்க மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு ஏற்படுத்துதல்.

4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல். ஆனால், இச்சட்டத்தின் காரணமாக கிராம ஊராட்சிகளுக்கு ஏற்கெனவே இருந்த நீதி வழங்கும் அதிகாரங்கள் நீக்கம் செய்யப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, இது 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்தது. ஊராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 243–G வழி வகை செய்கிறது. இதனடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 11–வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 'மாவட்ட திட்டக் குழு' அமைக்க வகை செய்கிறது. 73–வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்திற்கு ஏற்ப மாநில அரசுகள் தங்கள் ஊராட்சி சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்து புதிய சட்டத்தை இயற்ற வேண்டும்.

73–வது அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அமைப்பு முறையில் புதிய மற்றும் முக்கியமான பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவற்றில் கிராம சபைகள், மூன்றடுக்கு ஊராட்சி முறை, நேரடித் தேர்தலின் மூலம் ஊராட்சிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப இட ஒதுக்கீடு, மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு, ஐந்தாண்டுகளுக்கொரு முறை உள்ளாட்சித் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்துதல், மாநில சட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை பகிர்ந்து அளித்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வினை ஆய்வு செய்து பரிந்துரை செய்திட ஐந்தாண்டுகளுக்கொருமுறை மாநில நிதி



ஆணையம் அமைத்தல் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையத்தை நிறுவுதல் முதலியன முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22.4.1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கிய மாற்றங்களை கொண்டு வந்தது. அவையாவன ;

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி' என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களையும் குறிக்கும் பொதுச்சொல்லாகும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின் மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்ல.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. தற்போது, அரசாணை எண். 60, ஊரக வளர்ச்சி துறை மற்றும் ஊராட்சி துறை (ப.ரா.1) நாள்: 23.05.2016ன் மூலம் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக்குழு அமைக்கப்பட்டது.

## 2. உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.1. தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகளில்



குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகளுக்கு தீர்வு காணும் முறை ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.2. தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சிமுறை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3. மாநிலத் தேர்தல் ஆணையம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 73–வது திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 239ன் படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மக்களாட்சியை வலுப்படுத்தும் வகையில் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அரசியலமைப்பு நிறுவனமாக 1994ம் ஆண்டு, மாநில தேர்தல்

ஆணையம் உருவாக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தல் நடத்துதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மாநில தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதையும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் மாறுதல் செய்ய இயலாது.



## 2.4. மாநில மறுவரையறை ஆணையம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 28ன் படி ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டும். தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

மறுவரையறை ஆணையம் கீழ்க்காணும் அலுவல் சார்ந்த உறுப்பினர்களை கொண்ட ஒரு அமைப்பாகும்–

(அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் இதன் தலைவர் ஆவார்.

(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்

(இ) நகராட்சி நிர்வாக ஆணையர்

(ஈ) பேரூராட்சிகள் இயக்குநர்

(உ) சென்னை மாநகராட்சி ஆணையர்

(ஊ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலர் இதன் உறுப்பினர் செயலர் ஆவார்.

இந்த ஆணையத்தின் தலைமையிடமானது சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும். இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு–

(அ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய

உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(ஆ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பினையும் வார்டுகளாக பிரிப்பதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(இ) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் வார்டுகளின் எல்லைகளை தீர்மானிப்பதற்கான பரிந்துரைகளை செய்தல்.

(ஈ) உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு வார்டுகளின் மக்கள் தொகையானது கூடுமான வரையில் அந்த குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்பு முழுவதும் சரிசமமாக இருக்கும் வகையில் பரிந்துரைத்தல்.

(உ) உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு வார்டும் பூகோள ரீதியில் கூடுமான வரை கச்சிதமான பரப்பளவினை கொண்டதாக இருக்குமாறு பரிந்துரைத்தல்.

(ஊ) கடைசியாக நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வார்டுகளை நிர்ணயம் செய்வதற்கான பரிந்துரைகளை செய்தல்.



(எ) குறிப்பிட்ட கால இடைவெளியில் இப்பணி தொடர்பான காலமுறை அறிக்கைகளை அரசிற்கு வழங்குதல்.

(ஏ) அரசால் அவ்வப்போது பணிக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறுவரையறை அலுவலர்களாக பின்வரும் அலுவலர்கள் செயல்படுவர்–

(அ) கிராம ஊராட்சி வார்டுகள் – வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி)

(ஆ) ஊராட்சி ஒன்றிய வார்டுகள் – உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(இ) மாவட்ட ஊராட்சி வார்டுகள் – செயலர், மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் மறுவரையறை அலுவலர்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வதற்கான வரைவு கருத்துருக்களை தயார் செய்வர்.

இவ்வாறு பெறப்படும் உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை தொடர்பான வரைவு கருத்துருக்களை மறுவரையறை ஆணையமானது ஆய்வு செய்யும். ஒவ்வொரு வரைவு கருத்துருவின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்த பின்பு இதன் மீதான தனது பரிந்துரையுடன், மறுவரையறை ஆணையம், இக்கருத்துருக்களை பிரசுரம் செய்யும் வகையில் அரசிற்கு அனுப்பி வைக்கும்.

இதன் அடிப்படையில், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை பணிகளை இதற்கென அமைக்கப்பட்ட மறுவரையறை ஆணையம் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட மறுவரையறை அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்களால் வார்டு மறுவரையறை தொடர்பான வரைவு கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பெறும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இவ்வாறு பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து மறுவரையறை அலுவலர்களால் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை கேட்கும் வகையில் வேலூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களில் மண்டல அளவிலான கூட்ட அமர்வுகள் மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்டு, வார்டு மறுவரையறை பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## 2.5. உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், **1994–ம்** ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **1996–ம்** ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி



அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் **2001**, அக்டோபர் **2006** மற்றும் அக்டோபர் **2011–ல்** நடத்தப்பட்டன.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கட்சி அடிப்படையில் நடத்த மாநில தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிடும். ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. **2011ம்** ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| **மொத்தம்** | | **1,19,399** |

**2.5.1. கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்.**

தமிழ்நாட்டில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு உறுப்பினர் வார்டு முறை இருந்தாலும் கிராம ஊராட்சிகளில் ஒரு உறுப்பினர் வார்டு மற்றும் பல உறுப்பினர் வார்டு ஆகிய இரண்டு நிலையும் இருந்தன. இதனடிப்படையிலேயே, அக்டோபர் 2006 ஆம் ஆண்டு வரை சாதாரண தேர்தல்கள் வரை நடத்தப்பட்டன.

அரசாணை எண். 63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள்.14.9.2011–ன்படி, தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சிகளில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக மாற்றம் செய்யப்பட்டது.



**2.5.2. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்திட வேண்டும்.

**2.5.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21,1994)–ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்களில், மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர்

பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிரை அதிகாரப்படுத்தவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதினார். ஆகவே, மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995–ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசாணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள்.23.05.2016–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, மகளிருக்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு எதிர்வரும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் நடைமுறைக்கு வரும்.

## 2.6. கிராம ஊராட்சிகள்

கிராம ஊராட்சி என்பது, குக்கிராமங்களை உள்ளடக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள 31 ஊரக மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.



மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.**
**2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை**
**அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்**

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,821 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,524** |

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.3.
### மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பெண்கள் | பழங் குடியினர் | பழங் குடியினர் விழுக்காடு | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 9,24,124 | 29,706 | 1.60 | 6,24,458 | 33.54 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 7,90,170 | 37,708 | 2.38 | 5,04,115 | 31.80 |
| 3 | கடலூர் | 18,00,133 | 8,91,507 | 10,082 | 0.56 | 6,25,788 | 34.76 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 14,45,062 | 71,289 | 2.45 | 9,19,308 | 31.56 |
| 5 | வேலூர் | 24,82,556 | 12,41,612 | 65,230 | 2.63 | 6,05,248 | 24.38 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 10,14,486 | 87,096 | 4.27 | 5,02,044 | 24.62 |
| 7 | சேலம் | 19,57,105 | 9,45,014 | 1,12,334 | 5.74 | 3,54,545 | 18.12 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 5,37,918 | 55,417 | 5.09 | 2,48,100 | 22.81 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 6,24,646 | 60,609 | 4.70 | 2,13,538 | 16.55 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 7,17,175 | 20,980 | 1.43 | 2,20,945 | 15.07 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 5,59,797 | 19,084 | 1.69 | 2,16,689 | 19.16 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 5,68,772 | 1,947 | 0.17 | 2,63,539 | 23.13 |
| 13 | கோயம்புத்தூர் | 10,21,359 | 5,10,409 | 19,565 | 1.92 | 2,13,492 | 20.90 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 1,59,447 | 22,767 | 7.33 | 91,446 | 29.44 |
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 8,46,926 | 1,465 | 0.09 | 3,84,291 | 23.04 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 6,37,194 | 2,214 | 0.18 | 4,60,876 | 36.54 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 5,06,528 | 939 | 0.09 | 3,88,740 | 38.62 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 7,39,563 | 14,519 | 0.99 | 3,05,109 | 20.73 |
| 19 | கரூர் | 6,68,360 | 3,36,684 | 201 | 0.03 | 1,59,718 | 23.90 |
| 20 | பெரம்பலூர் | 4,68,017 | 2,34,113 | 2,136 | 0.46 | 1,50,504 | 32.16 |
| 21 | அரியலூர் | 6,71,100 | 3,37,847 | 9,946 | 1.48 | 1,63,770 | 24.40 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 6,75,896 | 845 | 0.06 | 2,51,552 | 18.76 |
| 23 | மதுரை | 13,00,481 | 6,44,431 | 4,896 | 0.38 | 2,72,494 | 20.95 |
| 24 | தேனி | 5,75,394 | 2,84,527 | 1,377 | 0.24 | 1,43,589 | 24.95 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 7,25,917 | 4,580 | 0.31 | 3,34,064 | 22.92 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 5,01,016 | 526 | 0.05 | 2,13,583 | 21.16 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 6,44,603 | 1,197 | 0.09 | 3,15,796 | 24.55 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 4,77,215 | 518 | 0.05 | 1,88,454 | 19.78 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 8,32,916 | 4,099 | 0.25 | 3,58,487 | 21.79 |
| 30 | தூத்துக்குடி | 9,71,273 | 4,92,268 | 1,921 | 0.20 | 2,48,752 | 25.61 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 3,25,257 | 3,893 | 0.60 | 26,546 | 4.11 |
| | **மொத்தம்** | **404,86,223** | **201,73,040** | **6,69,086** | 1.65 | **99,69,580** | **24.62** |



### 2.6.1. மாவட்ட வாரியான பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு **1,04,149.61** சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விபரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.4.
### மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3,512 | 6 | 3,851.45 | 6.08 |
| 2 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 3 | கடலூர் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 3,487 | 3 | 6,509.43 | 5.92 |
| 5 | வேலூர் | 743 | 6,109 | 8 | 4,022.30 | 5.41 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 7 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 8 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 9 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 11 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 12 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 13 | கோயம்புத்தூர் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 14 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 17 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,322.69 | 5.40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 19 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 20 | பெரம்பலூர் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.30 |
| 21 | அரியலூர் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 23 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |
| 24 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 25 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 27 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 28 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 29 | திருநெல்வேலி | 425 | 2,337 | 5 | 4,283.06 | 10.08 |
| 30 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 1,155 | 12 | 626.14 | 6.59 |
| **மொத்தம்** | | **12,524** | **79,394** | **6** | **1,04,149.61** | **8.32** |

### 2.6.2. கிராம ஊராட்சிகளின் வருமான வரம்பு

மாநிலத்தில் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2017–18 ஆம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.5**
**கிராம ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள்**

| வருமான வரம்பு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 8–10 இலட்சம் | 271 |
| ரூ.10–20 இலட்சம் | 7,168 |
| ரூ. 20– 50 இலட்சம் | 4,470 |
| ரூ. 50 இலட்சம் – 1 கோடி | 510 |
| ரூ. 1 கோடிக்கும் மேல் | 105 |
| **மொத்தம்** | **12,524** |

### 2.6.3. கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சி அளவிலும் உள்ள அடித்தள ஜனநாயக அமைப்பாகும். பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பயனாளிகளை



தேர்வு செய்தல், திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் சமூக தணிக்கை ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை உறுதிபடுத்தி வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பான நிர்வாகத்திற்கு இது வழிவகுக்கிறது. சட்டப்படி, இரண்டு கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கிராம சபைக்கான குறைவெண் வரம்பினை அரசு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 2.6**
**கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

1. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.

2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து தகவல் தெரிவித்து வளர்ச்சிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
4. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
5. பல்வேறு திட்டங்களுக்கான பணி பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
7. கிராம ஊராட்சி தணிக்கை அறிக்கை மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான சமூக தணிக்கை அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.
8. இன மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

**2.6.4. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமையாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)



ii) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்.

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல், மேலும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

**2.6.5. குடிநீர் வழங்கல்**

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. 31.3.2018 அன்றைய நிலையில் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் திட்டங்கள்

மற்றும் ஆதாரங்கள் குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 2.7.

### பயன்பாட்டில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 6007 | 4398 | 4174 | 20 | 69 |
| 2 | திருவள்ளூர் | 4156 | 3717 | 2427 | 9 | 36 |
| 3 | கடலூர் | 7842 | 4115 | 3946 | 12 | 60 |
| 4 | விழுப்புரம் | 12944 | 6060 | 10248 | 11 | 78 |
| 5 | வேலூர் | 4685 | 7227 | 13959 | 20 | 46 |
| 6 | திருவண்ணாமலை | 10876 | 5115 | 8396 | 25 | 240 |
| 7 | சேலம் | 3652 | 5786 | 5140 | 9 | 262 |
| 8 | நாமக்கல் | 2116 | 4318 | 2032 | 12 | 298 |
| 9 | தர்மபுரி | 9696 | 4671 | 4462 | 8 | 66 |
| 10 | கிருஷ்ணகிரி | 7264 | 4603 | 4733 | 18 | 93 |
| 11 | ஈரோடு | 2061 | 4941 | 1670 | 40 | 192 |
| 12 | திருப்பூர் | 1177 | 5018 | 1104 | 17 | 265 |
| 13 | கோயம்புத்தூர் | 831 | 3055 | 631 | 9 | 228 |
| 14 | நீலகிரி | 18 | 1243 | 138 | 1 | 4 |
| 15 | தஞ்சாவூர் | 7795 | 5368 | 3115 | 6 | 90 |
| 16 | நாகப்பட்டினம் | 23305 | 2914 | 2071 | 12 | 291 |
| 17 | திருவாரூர் | 8719 | 2570 | 1609 | 4 | 96 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 5766 | 4407 | 5849 | 25 | 327 |
| 19 | கரூர் | 2080 | 2960 | 3463 | 12 | 92 |



| வ.எண் | மாவட்டம் | கைப்பம்புகளின் எண்ணிக்கை | மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 20 | பெரம்பலூர் | 2820 | 819 | 1320 | 4 | 65 |
| 21 | அரியலூர் | 892 | 1585 | 1462 | 7 | 168 |
| 22 | புதுக்கோட்டை | 5830 | 4047 | 5368 | 46 | 208 |
| 23 | மதுரை | 2985 | 4039 | 4891 | 7 | 182 |
| 24 | தேனி | 740 | 995 | 1330 | 24 | 106 |
| 25 | திண்டுக்கல் | 1137 | 5995 | 5134 | 32 | 116 |
| 26 | இராமநாதபுரம் | 707 | 1746 | 1697 | 52 | 429 |
| 27 | விருதுநகர் | 4518 | 3176 | 3696 | 12 | 153 |
| 28 | சிவகங்கை | 3864 | 3183 | 6210 | 33 | 129 |
| 29 | திருநெல்வேலி | 4320 | 4838 | 2203 | 26 | 388 |
| 30 | தூத்துக்குடி | 7147 | 2273 | 2403 | 22 | 354 |
| 31 | கன்னியாகுமரி | 284 | 1356 | 1624 | 13 | 44 |
| | **மொத்தம்** | **156234** | **116538** | **116505** | **548** | **5175** |

### 2.6.6. கோடைக் காலத்தில் குடிநீர் விநியோகம்

2017–18ம் ஆண்டு மாநிலத்தின் பல மாவட்டங்களில் சராசரிக்கும் குறைவான மழையளவே பெறப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டிலும் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதில் பெரும் சவால்கள் ஏற்பட்டன. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்தது.

## 2.6.7. நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்

குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கீழ்க்காணும் நடடிவக்கைகளை பின்பற்றுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து குடிநீர் ஆதாரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள கிராம ஊராட்சி வாரியாக தற்காலிகத் திட்டம் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 28,564 குடிநீர் பணிகள் கண்டறியப்பட்டு, ரூபாய் 529.73 கோடி செலவில் தேவைப்படும் இடங்களில் பணிகள் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.
- ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.
- குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தின.



- குடிநீர் விநியோகத்தை கிராம ஊராட்சி அளவில் கண்காணிப்பதற்கு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார அளவில் கண்காணிப்பதற்கு உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.
- குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறைதீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைதீர் மையங்கள் மூலம் புகார்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

## 2.6.8. குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை தினசரி இணையதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 2.7. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்திய ஒரு முறை தீர்வு மின்கட்டணம்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புக்கு மின்சாரம் அதிகளவு பயன்படுத்தப்படுவதால் மின் நுகர்வில் கிராம ஊராட்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மின்கட்டணம் செலுத்துவதற்கு 60 நாட்கள் வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் அபராத கட்டணம் விதிக்கப்படுகிறது.

31.03.2017 வரை உள்ள காலத்திற்கான மின் கட்டணத்தில் 9,087 கிராம ஊராட்சிகள் நிலுவையின்றி மின் நுகர்வு கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், எஞ்சிய 3,437 கிராம ஊராட்சிகளில் 60 நாட்களுக்கு மிகைப்பட்ட நிலுவை தொகை ரூ.254.41 கோடியாக சேர்ந்துள்ளதாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தெரிவித்துள்ளது.

குடிநீர் தேவைக்காக நீர்மட்டம் குறைந்துள்ள ஊராட்சிகளில் அதிக நேரம் மின்விசை இயந்திரங்களை இயக்குவதாலும், அதிக ஆழத்திலிருந்து நீரினை உறிஞ்ச வேண்டி உள்ளதாலும், கிராம ஊராட்சிகள் மின் கட்டணத்தை முழுவதுமாக செலுத்திட இயலாத நிலை ஏற்படுவதாக ஐந்தாவது மாநில நிதிக்குழுவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



ஐந்தாவது மாநில நிதிக்குழுவானது, நிதிப் பற்றாக்குறையுடைய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியை ஏற்படுத்திட பரிந்துரை செய்துள்ளது. ஐந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையினை ஏற்று அரசானது மொத்த பகிர்வு மானியத்தில் 10 சதவீத நிதியினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தியுள்ளது.

அரசு ஆணை எண். 94, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:23.08.2017–ன்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பற்றாக்குறை நிதியில் இருந்து ஒரு முறை தீர்வாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரூ.216.09 கோடி கிராம ஊராட்சிகளின் சார்பாக மின் நுகர்வுக் கட்டணம் அனுமதித்து வழங்கப்பட்டுள்ளது.

### 2.7.1. ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110–ன்படி ஊரகப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் தோராயமாக 35 விழுக்காடு மின் உபயோகத்திற்காக செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை, மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 3.9.2015 மற்றும் 29.8.2016 ஆகிய தேதிகளில் விதி 110ன் படி குழல் விளக்குகள் எல்.இ.டி.

விளக்குகளாக மாற்றம் செய்வதற்கான அறிவிப்பினை செய்துள்ளார்.

மேலும், அரசாணை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி–3), நாள்: 13.2.2018 ல் ஊரகப் பகுதிகளில் பாதரச ஆவி விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் விடுபட்ட குழல் விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக 2017–18ம் ஆண்டில் மாற்றம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

எல்.இ.டி. விளக்குகளின் தன்மை மற்றும் தொழில்நுட்ப குறிப்புகள் ஆகியன மாநில அளவில் அரசால் உருவாக்கப்பட்டுள்ள குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குழல் விளக்குகளுக்கு மாற்றாக நிறுவப்படும் எல்.இ.டி. விளக்குகள் 5 ஆண்டு கால உத்திரவாதத்துடன் கூடியதாகும். ஊரக தெருவிளக்குகளின் செயல்பாட்டினை கண்காணித்திட, ஊராட்சியில் உள்ள அனைத்து கம்பங்களுக்கும் எண் இடப்பட்டுள்ளன. மாவட்ட குறியீடு, வட்டார குறியீடு, ஊராட்சி குறியீடு மற்றும் குக்கிராம குறியீடு ஆகியவை கம்பத்தில் இடப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்குகளின் பயன்பாட்டு நிலையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் இந்தியாவில், ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து குழல் விளக்குகளையும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றும் மாபெரும் திட்டத்தை மேற்கொள்ளும் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.



**2.8. சுகாதாரம் – கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினை பேணிக் காத்தல்.**

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.
ii) கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.
iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.
iv) பொதுக் கழிப்பிடங்களை பராமரித்தல்.
v) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
vi) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மையைப் பேணவும் சுகாதாரத்தைப் பராமரிக்கவும் மொத்தம் 26,622 துப்புரவு பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள 66,025 தூய்மைக் காவலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த தூய்மை காவலர்களுக்கான ஊதியமானது கிராம

வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

### 2.8.1. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்

ஊரகப் பகுதிகளை சுத்தமாக பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி அமைப்புகள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) அனைத்து வகையான தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) ஒட்டுமொத்த துப்புரவு நடவடிக்கைகள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு அனைத்து பகுதிகளும் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.



iv) அரசு மற்றும் தனியார் மருந்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின் பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

v) சுகாதாரத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடையே ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகிறது.

vi) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் தேர்வு செய்யப்பட்டு வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## 2.9. விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், **1994** பிரிவு **111–**ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

### 2.9.1. நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் வரி, வரியில்லா வருவாய் மற்றும் மானியம் மூலம் வருமானம் பெறுகின்றன.

### 2.9.2. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி
ii) தொழில் வரி
iii) விளம்பர வரி

#### 1) வீடு / சொத்து வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172 மற்றும் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சித் துறை, நாள்: 13.12.1999–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. பொதுக் கட்டிடங்கள் மற்றும் அரசு கல்வி நிலையங்களுக்கு



இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2008–09ம் ஆண்டு முதல், அரசு உதவி பெறாத சுயநிதிக்கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.8.**
**2017–18 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம்**
**(ரூபாய் கோடியில்)**

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 32.02 | 3.16 | 35.18 |
| 2 | திருவள்ளூர் | 17.19 | 2.33 | 19.52 |
| 3 | கடலூர் | 7.86 | 0.55 | 8.41 |
| 4 | விழுப்புரம் | 6.32 | 0.45 | 6.77 |
| 5 | வேலூர் | 5.56 | 1.44 | 7.00 |
| 6 | திருவண்ணாமலை | 5.81 | 0.74 | 6.55 |
| 7 | சேலம் | 7.27 | 2.18 | 9.45 |
| 8 | நாமக்கல் | 3.15 | 2.09 | 5.25 |
| 9 | தர்மபுரி | 2.13 | 0.39 | 2.53 |
| 10 | கிருஷ்ணகிரி | 7.06 | 0.44 | 7.50 |
| 11 | ஈரோடு | 6.69 | 1.45 | 8.14 |
| 12 | திருப்பூர் | 8.12 | 0.49 | 8.61 |
| 13 | கோயம்புத்தூர் | 15.12 | 1.79 | 16.91 |
| 14 | நீலகிரி | 2.63 | 0.11 | 2.74 |
| 15 | தஞ்சாவூர் | 10.90 | 0.77 | 11.66 |
| 16 | நாகப்பட்டினம் | 3.14 | 0.37 | 3.52 |
| 17 | திருவாரூர் | 2.66 | 0.16 | 2.83 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 7.10 | 1.16 | 8.25 |

| வ.எண். | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 19 | கரூர் | 4.59 | 0.56 | 5.15 |
| 20 | பெரம்பலூர் | 2.57 | 0.65 | 3.23 |
| 21 | அரியலூர் | 4.25 | 0.24 | 4.50 |
| 22 | புதுக்கோட்டை | 5.43 | 0.80 | 6.23 |
| 23 | மதுரை | 8.32 | 0.65 | 8.98 |
| 24 | தேனி | 2.63 | 0.25 | 2.88 |
| 25 | திண்டுக்கல் | 8.35 | 0.61 | 8.96 |
| 26 | இராமநாதபுரம் | 5.32 | 0.30 | 5.62 |
| 27 | விருதுநகர் | 9.41 | 0.79 | 10.20 |
| 28 | சிவகங்கை | 4.89 | 0.28 | 5.17 |
| 29 | திருநெல்வேலி | 6.34 | 0.36 | 6.70 |
| 30 | தூத்துக்குடி | 4.98 | 0.27 | 5.25 |
| 31 | கன்னியாகுமரி | 3.87 | 0.60 | 4.48 |
| மொத்தம் | | 221.68 | 26.43 | 248.11 |

### ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198 B–ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித்தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, 2017–18ம் ஆண்டில் தொழில்வரியாக ரூ. 109.07 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.



## அட்டவணை 2.9
## மாவட்ட வாரியான தொழில்வரி விவரம் – 2017–18

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில்வரி |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 11.93 |
| 2 | திருவள்ளூர் | 6.89 |
| 3 | கடலூர் | 2.75 |
| 4 | விழுப்புரம் | 5.68 |
| 5 | வேலூர் | 5.85 |
| 6 | திருவண்ணாமலை | 4.43 |
| 7 | சேலம் | 3.54 |
| 8 | நாமக்கல் | 3.03 |
| 9 | தர்மபுரி | 2.24 |
| 10 | கிருஷ்ணகிரி | 3.34 |
| 11 | ஈரோடு | 2.19 |
| 12 | திருப்பூர் | 1.72 |
| 13 | கோயம்புத்தூர் | 5.88 |
| 14 | நீலகிரி | 0.58 |
| 15 | தஞ்சாவூர் | 3.28 |
| 16 | நாகப்பட்டினம் | 2.13 |
| 17 | திருவாரூர் | 3.12 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 4.33 |
| 19 | கரூர் | 2.29 |
| 20 | பெரம்பலூர் | 0.86 |
| 21 | அரியலூர் | 2.35 |
| 22 | புதுக்கோட்டை | 2.55 |
| 23 | மதுரை | 3.05 |
| 24 | தேனி | 1.69 |
| 25 | திண்டுக்கல் | 3.61 |
| 26 | இராமநாதபுரம் | 3.62 |
| 27 | விருதுநகர் | 5.13 |
| 28 | சிவகங்கை | 2.45 |
| 29 | திருநெல்வேலி | 3.26 |
| 30 | தூத்துக்குடி | 3.46 |
| 31 | கன்னியாகுமரி | 1.84 |
| மொத்தம் | | 109.07 |

### iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172, 220 மற்றும் 242ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் 1999–ல் ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

### 2.9.3. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்
iii) சந்தைக் கட்டணம்
iv) குடிநீர் கட்டணம்



v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்
vi) சமூகக் காடுகள் ஏலம்
vii) மீன்பாசி குத்தகை
viii) 2சி பட்டா கட்டணம்
ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்
x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்
xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.
xii) கனிமம் மற்றும் சுரங்க உரிமத் தொகை

### i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3–ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் முன் அனுமதியுடன் மனைப் பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பம் கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர்

மற்றும் ஊரமைப்பு துறைக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும். விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4–ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு துறையிலிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப முன்அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட சில கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் 1975ம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டு மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட



அனுமதிக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அரசு ஆணை எண்.13, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்: 22.1.2018–ன்படி திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ளஅரக்கோணம் மற்றும் நெமிலி ஆகிய வட்டங்களிலும் உள்ள 1,709 கிராமங்களை சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட குழுமத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வர உத்தேசித்துள்ள அரசின் நிலையினை தெரிவித்துள்ளது.

### ii) அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் மனைகள் ஒழுங்குபடுத்துதல் விதிகள், 2017.

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் உருவாகி உள்ளன. இம்மனைப்பிரிவுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பெரும்பாலான மனைகளை ஏழைகள் மற்றும் விவரம் அறியாத மக்கள் வாங்கியுள்ளனர். இந்த மனைப் பிரிவுகளை மீளவும் முந்தைய பயன்பாட்டு நிலைக்கு மாற்றிட இயலாத நிலை உள்ளது.

ஏழைகள் மற்றும் விவரம் அறியாதோர் வாங்கியுள்ள அங்கீகரிக்கப்படாத மனைகளை, உரிய வகையில் ஒழுங்குமுறைப்படுத்தி உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர அரசு முடிவு செய்து, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்துதல்,

பொது உபயோகத்திற்கான இடங்களை பயன்படுத்துதல் ஆகிய நிபந்தனைகளுடன் அங்கீகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 113ன்படி தமிழக ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 20.10.2016க்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் விற்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971க்கு விலக்களித்து மேற்படி, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் வீட்டு மனைகளை வரைமுறை செய்வதற்கு, மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 122ன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவிலுள்ள தனி வீட்டுமனைகளை வரன்முறை செய்தல்.
2. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

இவ்வாறு, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு அல்லது உட்பிரிவில் உள்ள தனி மனைகளை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறை செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.



### iii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் தொடர்புடைய தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் தொடர்புடைய தொழில் அல்லது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 159–ல் தெரிவித்துள்ள இயந்திரங்களைக் கொண்டு புதிய தொழில் தொடங்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி, 2017–18 ஆம் ஆண்டில் 2,53,887 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக் கட்டணமாக ரூ.11.52 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### iv) குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2017–18–ம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக

ரூ. 84.21 கோடி வசூலிக்கப்பட்டது. மாவட்ட வாரியான குடிநீர் கட்டண விபரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.10**

**2017–18 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்ட விபரம்**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3.01 |
| 2 | திருவள்ளூர் | 2.56 |
| 3 | கடலூர் | 1.47 |
| 4 | விழுப்புரம் | 0.34 |
| 5 | வேலூர் | 6.20 |
| 6 | திருவண்ணாமலை | 2.85 |
| 7 | சேலம் | 1.98 |
| 8 | நாமக்கல் | 2.11 |
| 9 | தர்மபுரி | 0.26 |
| 10 | கிருஷ்ணகிரி | 0.27 |
| 11 | ஈரோடு | 2.35 |
| 12 | திருப்பூர் | 3.70 |
| 13 | கோயம்புத்தூர் | 8.50 |
| 14 | நீலகிரி | 0.14 |
| 15 | தஞ்சாவூர் | 6.98 |
| 16 | நாகப்பட்டினம் | 1.07 |
| 17 | திருவாரூர் | 2.34 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.09 |
| 19 | கரூர் | 2.76 |
| 20 | பெரம்பலூர் | 0.89 |
| 21 | அரியலூர் | 1.69 |
| 22 | புதுக்கோட்டை | 1.23 |
| 23 | மதுரை | 2.22 |
| 24 | தேனி | 3.38 |
| 25 | திண்டுக்கல் | 3.39 |
| 26 | இராமநாதபுரம் | 2.00 |
| 27 | விருதுநகர் | 3.09 |
| 28 | சிவகங்கை | 2.97 |
| 29 | திருநெல்வேலி | 2.28 |
| 30 | தூத்துக்குடி | 1.64 |
| 31 | கன்னியாகுமரி | 4.45 |
| | மொத்தம் | 84.21 |



### 2.9.4. மானியம்

**1. மாநில நிதிக் குழு மானியம்.**

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 56 விழுக்காடு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக அனுமதிக்கப்படுகிறது. கிராம ஊராட்சியை பொறுத்தவரை தெரு விளக்குகளுக்கான மின்கட்டணம் மற்றும் குடிநீர் வழங்குவதற்குண்டான மின்கட்டணம் ஆகியவற்றை செலுத்த குறைந்தபட்ச மானியமாக ரூ,7 இலட்சம் தனி கணக்கில் விடுவிக்கப்பட்டு செலவழிக்கப்படுகிறது. எஞ்சிய தொகை மாநில நிதிக்குழு பரிந்துரைத்துள்ள வழிகாட்டுதல்கள்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**2. மத்திய நிதிக் குழு மானியம்.**

மத்திய நிதிக் குழு மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கு தெரு விளக்கு, குடிதண்ணீர், சுகாதார பராமரிப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது.

**3. மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் வளர்ச்சி நிதி.**

**i) மாநில நிதிக் குழு மானியம்**

73–வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198–ன்படி,

தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ந்து மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:–

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்குட்பட்டு தமிழ்நாடு அரசு ஆணை எண். 350, நிதித்துறை நாள்: 23.04.1994 ன் மூலம் தமிழகத்தில் "முதல் மாநில நிதிக்குழு" ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதிக்குழு அமைத்த முதன்மை மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



## அட்டவணை 2.11

## மாநில நிதிக்குழு ஆணையங்கள்

| வ. எண். | விபரங்கள் | முதலாவது மாநில நிதிக் குழு ஆணையம் | இரண்டாவது மாநில நிதிக் குழு ஆணையம் | மூன்றாவது மாநில நிதிக் குழு ஆணையம் | நான்காவது மாநில நிதிக் குழு ஆணையம் |
|---|---|---|---|---|---|
| 1. | அமைக்கப்பட்ட நாள் | 23.04.1994 | 01.12.1999 | 01.12.2004 | 01.12.2009 |
| 2. | எந்த அரசாணையின் கீழ் அமைக்கப்பட்டது | அரசாணை நிலை எண்.350, நிதி (Res) துறை, நாள் 23.04.1994 (ம) அரசாணை நிலை எண்.161, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 06.09.1994 | அரசாணை நிலை எண்.518, நிதி (Res) துறை, நாள் 01.12.1999 | அரசாணை நிலை எண்.573, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2004 | அரசாணை நிலை எண்.549, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2009 |
| 3. | வரையறை நிர்ணயம் செய்வதற்கான அரசாணை | அரசாணை நிலை எண்.350, நிதி (Res) துறை, நாள் 23.04.1994 | அரசாணை நிலை எண்.103, நிதி (Res) துறை, நாள் 03.03.2000 | அரசாணை நிலை எண்.584, நிதி (FC.IV) துறை, நாள் 14.12.2004 | அரசாணை நிலை எண்.549, நிதி (FC.IV) துறை, நாள் 01.12.2009 |
| 4. | அறிக்கை அளிப்பதற்கான காலக் கெடு | 31.10.1995 | 31.10.2001 | 31.05.2006 (பின்னர் இக்காலக்கெடு 30.09.2006 வரை நீட்டிக்கப் பட்டது) | 31.05.2011 (பின்னர் இக்காலக்கெடு 30.09.2011 வரை நீட்டிக்கப் பட்டது) |
| 5. | அரசிற்கு அறிக்கை அளிக்கப்பட்ட நாள் | 29.11.1996 | 21.05.2001 | 30.09.2006 | 30.09.2011 |
| 6. | இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தான அறிக்கை சட்டமன்ற பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நாள் | 28.04.1997 | 08.05.2002 | 10.05.2007 | 14.05.2013 |

| வ. எண். | விபரங்கள் | முதலாவது மாநில நிதிக் குழு ஆணையம் | இரண்டாவது மாநில நிதிக் குழு ஆணையம் | மூன்றாவது மாநில நிதிக் குழு ஆணையம் | நான்காவது மாநில நிதிக் குழு ஆணையம் |
|---|---|---|---|---|---|
| 7. | பரிந்துரை காலம் | 4. 5.1997–98 முதல் 2001–02 | 2002–03 முதல் 2006–07 | 2007–08 முதல் 2011–12 | 2012–13 முதல் 2016–17 |
| 8. | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானிய விகிதாச்சாரம் | 55 சதவீதம் | 58 சதவீதம் | 58 சதவீதம் | 58 சதவீதம் |
| 9. | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கு (கிராம ஊராட்சி: வட்டார ஊராட்சி: மாவட்ட ஊராட்சி) | 45:45:10 | 47:45:8 | 60:32:8 | 60:32:8 |

### 2.9.5. ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017 முதல் 2022 வரையிலான காலத்திற்கான தனது பரிந்துரையை டிசம்பர் 2016ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்ற பேரவையில் 24.03.2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.



ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8: 37: 55 ஆகும்.

ஈ) 2017–18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக்குழு மானிய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| 1. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | : | 60% |
| 2. பரப்பளவு | : | 15% |
| 3. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4. தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2018–19ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு 5,901.88 கோடி ரூபாயினை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக்குழு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

### 2.9.6. மூலதன மானிய நிதி

ஏற்கனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித்துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும்.



நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.9.7. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை அதாவது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 4 விழுக்காடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு

காண சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

### 2.9.8. மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணைய குழு கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மானியமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015–16 முதல் 2019–20ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டிற்கான உரிய பங்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12**
**மத்திய நிதி ஆணைய மானிய விவரம்**
**(ரூபாய் கோடியில் )**

| மானியம் | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | மொத்தம் (2015-20) |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மானியம் | 947.65 | 1312.19 | 1516.12 | 1753.87 | 2369.86 | 7899.69 |
| செயலாக்க மானியம் | -- | 172.12 | 194.78 | 221.20 | 289.64 | 877.74 |
| **மொத்தம்** | **947.65** | **1484.31** | **1710.90** | **1975.07** | **2659.50** | **8777.43** |



#### i) 14வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

2015–16–ம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத்தொகையாக ரூ. 947.65 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதேபோன்று, 2016–17ஆம் ஆண்டிற்கு ரூ.1312.19 கோடி நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது. 2017–18 ஆம் ஆண்டிற்கு முதல் தவணைத் தொகையாக ரூ.758.06 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது. இத்தொகை மாநில அரசின் மானியத்தோடு இணைக்கப்பட்டு கிராம ஊராட்சிகளின் விருப்புரிமை பணிகளான அம்மா பூங்கா, உடற்பயிற்சி கூடம் போன்ற பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படுகிறது.

#### ii) 14–வது மத்திய நிதிக்குழுவின் செயலாக்க மானியம்

2016–17 ஆம் ஆண்டில் செயலாக்க மானியம் பெறுவதற்கு தமிழ்நாட்டில் 6,482 தகுதியுடைய கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. மத்திய அரசு விடுவித்த செயலாக்க மானியம் ரூ.172.12 கோடி முழுவதுமாக பல்வேறு

மாவட்டங்களை சார்ந்த தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

14–வது மத்திய நிதிக்குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள், செயல்பாட்டு அளவுகோல்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ஊக்கத்தொகையின் அளவு உள்ளிட்ட அனைத்தையும் மாநில அரசே தீர்மானித்திட ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

2017–18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகள், செயலாக்க மானியம் பெற, கீழ்க்கண்ட நிபந்தனைகளை மத்திய அரசு விதித்துள்ளது.

1. கிராம ஊராட்சிகள் செயலாக்க மானியம் பெறுவதற்குரிய ஆண்டிற்கு, முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கு முற்படாத ஆண்டின் தணிக்கை அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையில், கிராம ஊராட்சிகளின் சொந்த வரி வருவாய் அதிகரித்து இருக்க வேண்டும்.
3. செயலாக்க மானியம் பெறும் ஆண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் மத்திய அரசின் இணைய தளமான பிளான் பிளஸ்–ல் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. செயலாக்க மானியம் பெறும் ஆண்டிற்கு முந்தைய ஆண்டிற்குரிய, 14–வது நிதிக்குழு மானிய தொகை செலவின விவரத்தை பிரிவு வாரியாக மத்திய அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.



- மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை முழுமை செய்த ஊராட்சிகள் மட்டுமே மதிப்பீடு செய்ய பரிசீலிக்கப்படும்.
- மத்திய ஊராட்சி அமைச்சகம் தெரிவித்துள்ளபடி மதிப்பெண் அடிப்படையில் தகுதிபெற்றுள்ள கிராம ஊராட்சிகள் மதிப்பீடு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | சொந்த வருவாய் அதிகரித்தல் | 20 மதிப்பெண் |
| 2. | 14–வது நிதிக்குழு மானியத்திற்கு ஒப்பீடான சொந்த வருவாய் விழுக்காடு | 40 மதிப்பெண் |
| 3. | திறந்த வெளியில் மலம் கழித்தலே இல்லாத கிராம ஊராட்சி | 30 மதிப்பெண் |
| 4. | கிராம ஊராட்சியில் தடுப்பூசி திட்டம். | 10 மதிப்பெண் |

- 14–வது மத்திய நிதிக்குழு செயலாக்க மானிய தொகையை கிராம ஊராட்சிகள் பெறுவதற்குரிய வழிகாட்டி நெறிமுறை மற்றும் அளவுகோல் ஆகியன அரசு ஆணை எண். 147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 20.12.2017 ல் வெளியிடப்பட்டுள்ளது.
- மேலும், தமிழ் நாடு அரசு, அரசிதழ் (சிறப்பு) எண். 400, நாள்: 20.12.2017ல் இதனை அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

- 2017–18ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 8,046 கிராம ஊராட்சிகள் செயலாக்க மானியம் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளன.

**2.9.9. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிடத்தல்**

உள்ளூர் சுயாட்சி அமைப்பான கிராம ஊராட்சிகள் உள்ளூர் குடிமக்களுக்குத் தேவையான அடிப்படை சேவைகளை வழங்குவதோடு ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நலிவு நிலையினை சீர் செய்யும் பொறுப்புடையதுமாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும், 'ஆண்டு வளர்ச்சித் திட்டத்தினை' ஒவ்வொரு ஆண்டும் தயார் செய்திட வேண்டும்.

நியாயமான, வெளிப்படையான மற்றும் தரமான வகையில் நிதி மற்றும் பிற வளங்களை பயன்படுத்துவதை உறுதி செய்வது மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கிணங்க 14–வது நிதிக்குழு மானியத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள்:02.03.2016ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.



**2.9.10. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரியிலிருந்து பெறப்படும் வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, 2017–18ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.505.88 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.168.62 கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு, ரூ.112.98 கோடி கிராம ஊராட்சிகளுக்கும், ரூ. 55.64 கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.337.25 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.9.11. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலரை தலைவராகக் கொண்ட குழுவிற்கு 'ஒருங்கிணைந்த

ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப்பாலங்கள், இணைப்புச் சாலைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் ரூ.337.25 கோடி மதிப்பீட்டில் 2017–18 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.9.12. ஊராட்சி ஒன்றிய அலுவலக மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்

நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை இடித்து விட்டு, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாயின் திட்டக் கூறு நிதி மூலம் புதிய கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2011–12 முதல் 2016–17 வரையிலான காலத்தில் 88 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.175.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாயின் திட்டக் கூறு நிதி மூலம் 2017–18ம் நிதியாண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கென 5 ஒருங்கிணைந்த கட்டடங்கள் தேனி, விழுப்புரம், விருதுநகர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் கட்டுவதற்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 2.10. கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.10.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் நிலையான அலுவலக கட்டடங்கள் உள்ளன. இருப்பினும் நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் அவ்வப்போது கட்டப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி நிதி / மாநில அரசு நிதியைக் கொண்டு பழுது நீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம ஊராட்சி சேவை மையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பொது சேவை மைய பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

### 2.10.2. கணினி மற்றும் இணையதள வசதிகள்

மக்களாட்சியின் அடித்தள அலகான கிராம ஊராட்சிகள் தொழில் நுட்ப ரீதியிலும் வலுப்பெறும் வகையில் 12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் அச்சு இயந்திரம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.10.3. ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

**அட்டவணை 2.13**
**கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில்**
**ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்**

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு :–



**அட்டவணை 2.14**
**மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்**

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | **49** | 3,851.45 | 296.27 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | **38** | 2,859.84 | 204.27 |
| 3 | கடலூார் | 13 | 683 | **53** | 2,942.24 | 226.33 |
| 4 | விழுப்புரம் | 22 | 1,099 | **50** | 6,509.43 | 295.88 |
| 5 | வேலூார் | 20 | 743 | **37** | 4,022.30 | 201.12 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | **48** | 4,826.27 | 268.13 |
| 7 | சேலம் | 20 | 385 | **19** | 4561.41 | 228.07 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | **21** | 3,119.43 | 207.96 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | **31** | 4,407.43 | 550.93 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | **33** | 4,965.73 | 496.57 |
| 11 | ஈரோடு | 14 | 225 | **16** | 2,626.99 | 187.64 |
| 12 | திருப்பூர் | 13 | 265 | **20** | 4,545.50 | 349.65 |
| 13 | கோயம்புத்துார் | 12 | 228 | **19** | 2,534.24 | 211.19 |
| 14 | நீலகிரி | 4 | 35 | **9** | 1,170.39 | 292.60 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | **42** | 3,657.67 | 261.26 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | **39** | 2,400.31 | 218.21 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | **43** | 2,322.69 | 232.27 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | **29** | 4,028.00 | 287.71 |
| 19 | கரூர் | 8 | 157 | **20** | 2,656.25 | 332.03 |
| 20 | பெரம்பலூார் | 4 | 121 | **30** | 1,609.54 | 402.39 |
| 21 | அரியலூார் | 6 | 201 | **34** | 1,710.17 | 285.03 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | **38** | 4,433.78 | 341.06 |
| 23 | மதுரை | 13 | 420 | **32** | 3,183.18 | 244.86 |
| 24 | தேனி | 8 | 130 | **16** | 1,159.89 | 144.99 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | **22** | 4,401.34 | 314.38 |
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | **39** | 4,116.19 | 374.20 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | **41** | 3,282.08 | 298.37 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | **37** | 3,075.90 | 256.33 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | **22** | 4,283.06 | 225.42 |
| 30 | தூத்துக்குடி | 12 | 403 | **34** | 4,260.78 | 355.07 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | **11** | 626.14 | 69.57 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **33** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.
4. தொற்றுநோய் பரவாத வண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.



## 2.11. நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.
3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம் ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகிறன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 2.12. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.12.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த

ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ரூ.148.25 கோடி செலவில் 78 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2016–17 ஆம் ஆண்டு ரூ. 28.35 கோடி மதிப்பீட்டில் 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணி எடுக்கப்பட்டுள்ளன.

### 2.12.2. கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, அச்சு இயந்திரம் மற்றும் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.12.3. வட்டார ஊராட்சி சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.32.88 கோடி மதிப்பீட்டில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோல, 2014–15ம் ஆண்டில் ரூ.45.28 கோடி மதிப்பீட்டில் 150 வட்டார ஊராட்சி சேவை மையப் பணிகள் எடுக்கப்பட்டன.



### 2.12.4. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு

**அட்டவணை 2.15**
**மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1,100 | 1,240 | 2,340 |
| 2 | திருவள்ளூர் | 649 | 2,059 | 2,708 |
| 3 | கடலூர் | 254 | 2,304 | 2,558 |
| 4 | விழுப்புரம் | 1,257 | 3,551 | 4,808 |
| 5 | வேலூர் | 633 | 854 | 1,487 |
| 6 | திருவண்ணாமலை | 1,250 | 2,027 | 3,277 |
| 7 | சேலம் | 242 | 375 | 617 |
| 8 | நாமக்கல் | 152 | 422 | 574 |
| 9 | தர்மபுரி | 555 | 628 | 1,183 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,172 | 1,211 | 2,383 |
| 11 | ஈரோடு | 19 | 597 | 616 |
| 12 | திருப்பூர் | 10 | 1,434 | 1,444 |
| 13 | கோயம்புத்தூர் | 9 | 709 | 718 |
| 14 | நீலகிரி | 0 | 225 | 225 |
| 15 | தஞ்சாவூர் | 63 | 3,131 | 3,194 |
| 16 | நாகப்பட்டினம் | 0 | 3,979 | 3,979 |
| 17 | திருவாரூர் | 0 | 3,602 | 3,602 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,406 | 705 | 2,111 |
| 19 | கரூர் | 108 | 388 | 496 |
| 20 | அரியலூர் | 477 | 1,615 | 2,092 |
| 21 | பெரம்பலூர் | 138 | 753 | 891 |
| 22 | புதுக்கோட்டை | 3,824 | 1,795 | 5,619 |

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 23 | மதுரை | 1,029 | 3,233 | 4,262 |
| 24 | தேனி | 26 | 319 | 345 |
| 25 | திண்டுக்கல் | 1,577 | 1,000 | 2,577 |
| 26 | இராமநாதபுரம் | 818 | 2,499 | 3,317 |
| 27 | விருதுநகர் | 300 | 1,730 | 2,030 |
| 28 | சிவகங்கை | 2,776 | 4,156 | 6,932 |
| 29 | திருநெல்வேலி | 769 | 769 | 1,538 |
| 30 | தூத்துக்குடி | 397 | 1,148 | 1,545 |
| 31 | கன்னியாகுமரி | 599 | 300 | 899 |
| மொத்தம் | | 21,609 | 48,758 | 70,367 |

## 2.13. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்மந்தப்பட்ட துறைகளோடு



ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி, கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

### 2.13.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதி, குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.13.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.13.3 மாவட்ட திட்டக் குழு

மாவட்ட திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட



விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்ட திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதி வரையிலான விபரங்களைப் பெறுதல்.
2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். இவ்வாறு மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளை தவிர 5 வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதித் தொகுப்பில் 20 விழுக்காடு, மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். அவற்றில் 80% மூலதன மானிய நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது மாவட்ட திட்டக்குழுவின் பொறுப்பாகும். மூலதன மாநில நிதியில் 80 விழுக்காடு நிதி, மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்படும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.14. மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்த கட்டடங்கள் உள்ளன. 31 மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, அச்சு இயந்திரம் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.



## 2.15. விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறப்பான முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன.

### 2.15.1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத் தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2016–17 ஆம் ஆண்டில் கீழ்காணும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு விருதுகளுடன் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் பின்வருமாறு :

**விருது பெறும் மூன்றடுக்கு ஊராட்சிகள்**

**2016-17**

| வ.எண் | மாவட்ட ஊராட்சிக்கான விருது |
|---|---|
| 1 | நீலகிரி மாவட்டம் |

| வ.எண் | விருது பெறும் ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|
| 1 | கோயம்புத்தூர் – ஆனைமலை |
| 2 | திண்டுக்கல்– வேடசந்தூர் |
| **வ.எண்** | **விருது பெறும் கிராம ஊராட்சிகள்** |
| 1 | கோயம்புத்தூர்– தொண்டாமுத்தூர்– வெள்ளிமலைபட்டினம் |
| 2 | ஈரோடு– பவானி சாகர் – கவுளிபாளையம் |
| 3 | தேனி– தேனி –அம்பாசமுத்திரம் |
| 4 | நாமக்கல்– பள்ளிபாளையம் – குப்பண்டாம்பாளையம் |
| 5 | இராமநாதபுரம்– மண்டபம்– புதுமடம் |
| 6 | திருப்பூர்–குண்டடம்– சடையபாளையம் |

### 2.15.2. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2016–17–ம் ஆண்டிற்கான விருதிற்கு கீழ்காணும் கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருதுடன் ரொக்கப்பரிசும் வழங்கியுள்ளது.

| வ.எண் | 2016-17 ஆம் ஆண்டிற்கான ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது பெறும் கிராம ஊராட்சி |
|---|---|
| 1 | சேலம் – மகுடஞ்சாவடி – ஏ.புதுார் |



# 3. மாநில அரசு திட்டங்கள்

### 3.1. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

### திட்டத்தின் நோக்கம்

தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரியமின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், கிராமப்புறங்களில் வாழும் அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் சூரிய மின் சக்தியுடனும் கூடிய நிலையான வீடுகள் வழங்குவதற்காக, 2011 ஆ ம் ஆண்டில் தமிழக அரசால் துவக்கப்பட்டது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின் கீழ், 2011–12 முதல் 2015–16 வரை 5940 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டமானது கிராமப்புற ஏழை மக்கள் பயன் பெறும் வகையில், அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின்சக்தி விளக்கு அமைப்பதற்கும்) மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2016–17 முதல் அடுத்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 பசுமை வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டப்படும். கட்டுமான பணிகள் தவிர சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.



### இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 லட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் கட்டப்படும்.
- ஒவ்வொரு வீடும் வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள் படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் தலா ஒரு விளக்கு வீதம் பொருத்தப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது விருப்பத்திற்கு ஏற்ப, தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் மீட்டர் அளவீடுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.2.10 இலட்சம் ஆகும். இதில் ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின் சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் வழங்கப்படும்.
- பசுமை வீடுகள், பயனாளியின் தற்போது குடியிருப்பு அமைந்துள்ள மனையில் (ஏற்கெனவே உள்ள குடியிருப்பு அமைப்பினை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதிகளில் அமைந்துள்ள

பயனாளிக்கு சொந்தமான மனையில் கட்டப்பட வேண்டும்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு**

- ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படும். (90 x ரூ. 224 = ரூ.20160)
- மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.

**பயனாளிகளின் தகுதிகள்**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளி கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழையாகவும் இருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ



வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.

- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் எந்தவொரு வீடு கட்டும் திட்டத்திலும் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

**பயனாளிகளை தேர்வு செய்யும் முறை**

- ஒவ்வொரு கிராம ஊராட்சியில் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அப்போதைய புது வாழ்வு திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட நலிவுற்றவர்கள் பட்டியலில் (PIP) உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- தயார் செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களில் அவர்களின் நலிவுற்ற நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில், கிராம சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப்

பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட) குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட எச்.ஐ.வி./எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோர், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

- ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 பசுமை வீடுகளில், 29 விழுக்காடு அதாவது 5,800 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 200 வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 14,000 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) ஒதுக்கீடு செய்யப்படும்.
- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்படும்.



**முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் சாதனைகள்**

- 2016–17 மற்றும் 2017–18 ஆண்டுகளில் ரூ.840 கோடி மதிப்பீட்டில் 40,000 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.
- மேலும், 2018–19 ஆம் ஆண்டில் ரூ.420 கோடி மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட உள்ளன.

**ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில், அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்க, தூய்மையான சக்தியும் ஒரு இலக்காகும்.** சூரிய சக்தி நீடித்த நிலையான, புதுப்பிக்கத்தக்க, அனைத்து தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்கது என்பதால், இது மரபு சார்ந்த மின்சார ஆதாரங்களின் பயன்பாட்டினை குறைக்க வழிவகை செய்கிறது. பசுமை வீடுகளில் நிறுவப்படும் சூரியசக்தி மின் விளக்குகள், தூய்மையான சக்தியின் ஆதாரமாக இருப்பதால், ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறும், பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றை அடைய, சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் தொடர்ந்த செயலாக்கம் உதவி புரிகிறது.

## 3.2. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

*'இந்தியா தனது கிராமங்களில் வாழ்கிறது'*

– மகாத்மா காந்தி.

தேசத் தந்தையின் இந்த கூற்று, இன்றும் சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் தொலை நோக்கில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

56% மக்கட்தொகை, மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் தான் வாழ்கின்றனர். ஊரக மக்களின் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உறுதி செய்யவும், வறுமை, வேலையின்மை, போதிய உட்கட்டமைப்பு வசதியின்மை போன்ற தொடர் விளைவுகளைச் சமாளிப்பதிலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

புதுமையான ஊதிய மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு திட்டங்களின் வாயிலாக மேம்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வறுமையை ஒழிப்பதே ஊரக வளர்ச்சியின் தற்போதைய நோக்கமாகும்.

ஊரகச் சாலை இணைப்புகள் மற்றும் அவற்றின் தகுதி நிலையுமே ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எடுத்துக்காட்டுவதாகும். ஏற்கனவே உள்ள சாலைகளை பராமரிப்பதற்கும் புதிய சாலைகளை அமைப்பதற்கும், உகந்த



அளவில் நிதியினை வழங்குவதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள பரந்த ஊரகச் சாலைகள் தொகுப்பினை பராமரிப்பதே இந்த அரசின் முக்கிய இலக்காகும்.

### உட்கட்டமைப்பின் மூலம் நிலையான வளர்ச்சி அடைதல்

உட்கட்டமைப்பில் முதலீடு செய்வது நிலையான வளர்ச்சி அடைவதற்கான ஒரு முக்கிய படியாகும். அதன்மூலம் ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுள் ஒன்றான சமூக மேம்பாடும் நிறைவேறும். இக்குறிக்கோளை அடைவதற்காக தமிழ்நாடு அரசு, அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையிலான சாலைகள் மூலம் எல்லா குக்கிராமங்களையும் இணைக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஊரக சந்தைகளை அணுகும் வழி அனைத்தும் மேம்படும்.

### ஊரகச் சாலைத் தொகுப்பு மற்றும் இணையதள சாலைப் பதிவேடு

இணைய தள சாலைப் பதிவேடு என்பது, ஊராட்சி ஒன்றிய சாலை மற்றும் கிராம ஊராட்சி சாலைகளைப் பற்றிய முழுமையான குறிப்புகள் மற்றும் பிற விவரங்களான சாலைகளின் பெயர், மேற்பரப்பு, சாலையின் வகை, வடிவியல், சேவைகளின் இணைப்பு, முந்தைய மேம்பாடுகள் பற்றிய விவரம், தொழில் நுட்ப விவரங்களான மண்ணின் தன்மை, போக்குவரத்து மற்றும் பல விபரங்களை உள்ளடக்கியதாகும். சிறந்த சாலை மேலாண்மை அமைப்பினை உருவாக்குவதற்கு இந்த விவரங்கள் அடிப்படையாக

விளங்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகளின் தற்போதைய நிலை கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3.1**

**ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் கிராம ஊராட்சி சாலைகள்**

| வ. எண் | மேற்பரப்பு வகை | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | கிராம ஊராட்சி சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | தார்ச் சாலை | 29,488 | 69,396 | **98,884** |
| 2 | சிமெண்ட் சாலை | 313 | 2,960 | **3,273** |
| 3 | ஈரடுக்கு கப்பிசாலை | 301 | 2,748 | **3,049** |
| 4 | ஒரடுக்கு கப்பிசாலை | 408 | 6,624 | **7,032** |
| 5 | சரளைக்கல் சாலை | 236 | 5,596 | **5,832** |
| 6 | மண்சாலை | 1,624 | 29,752 | **31,376** |
| | **மொத்தம்** | **32,370** | **1,17,076** | **1,49,446** |

**ஊரகச் சாலைகள் மேம்பாட்டின் கூறுகள்**

ஊரகச் சாலைகள் மேம்பாடு பின் வரும் கூறுகளை உள்ளடக்கியதாகும்.

1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்
2. ஏற்கனவே உள்ள சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்



3. ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல்.

**கீழ்க்காணும் முன்னுரிமை அடிப்படையில் சாலைகள் தேர்வு செய்யப்படுகிறது**

- சாலை இணைப்பு இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வழங்குதல்
- பல்வேறு காரணிகளான நீளம், பயன்பாட்டு சேவைகள், அச்சாலை மூலம் இணைக்கப்பட்ட பிற குக்கிராமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சாலைகள் தேர்வு செய்யப்படுகின்றன.
- பேருந்து செல்லும் சாலைகள்

**தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்**

அடிப்படை முன்னுரிமை காரணிகளான இணைப்பின் தன்மை, இணைக்கப்படும் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பல காரணிகளைக் கருத்தில் கொண்டு, தார் இடப்படாத முக்கிய சாலைகளை, தார்ச் சாலைகளாக மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முன்னுரிமையாக உள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில், 25,400.52 கி.மீ. நீளமுள்ள தார் இடப்படாத தார்ச் சாலைகள் ரூ.5,640.53 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஏற்கனவே உள்ள சேதமடைந்த தார்ச்சாலைகளை வலுப்படுத்துதல்**

இந்த வகையின் கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் **24,601.47** கி.மீ. நீளமுள்ள சாலைகள் பல்வேறு பகுதிகளில் ரூ.**6,504.09** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல்**

இந்த வகையின் கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் **16,171.64** கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.**1,748.40** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, பல்வேறு திட்டங்களான நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.

**பாலங்கள் கட்டுதல்**

**2011–12**ம் ஆண்டு முதல் ஊரகச் சாலைகளை கடந்து செல்லும் நதிகள் மற்றும் நீரோடைகளில் உயர் மட்ட பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.



இதற்கு முன்னர், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் உள்ள பாலங்கள், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வந்தன. ஆனால் கடந்த 7 வருடங்களில், இத்துறை பல்வேறு திட்டங்களின் கீழ் பெரிய பாலங்கள் கட்டும் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. மேலும், **472** பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ரூ.**689.28** கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அனுமதி வழங்கியுள்ளது.

**அட்டவணை – 3.2**

**2011–12– ஆம் ஆண்டிலிருந்து எடுக்கப்பட்ட பாலங்களின் விவரம்**

| **ஆண்டு** | **பாலங்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| 2011–12 | 30 | 45.74 |
| 2012–13 | 27 | 31.22 |
| 2013–14 | 93 | 116.40 |
| 2014–15 | 113 | 155.85 |
| 2015–16 | 64 | 112.62 |
| 2016–17 | 80 | 139.23 |
| 2017–18 | 65 | 88.22 |
| **மொத்தம்** | **472** | **689.28** |

கடந்த 7 ஆண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்ட சாலை மற்றும் பாலப் பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு :

அட்டவணை – 3.3

**திட்ட வாரியாக கடந்த 7 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலை மற்றும் பாலங்களின் விவரம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம் | 9,723.97 | 1,487.54 |
| 2 | நபார்டு– ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 7,035.67 | 1,816.93 |
| 3 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 6,561.38 | 3,062.16 |
| 4 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 12,927.50 | 2,400.00 |
| 5 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 4,318.92 | 616.67 |
| 6 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 7 | சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி | 429.87 | 37.50 |
| 8 | மாநில நிதிக்குழு மானியம் | 1,552.46 | 304.30 |
| 9 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் | 1,313.99 | 433.12 |
| 10 | 13வது நிதிக்குழு மானியம் | 6,573.13 | 622.00 |
| 11 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத்திட்டம் | 3,649.19 | 381.07 |
| 12 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,468.00 | 231.23 |
| 13 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 882.16 | 139.74 |
| 14 | இதர திட்டங்கள் | 8,338.12 | 2,060.77 |
| | **மொத்தம்** | **66,173.64** | **13,893.02** |



## 3.3. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

கடந்த **2015–16** ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்து பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள, மாவட்டங்களின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்வதை நோக்கமாக கொண்டு, பல்வேறு சாலைத் திட்டங்களை இணைத்து, மாநில அரசின் நிதியில் ஆண்டிற்கு **ரூ.800 கோடி** ஒதுக்கீட்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது.

**அட்டவணை – 3.4**
**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2015–16 | 2,386 | 4,225 | 800 |
| 2 | 2016–17 | 2,563 | 4,650 | 800 |
| 3 | 2017–18 | 2,258 | 4,052 | 800 |
| **மொத்தம்** | | **7,207** | **12,927** | **2400** |

### 3.4. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதியினை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை மத்திய அரசு நிறுவியுள்ளது.

ஊரகப் பகுதிகளில், அனைத்து பருவ காலங்களிலும் சாலைகள் பயன்படும் வகையில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.



கடந்த 7 ஆண்டுகளில், 7,035.67 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 167 பாலங்கள் ரூ.1,816.93 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் கடந்த 7 ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு-

**அட்டவணை – 3.5**
**கடந்த 7 ஆண்டுகளில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு நிதியின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம்**
**(2011–12 முதல் 2017–18 வரை)**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2 | 2012-13 | 381 | 1,000.46 | 198.07 |
| 3 | 2013-14 | 185 | 367.63 | 100.00 |
| 4 | 2014-15 | 615 | 1,183.03 | 339.61 |
| 5 | 2015-16 | 232 | 369.92 | 160.20 |
| 6 | 2016-17 | 300 | 522.81 | 250.96 |
| 7 | 2017-18 | 549 | 993.17 | 316.32 |
| | **மொத்தம்** | **3220** | **7,035.67** | **1816.93** |

## தரக்கட்டுப்பாடு

பல்வேறு மாநில மற்றும் மத்தியஅரசின் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தினை உறுதி செய்ய அகநிலை தரக்கட்டுப்பாடு முறையைச் செயல்படுத்துவதோடு தனிப்பட்ட மூன்றாந்தரப்பு தரக்கட்டுப்பாட்டு தணிக்கையாளர்களையும் தரக்கட்டுப்பாடு பணியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஈடுபடுத்துகிறது. தரக்கட்டுப்பாட்டு அம்சங்களை மேம்படுத்தும் வகையில் ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம் திருச்சியில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், 15 மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வு கூடங்களை பலப்படுத்தும் வகையில் ரூ.65.45 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் குறித்த பயிற்சியினை களப் பொறியாளர்களுக்கு வழங்கும் வகையில் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்கள் ரூ.325 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை பணித்தளத்திலேயே மேற்கொள்ளும் வகையில் 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடங்களை இத்துறை அமைத்துள்ளது.

மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு



ஆய்வாளர்கள் (SQMs), பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். தேசிய மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களின் குறிப்புகளுக்கு ஏற்ப களத்தினில் திருத்தம் செய்தபின், நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கைகள் (ATRs) முறையாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

இத்துறையில் பணிபுரியும் களப் பொறியாளர்களின் திறனை மேம்படுத்திடவும், புதிய நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணையாக அவர்களை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் 150 உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, 440 பொறியாளர்களுக்கு இந்திய நெடுஞ்சாலைப் பொறியாளர் கழகம் (IAHE) புதுடெல்லி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனம், ஐதராபாத் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, குறிப்பாக வறட்சி மிகுந்த பகுதிகளில் சிறுபாசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் என 1,612 பொறியாளர்களுக்கு திருச்சிராப்பள்ளி, துவாக்குடியில்

அமைந்துள்ள தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தில் (IMTI), சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்தல் குறித்து சிறப்பு பயிற்சி, மொத்தம் ரூ.**59.38** இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது.

**கண்காணிப்புப் பொறியாளர் (தரக்கட்டுப்பாடு)**

தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் சிறப்பான செயல்பாட்டினை உறுதி செய்யும் வகையில் அரசாணை எண்.**114**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ**3**) துறை, நாள் **24.10.2017**–ல் கண்காணிப்புப் பொறியாளர் (தரக்கட்டுப்பாடு) பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் (R&D Initiatives)

நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய சாலைகளை குறைந்த செலவில் அமைப்பதற்காக, தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சியாக, தமிழக அரசு நிரூபிக்கப்பட்ட மற்றும் நவீன தொழில் நுட்பங்களின் மூலம் ஊரகச் சாலைகளைக் கட்டமைக்க உறுதி ஏற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட சாலைகளின் விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.



### அட்டவணை – 3.6

| வ. எண். | கட்டம் | புதிய தொழில்நுட்பத்தின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | வேலையின் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–I | தென்னை நார் ஜியோ டெக்ஸ்டைல் | 40.931 | 16.40 |
| 2 | | ஆர்.பி.ஐ.கிரேடு 81 | 50.148 | 29.15 |
| 3 | | பிளாஸ்டிக் கழிவு | 556.489 | 220.01 |
| 4 | | சிமெண்ட் மூலம் நிலைப்படுத்துதல் | 23.334 | 10.55 |
| 5 | | பேரியம் கார்பைடு கழிவு | 2.145 | 2.37 |
| 6 | | சிமெண்ட் கான்கிரீட் பிளாக் | 2.952 | 1.33 |
| 7 | | தார் குளிர்கலவை | 84.861 | 64.46 |
| 8 | | இரும்புக் கசடு | 1.74 | 0.72 |
| 9 | | உருளையைக் கொண்டு இறுக்கப்பட்ட கான்கிரீட் சாலை | 2.5 | 1.40 |
| 10 | | டெராசைம் | 32.796 | 20.54 |
| 11 | | நானோ தொழில்நுட்பம் | 72.681 | 69.00 |
| 12 | | சைகோசில் | 10.97 | 6.15 |
| | | **கூட்டுத் தொகை** | **881.547** | **442.08** |
| 1 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II | பிளாஸ்டிக் கழிவு | 64.472 | 22.13 |
| 2 | | ஆர்.பி.ஐ.கிரேடு 81 | 58.615 | 33.74 |
| 3 | | சிமெண்ட் மூலம் நிலைப்படுத்துதல் | 67.736 | 31.31 |
| 4 | | குளிர்கலவை | 86.372 | 68.48 |
| 5 | | இரும்புக் கசடு | 3.56 | 1.53 |
| 6 | | தாமிர கசடு | 20.20 | 8.21 |
| 7 | | டெராசைம் | 45.922 | 28.99 |
| 8 | | நானோ தொழில்நுட்பம் | 77.708 | 55.35 |
| 9 | | சணல் ஜியோ டெக்ஸ்டைல் | 2.895 | 1.72 |
| 10 | | நிலக்கரி சாம்பல் | 101.061 | 79.19 |
| | | **கூட்டுத் தொகை** | **528.541** | **330.65** |
| | | **மொத்த தொகை** | **1410.09** | **772.73** |

இந்த தொழில்நுட்ப முயற்சிகளைப் பின்பற்றுவதால் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது, அதன்மூலம் கட்டுமான செலவு, நேரம் குறைக்கப்படுவதோடு சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

## பிளாஸ்டிக் கழிவு சாலைகள்

அதிகரிக்கும் மக்கள் தொகை, வளர்ச்சிப் பணிகள், வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலைகள் போன்ற காரணங்களால் பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு அதிகரித்துக் கொண்டே உள்ளது.

பிளாஸ்டிக் கழிவு, திடக்கழிவுகளில் குறிப்பிடத்தக்க பகுதியாக இருந்து சுற்றுச்சூழலுக்குத் தீங்கினை ஏற்படுத்துகிறது. சுற்றுச்சூழலை பிளாஸ்டிக் கழிவு அபாயத்திலிருந்து பாதுகாப்பது அரசின் முன்னுரிமைகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு, பிளாஸ்டிக் கழிவு தொழில்நுட்பம் மூலம் சாலைகளை அமைப்பதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

அதனடிப்படையில் **2011–12** முதல் **1976.49** கோடி ரூபாய் மதிப்பில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டம், நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், ஊரகச் சாலைகள் மேம்பாடுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், தாய் மற்றும் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் **12,961.031** கி.மீ நீள சாலைகள் பிளாஸ்டிக் கழிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது.



## சொத்து உருவாக்கம் மற்றும் மேலாண்மை

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊராட்சி மன்ற அலுவலகங்கள், பள்ளிகள், சமுதாய கூடங்கள், சுய உதவி குழு கட்டடங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக வளாகங்கள் மற்றும் பொது சுகாதார கட்டடங்கள் போன்ற பல்வேறு வகையான கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. இந்திய தர குறியீடுகளை முறையாக பயன்படுத்தி இக்கட்டடங்களை வடிவமைப்பதன் மூலம் கட்டடத்தின் பாதுகாப்புத் தன்மை மற்றும் பயன்பாடு உறுதிப்படுத்தப்படுவதுடன், இத்துறையின் வடிவமைப்பு பிரிவின் மூலம் குறியீட்டு விதிகளுக்குட்பட்டு ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இவ்வடிவமைப்பு பிரிவு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்படும் பல்வேறு வகையான கட்டடங்களுக்கான **31** வெவ்வேறு வகையான வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான சொத்துக்களை மேலாண்மை செய்வதற்காக மாநில அளவிலான புவிசார் தகவல் அமைப்பு ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் நிறுவப்பட்டுள்ளது. தற்போது இத்துறை கிராம ஊராட்சி எல்லைகள், ஊராட்சி ஒன்றிய எல்லைகள், சாலைகள், நீர் நிலைகள், குக்கிராமங்கள் போன்ற புவிசார் தகவல்களை பராமரித்து வருகிறது. இதனுடன் மத்திய அரசின் திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டத்தில் உருவாக்கப்படும் சொத்துக்கள், தூய்மை பாரத இயக்கத்தின்கீழ், அமைக்கப்படும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) வீடுகள் போன்ற பணிகளின் பணி முன்னேற்ற நிலையைக் கண்காணிக்கவும், ஒரே பணிக்கு பலமுறை அனுமதி வழங்குவதைத் தடுக்கவும் மற்றும் சிறந்த முறையில் கண்காணிப்பதை உறுதி செய்வதற்கும் இப்பணிகள் யாவும் புவிசார் தகவல் அமைப்பின் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

தேசிய ஊரக சாலைகள் வளர்ச்சி முகமையின் அறிவுறுத்தலின்படி மாவட்ட எல்லைகள், ஊராட்சி ஒன்றிய எல்லைகள், மாவட்ட ஊரகச் சாலைகள் திட்டம், சாலைகள், வலைப்பின்னல் தொகுப்புச் சாலைகள், குக்கிராம எல்லைகள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிக்கான எல்லைகள், நீர்நிலைகள், வடிகால் பாதைகள் / வடிகால் அமைப்பு, வன எல்லைகள், ரயில் பாதைகள், பாலங்கள், விற்பனை மையங்கள், நிர்வாக தலைமையகங்கள், சாலைகளுக்கு பயன்படுத்தப்படும் கட்டுமான பொருட்களை இருப்பு வைக்குமிடம், கட்டட கழிவுப் பொருட்களுக்கான தளம், சுற்றுலாத் தலங்கள் மற்றும் இருப்புப் பாதை கடவு (Level crossing) ஆகிய 18 வகையான புவிசார் தகவல் அடுக்குகள் தயாரிக்கப்பட்டு, இத்தகவல்கள் அனைத்தும் www.pmgsy-grris.nic.in என்ற இணைய தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.



தற்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வரும் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கான சரியான தளத்தினை தேர்வு செய்வதற்காகவும் சரியான கட்டுமானத்திற்காகவும் புவிசார் தகவல் அறிவியல் முறையை பயன்படுத்துமாறு மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் உள்ள புவிசார் தகவல் அமைப்பு பிரிவை சேர்ந்த நான்கு உதவிப் பொறியாளர்களால் மேற்கண்ட பணிகள் கண்காணிக்கப்பட்டும், சரிபார்க்கப்பட்டும் வருகிறது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்பு கொள்கை**

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் நமது நாட்டின் ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கான போதிய அடிப்படை ஊரக உட்கட்டமைப்பினை உருவாக்கியுள்ளது. அனைத்து நேரங்களிலும் பயனுள்ள இணைப்பு சாலைகளை உறுதி செய்ய, ஊரகச் இணைப்புச் சாலைகளை முறையாக பராமரிப்பதும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதும் மிக முக்கியமானதாகும்.

எனவே, மாநிலத்தில் உள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை பராமரிக்க “தமிழ்நாடு ஊரக சாலைகள் பராமரிப்பு கொள்கை” உருவாக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

- ஊரக மக்கள் தங்களின் சமூக பொருளாதார வாய்ப்புகளை தேடிச் செல்வதற்கு ஏற்றவாறு அனைத்து காலங்களிலும் நிலைத்து நிற்கின்ற சாலை இணைப்புகளை உறுதி செய்தல்
- ஊரகச் சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்கான ஆற்றல்மிக்க அமைப்பினை உருவாக்குதல்
- ஊரகச் சாலைகள் அதன் நிலையான தன்மையில் இருக்க இயன்ற அளவு பராமரிப்பினை உறுதி செய்தல்.
- ஊரக சாலைகள் வருடம் முழுவதும் வாகனங்கள் இயக்கும் நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- வலைதள சாலை மேலாண்மை அமைப்பினை உருவாக்குதல் மற்றும் சாலை இணைப்புகளை தொடர்ந்து கண்காணித்தல்.

குறைந்த செலவில் நீண்ட காலம் நிலைக்ககூடிய சாலைகளை அமைக்கவும் ஊரகச் சாலைகளை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம், மாநில நிதிக்குழு மானியம், பொது நிதி மற்றும் பல திட்டங்கள் மூலமாக தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கையினை செயல்படுத்த உறுதி பூண்டுள்ளது.



## 3.5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதற்காகவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது இத்திட்டத்தின்கீழ், 2017–18 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2 கோடியிலிருந்து ரூ.2.50 கோடி ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடியில் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்திட வேண்டும். மீதமுள்ள வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையிலும், தடைசெய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இல்லாத பணிகளை இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யலாம்.

**வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்**

1. **பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.25 இலட்சம்:** 2018-19 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் உள்ளடங்கியதாகும்.

2. **பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட ரூ.15 இலட்சம்:** பள்ளி மாணவர்களுக்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு, 2018-19 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் **(Rerverse Osmosis (RO) System**) ஏற்படுத்திட குறைந்தபட்சம் ரூ.15 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.



3. **அங்கன்வாடி / சமையல் கூடம் / குழந்தை நேயக் கழிப்பறைகள் / அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி பணிகளுக்காக ரூ.20 இலட்சம்:** ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள், அங்கன்வாடி மையங்களுக்கு குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனபடுத்தும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

4. **குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 30 இலட்சம்:** – குறிப்பாக கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கனவே உள்ள திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.30 இலட்சத்தை ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்

**5. இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.60 இலட்சம்**

இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.60 இலட்சத்தில் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட பணிகளை தேர்வு செய்யலாம்.

அ). ஊரகப் பகுதிகளில்

1. ஊரகப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, வழங்கப்படும் மானியத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)
2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்).
4. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் / பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்
7. பாலங்கள் கட்டுதல்
8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்
9. வக்ஃப் வாரியத்தில் ( Wakf Board ) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்
10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்
11. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்
12. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

ஆ). **நகர்ப்புறப் பகுதிகளில்**

1. நகர்ப்புறப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் மற்றும் LED தெருவிளக்குகள் நிறுவுதல், (மத்திய அரசின் புதிய

மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மானியத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவைகளுக்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்
7. பாலங்கள் கட்டுதல்
8. சுடுகாடு / இடுகாடுகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்
9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்



10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்
11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்
12. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்
13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்
14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்
15. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

**வரையறுக்கப்படாத தொகையான ரூ.1 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்**

வரையறுக்கப்படாத கூறு நிதியின்கீழ், **"எதிர்மறை பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்"** தவிர பிற எந்தப் பணிகளையும் மேற்கொள்ளலாம். **அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம்.** பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**எதிர்மறை பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியல்**

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள்ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு**

(i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்,

(ii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமிண்ட் கான்க்ரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

2. தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

**விதிவிலக்கு**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)–ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.

3. அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு**

அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2008 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை



ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்

4. அனைத்து வகையான அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்

**விதிவிலக்கு**

(i) 2016–17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14–வது சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்து தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2018–19ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை எண். 95 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை நாள்– 18–8–2016ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்

(iii) அரசு ஆணை (1டி) எண். 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்

(v) உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடத்தில் (physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்



5. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்
7. மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்
13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)
14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

**2017–18ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்**

2017–18ம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 467.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை – 3.7**
**சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2017–18 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 1,276 |
| 2. | சாலைகள் | 1,543 |
| 3. | குடிநீர் வழங்கல் | 7,020 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 915 |
| 4. | இதர பணிகள் | 1,651 |
| **மொத்தம்** | | **12,405** |

இத்திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் ஆண்டிற்கு ரூ.587.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.6. தன்னிறைவுத் திட்டம்

சுயசார்பு மற்றும் சுயஉதவி மனப்பான்மையை ஊக்குவித்து, மக்கள் தங்களது உணரப்பட்ட தேவையை தங்களின் பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். ஊரகப் பகுதி மக்களிடையே சுயசார்பு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை



ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டத்தினை 2011–12 ஆம் ஆண்டு முதல் அரசு மீண்டும் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பொது மக்கள், தாங்கள் தேர்வு செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டும்.

**பணிகளைத் தேர்வு செய்தல்**

1. தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் பெருநிறுவனங்கள் அல்லது சமூக அமைப்புகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேவையான பணிகளை எடுத்துச் செய்யலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட பணிகள் குறித்த விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பங்களிப்பு தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் ஆகியவற்றை பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.
3. மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலனை செய்த பின்பு திட்டப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவரால் கோரப்பட வேண்டும். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு

வரைவோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

4. இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியினை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்பட வேண்டும்.
6. உருவாக்கப்படவுள்ள சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் மூலம் பராமரிக்க அவசியம் இருப்பின், சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் இசைவு பெறப்பட வேண்டும்.
7. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டு தொகைக்கு கூடுதலாக பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள், மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**பணிகளை நிறைவேற்றுதல்**

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற



ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகளை செயல்படுத்த வேண்டும் .

இத்திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான மக்கள் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. பொது மக்களின் பங்களிப்பு, மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் இருப்பின், பங்களித்தவர் அல்லது அவரின் முகமை அப்பணியை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

**2011–12 முதல் 2017–18 வரையிலான திட்ட செயல்பாடு**

2011–12 முதல் 2017–18 வரை சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க 11,796 சொத்துக்கள் ரூ.791.02 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**திட்ட செயலாக்கம் 2018–19**

இத்திட்டம் 2018–19 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**சுகாதாரம்**

### 3.7. "முழு சுகாதார தமிழகம்"

சமூக, பொருளாதார மற்றும் சுகாதார குறியீடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை மாற்றி தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் "முழு சுகாதார தமிழகம்" என்ற குறிக்கோளை விரைவாக அடைவதற்கு மாநில அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, அனைத்து பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கத்தினை களைவது என்பது அவசியமாகிறது. அதனடிப்படையில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடையவும், அதனை தொடர்ந்து தக்கவைத்து கொள்ளவும் அனைத்து பங்கேற்பாளர்களையும் மக்கள் இயக்கமாக ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளினால் "முழு சுகாதார தமிழகம்" என்கிற சாதனையை அடைவதன் மூலம் , ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான "அனைவருக்கும் சுகாதாரம்" என்ற முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், 2013ம் ஆண்டு சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, 52.68 இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறியபட்டது. மேற்படி



அடிப்படை கணக்கெடுப்பிற்குப்பின் 2013–14 முதல் 2017–18ம் ஆண்டு வரை சாதனை அளவாக 48.07 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டப்பட்டதன் மூலம் தமிழ்நாட்டின் சுகாதாரம் அடைந்த நிலை 45 விழுக்காட்டிலிருந்து 98 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதுவரை 23 மாவட்டங்கள் 100 விழுக்காடு சுகாதாரம் அடைந்த நிலையை எட்டியுள்ளது.

மத்திய அரசு, சுகாதாரம் அடைந்த நிலையை கணக்கிடும்போது, 2013ம் ஆண்டு எடுக்கப்பட்ட அடிப்படை கணக்கெடுப்பின்படி மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சக இணையதள ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின்படி (IMIS) கழிப்பறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி கணக்கெடுப்பிற்கு பின் புதியதாக கட்டப்பட்ட வீடுகள் சேர்க்கப்படுவதில்லை. மேலும், 2013ம் ஆண்டு அடிப்படைக் கணக்கெடுப்பின்படி பழுதடைந்த கழிப்பறைகளும் (Defunct toilets) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இந்த பழுதடைந்த கழிப்பறைகள், முந்தைய முழு சுகாதார திட்டத்தின் மூலம் 1999 முதல் 2012ம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூ.500 முதல் ரூ.3200 வரை குறைந்த மானியத்தில் கட்டப்பட்டவையாகும். மேற்படி குடும்பங்களுக்கு தற்போதுள்ள திட்டங்களின் கீழ் ஊக்கத் தொகை வழங்க வழிவகையில்லாததால், பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி, வங்கிக்கடன்

மற்றும் சுய உதவிக்குழுக்களின் உள் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியை திரட்டி, கழிப்பறைகள் கட்ட மாவட்ட நிர்வாகத்தினால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாநில அரசின் முன்முயற்சிகள்**

**(அ) சமுதாய மூலதனத்தை பயன்படுத்துதல்**

தமிழ்நாட்டின் மாபெரும் சமுதாய மூலதனம், மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகளே ஆகும். எனவே, தமிழகத்தில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை விரைவாக எய்தவும், அதனை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும், நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்தல்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் தீய பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சியிலும் மற்றும் மன வளர்ச்சியிலும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக



அமைந்துள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும். அதன் மூலம் மட்டுமே திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக்கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மூலம் திட்ட செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

**(இ) ஊக்குவிப்பாளர்களை ஈடுபடுத்துதல்**

சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு, சமூக அணுகுமுறை பயிற்சியும், உரிய ஊக்க நிதியும் வழங்கப்பட்டு, கிராம சமுதாயத்தை தூண்டுதல் (Triggering) மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடையவும், கழிப்பறை பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்து, அந்நிலையை தக்க வைக்கும் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிறப்பாக பணியாற்றும் ஊக்குவிப்பாளர்கள், மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் அடையாளம் காணப்பட்டு அவ்வப்போது விருதுகள் வழங்கப்படுகிறது.

**ஈ) திறன் வளர் பயிற்சி**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தள பொறுப்பாளர்கள், கள அளவில் பணியாற்றும் பிற துறை பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதரர்கள் ஆகியோருக்கு சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. களப் பணியாளர்களுக்கு கழிப்பறை கட்டுதல் குறித்த தொழில்நுட்ப பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**(உ) தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி**

கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பம் மிகவும் முக்கியமானதாகும். இதுவே செயல்படும் கழிப்பறையை உறுதி செய்வதுடன், அவை தொடர்ந்து பயன்படுத்தவும் வழிவகுக்கிறது. எனவே, மாநில அளவில் விரிவான மதிப்பீடு மற்றும் மாதிரி வடிவமைப்பு ஆகியவை கழிப்பறை கட்டுமானத்தில் உறுதியாக பின்பற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு அனைத்து தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் சார் பணியாளர் மற்றும் தொழில் நுட்பம் சாரா பணியாளர்களும் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். கழிப்பறை கட்டுமானம் குறித்து கட்டுமான பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



**(ஊ) கண்காணிப்பு**

சுகாதார திட்டத்தினை ஒட்டு மொத்தமாக கண்காணிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரை சார்ந்ததாகும். தரமான முறையில் கழிப்பறை கட்டுவதையும், செயல்படும் கழிப்பறையின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யவும், வட்டார மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் குறித்து பிரத்தியேகமாக ஆய்வு செய்ய மாநில தர கண்காணிப்பாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

**(எ) திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைதல்**

கிராம ஊராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைந்தவுடன் கிராம சபைக்கூட்டங்களில் சுயமாக அறிவிப்பு செய்கின்றன. மேற்படி அறிவிப்பின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளின்படி வட்டார மற்றும் மாவட்ட அளவில் சரிபார்த்த பின்பு, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அங்கீகரிப்பதுடன் உறுதியும் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் மொத்தமுள்ள **12,524** கிராம ஊராட்சிகளில், இதுவரை **10,025** கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற கிராம ஊராட்சிகளாக கிராம

சபைக் கூட்டத்தில் சுயமாக அறிவிப்பு செய்துள்ளன. அவ்வாறு திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற கிராம ஊராட்சிகளாக சுயமாக அறிவிக்கப்பட்டவுடன், வட்டார அளவிலான குழு 100 விழுக்காடு சரிபார்க்கப்பட்டதை மாவட்ட ஆட்சியர் உறுதிப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு உறுதிச் செய்யப்பட்டபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர், உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களை கொண்டு மாவட்ட அளவிலான குழுவை அமைத்து, ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வினாப்பட்டியலின்படி மாதிரி முறையில் (Random) சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும். மாவட்ட அளவிலான குழு, கிராம ஊராட்சியின் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை உறுதி செய்த பிறகு, மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சக ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை இணையதள அமைப்பில் (IMIS) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

### 3.8. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்

2001–2004ம் ஆண்டுகளில், மகளிருக்கான சுகாதார வளாகங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சுமார் 750 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டன. ஒவ்வொரு வளாகத்திலும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டன. குளிக்கவும், துணி துவைக்கவும், தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர் வசதி மற்றும் மின்



விளக்குகளுக்கு தேவையான மின் இணைப்பு கிராம ஊராட்சிகள் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளாகத்திலும் பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011–12ம் ஆண்டு ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதார வளாகங்களின் தொடர் பராமரிப்பினை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளும், தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களும் மேற்கொள்கின்றன.

### 3.9. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்தது போன்று, 2012–13ம் ஆண்டு ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்களுக்கு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் மூலம் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளள. ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில் 8 கழிப்பறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதில் முதியோர் / மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன கழிப்பறையும், இளம்சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை நேயக் கழிப்பறையும் (Baby Friendly Toilet), தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும்

இடம், தண்ணீர் தொட்டி, துணி துவைக்கும் மேடை ஆகியவை உள்ளடகியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவது போல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பு பயன்படுத்துவோர் குழுக்களால் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில், இதுவரை **1,199** ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளது.

### 3.10. தூய்மையான கிராம இயக்கம்

**2006** ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம், **2011–12** ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் பரிந்துரைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் **31** கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கிராம ஊராட்சிக்கு தலா ரூ.**5** இலட்சம் வீதம் ரொக்க பரிசு வழங்கப்படுகிறது.

### 3.11. ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன் கூடிய திடக்கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகள்



தமிழ்நாட்டிலுள்ள அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளிலும் ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன் மாநிலம் ஆகும்.

ஆரம்பத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டு வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை குழிகளில் அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டனர். தற்போது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வெளி ஆதாரம் (outsourcing) முறையில் **66,025** தூய்மைக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதற்கு மாநில அரசு ரூ.**206.04** கோடி நிதி ஒதுக்கியுள்ளது. திடக்கழிவுகள் அகற்றுவதற்கு முன்னர் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட தன்மை கொண்ட **2,000** கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.**110** கோடி மதிப்பீட்டில் இத்திட்ட செயலாக்கம் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக, **7,000** கிராம ஊராட்சிகளில் ரூ.**300** கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பின்னர், இத்திட்டம் மூன்றாம் கட்டமாக எஞ்சியுள்ள **3,524** கிராம ஊராட்சிகளில் ரூ.**200** கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளான பிரித்தல் மற்றும் சேமித்து

வைப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டிகள், மூன்று சக்கர மிதி வண்டிகள் / தள்ளுவண்டிகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் தங்களது கள ஆய்வின் போது திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுவதை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கின்றனர். கிராம ஊராட்சியில் உள்ள திடக்கழிவு மேலாண்மைத் திட்ட குழு, இத்திட்டத்தின் செயல்திறனை தொடர்ந்து கண்காணிக்கின்றது. கிராம சபை, இத்திட்டம் செயல்பாடு குறித்து சமூக தணிக்கை செய்கின்றது.

### 3.12. பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மை படுத்துதல்

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதில் சுகாதார வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரக பகுதிகளிலுள்ள **28,031** ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் **6,916** அரசு பள்ளிகளிலும் போதுமான அளவில், மாணவ மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அரசு பள்ளிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக வெளி ஆதாரம் (outsourcing) முறையில் ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களின் மாத ஊதியத்திற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை



வாங்குவதற்கும் அரசால் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து **2015–16** மற்றும் **2016–17** ஆகிய ஆண்டுகளில், ரூ.**84.46** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2017–18**ம் ஆண்டு, அரசு ரூ.**54.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஊரக பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், வகுப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை தூய்மைபடுத்துவதற்கும் உத்தரவிட்டுள்ளது.

வெளி ஆதாரம் மூலம் ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள் வழக்கமான சுத்தம் செய்யும் பணியோடு, கிராம ஊராட்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள மஸ்தூர்களை கொண்டு, **2** மாதத்திற்கு ஒரு முறை (அல்லது) காலாண்டு / அரையாண்டு / வருடாந்திர தேர்வு விடுமுறைக்கு பின்னர் மற்றும் பள்ளி திறக்கப்படும் முன்னர், பள்ளி வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை ஒட்டு மொத்தமாக சுத்தம் செய்யப்பட வேண்டும். ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியினை மேலே குறிப்பிடப்பட்ட முன்னரே தீர்மானிக்கப்பட்ட நாட்களை தவிர, தேவையின் அடிப்படையிலும் ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.13. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் பிரச்னைகளை தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முறையே ரூ.700 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், 2017–18 ஆம் ஆண்டு முதல், மேற்படி மாவட்டங்களில் தேவை மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிதியைப் பகிர்ந்தளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

2018–19 ஆம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



# 4.மத்திய அரசுத் திட்டங்கள்

## 4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் முதலில் 2.2.2006 அன்று, 6 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக அனைத்து 25 ஊரக மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே ‘‘வேலை செய்யும் உரிமையை’’ உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பும் கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு மற்றும் மிகப்பெரிய சமூக பாதுகாப்பு திட்டமாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் படி, இத்திட்டத்தின் முதன்மை குறிக்கோள்கள் பின்வருமாறு.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.



ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்படச் செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

1) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது.

2) அனைத்து ஊராட்சிகள் (ம) முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் (ம) பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

3) ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை. எனினும், கீழ்க்காணும் பணிகளுக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) கிணறுகள் தோண்டுவது மற்றும் ஆழப்படுத்தும் பணிகள்

(ஆ) சாலைகள் அமைப்பதற்கு ஜல்லிகளை சரியான விகிதத்தில் சேர்க்கும் பணிகள்

(இ) சிமிண்ட் கான்கிரீட் மேற்கூரை, தூண்கள், பீம்கள் போன்ற கட்டிடங்கள் கட்டுமான பணிகள்

(ஈ) உலர்சாம்பல் மற்றும் அழுத்தப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட மண்கற்கள் உற்பத்தி பணிகள்

(உ) காடு வளர்ப்பு பணிகளில் நிலத்தை துளைக்கும் இயந்திரங்கள்.

4) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வேலை முடிகிறது.

5) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர செயல் விளைவுடைய வேலை) ஊதியத்திற்கு சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

6) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியல் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு நடவடிக்கைகள் அல்லது சிறப்பு விதிகள் மண் வேலை



தொடர்பான பணிகளில் இருக்கவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) தடுப்பணைகள் கட்டும் பணிகளில் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள்செலவினக்கூறிற்கு பொதுப் பணித் துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

8) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக வேலை வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, கூடுதலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்பட்டுள்ளது.

10) அனைத்து ஊராட்சிகளிலும் மத்திய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழு கட்டாய பதிவேடுகளுடன் வேலை அடையாள அட்டைக்கான இருப்புப் பதிவேடும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

11) தமிழ்நாட்டில் 2006 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் பின்பற்றப்பட்ட அச்சடிக்கப்பட்ட தினசரி வருகைப்பதிவேடு பயன்படுத்தும் முறையானது மாற்றப்பட்டு 12,523 கிராம ஊராட்சிகளிலும் 2017–18

ஆம் ஆண்டிலிருந்து மின்னணு வருகைப்பதிவேடு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

12) கிராம சபையில் ''கிராம சமூகத் தணிக்கையாளர்கள்'' மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணிகள் சமூகத்தணிக்கை செய்யப்படும்.

13) 10 முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

(i). வேலை அட்டை (Job card) உரிமை

(ii). வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் பெறுதலுக்கான உரிமை

(iii). வேலை வாய்ப்பில்லா படி பெறுவதற்கான உரிமை

(iv). பணிகள் தொகுத்தல் மற்றும் திட்டமிட்டு தயார்செய்தல்

(v). 5 கி.மீ தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(vi). பணித்தளத்தில் அத்தியாவசிய வசதிகள் பெறுவதற்கான உரிமை

(vii). அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

(viii). பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

(ix). காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கியதற்கான இழப்பீடு

(x). குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.



14) திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், திறன்சாரா வேலையினை மேற்கொள்வதற்கான விருப்பத்தினை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ளலாம்.

15) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பயனாளியும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளனர். ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் வேலை அட்டை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2017–லிருந்து 5 வருடங்களுக்கு செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

16) 2017–18 ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட ஊதியம் 01.04.2017 லிருந்து ரூ.205 ஆகவும், 2018–19 ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட ஊதியம் 01.04.2018 லிருந்து ரூ.224 ஆகவும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

17) வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ

சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

18) பணித்தலத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

19) கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

20) 07.11.2016 முதல் தேசிய நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் செலுத்தப்படுகின்றது.

21) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் நீடித்த வளர்ச்சியினை ஏற்படுத்துதல் (Sustainable Development Goal)**

❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களின் மூலம், 'ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி'–யின் நான்கு இலக்குகளான பசியின்மை,



வறுமையின்மை, பருவநிலை மாற்றம் மற்றும் ஆண், பெண் சமத்துவம் போன்றவற்றை ஆண், பெண் மற்றும் வயதானதவர்களுக்கு அவர்களின் பணிகளின் அளவீடுகளுக்கு ஏற்ப சம ஊதியம் வழங்குவதன் மூலம் அடைய வழிவகை செய்கிறது. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதன் மூலம், நீடித்த வளர்ச்சியின் முதல் மற்றும் முக்கிய இலக்கான வறுமையினை போக்கி அதன் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரகப்பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதினால் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி பசியினை போக்க உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், வகைபாடு 'அ' பிரிவில் உள்ள பணிகளான தடுப்பணைகள் கட்டுதல், அகழிகள் வெட்டுதல், நில மேம்பாட்டுப் பணிகள், பாரம்பரிய நீராதாரங்களை புனரமைத்தல், பொது மற்றும் தனிநபர் நிலங்களில் மரங்கள் வளர்த்தல் போன்ற இயற்கை வள மேலாண்மை பணிகளை குறைந்தபட்சம் 65 சதவிகிதம் மேற்கொள்ளுவதன் மூலம் பசுமைமயமாக்கல், அதிக மழை பெறுதல் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தினை

உயர்த்துதல் ஆகியவற்றை அடைய வழிவகை செய்கிறது.

## இயற்கை வள மேம்பாட்டு பணிகள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் வழிமுறைகளை நீர்வள பாதுகாப்பில் அறிவியல் மூலம் பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் ஒரு அருஞ்செயலாகும். நீர்வள பாதுகாப்பின் வழிமுறைகளின் படி, ஓராண்டுக்கான திட்டம் / தொழிலாளர் வரவு செலவு திட்டத்தினை மாவட்ட நீர்ப்பாசனத்திட்டத்துடன் ஒருங்கிணைத்து **65** சதவிகித திட்ட செலவினம் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு செலவிடப்பட வேண்டும். **2018–19** ஆம் ஆண்டின் மத்திய அரசின் ஆண்டின் முக்கிய சுற்றறிக்கையின் (Annual Master Circular) படி அனுமதிக்கப்பட்ட **260** பணிகளில் **181** பணிகள் இயற்கை வள மேம்பாடு பணிகளாகும் மற்றும் **84** பணிகள் நீராதார பணிகளாகும்.

## அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசின் **2018–19** ஆம் ஆண்டு முக்கிய சுற்றறிக்கையின் படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:



## அட்டவணை – 4.1
## மத்திய அரசின் 2018–19 ஆம் ஆண்டு முக்கிய சுற்றறிக்கையின் படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வகைப்பாடு – அ | வகைப்பாடு – ஆ | வகைப்பாடு – இ | வகைப்பாடு – ஈ |
|---|---|---|---|
| இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள் | நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள் / தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல். | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் மற்றும் பொது உட்கட்டமைப்புகளை அமைத்தல் | ஊரக உட்கட்டமைப்பு வசதிகள் |
| • நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகளான நீர் தடுப்புச் சுவர், மண்அணைக்கட்டுகள், நிறுத்த அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரினை அதிகப்படுத்தலாம் மற்றும் மேம்படுத்தலாம். குடிநீர் ஆதார அமைப்பு உள்ளிட்ட நிலத்தடி நீரினை மேம்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.<br>• நீர் மேலாண்மைப் பணிகளான சம உயர அகழி வெட்டுதல், படியடுக்குத் தளமேடையமைத்தல், சமமட்ட வரப்பு அமைத்தல், வலைப்பின்னல் தடுப்பணை, வலைகம்பி அமைப்புகள் மற்றும் வசந்த கால மேம்பாடு போன்ற சிறப்பான பணிகள்.<br>• மிக நுண்ணிய மற்றும் சிறு நீர்ப்பாசனப் பணிகள் மற்றும் பாசனக் கால்வாய்கள் | • கிணறுகள் தோண்டுதல், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள் மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் நிலங்களை மேம்படுத்துதல்<br>• தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்.<br>• தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>• நீடித்து நிலைத்து வளர்கிற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற புல்களை வளர்த்து மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல்<br>• மூங்கில், இரப்பர் மற்றும் தென்னை மர வளர்ப்பு.<br>• மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல், கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்து கால்நடைகளை பாதுகாக்க | • வேளாண்மை உற்பத்தியினை பெருக்கும் வகையில் நாடப் மற்றும் மண்புழு போன்ற உயிர் உரங்கள் தயாரிக்கும் அலகுகள் அமைத்தல் மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சேமிப்பு கூடங்கள் அமைத்தல்.<br>• சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | • உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தல்<br>• சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>• விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள் மற்றும் சாலைகளை சீரமைத்தல்<br>• வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு பணிகள் உள்ளிட்ட பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>• கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்<br>• மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டிடங்கள் கட்டுதல்<br>• புயல் நிவாரணக் கூடங்கள்<br>• அங்கன்வாடி மையகட்டிடங்கள்<br>• கிராம சந்தை மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்<br>• சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டிட பணிகளுக்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| உருவாக்குதல் மற்றும் புனரமைத்தல் பராமரித்தல்.<br>• பாரம்பரிய நீராதாரங்களான பாசன குளங்கள், இதர நீர்நிலைகள் போன்றவற்றை தூர் வாருதல் மற்றும் படிக்கட்டு கிணறுகளை பாதுகாத்தல்<br>• காடு வளர்ப்பு, மரம் நடுதல் மற்றும் வனப்பகுதி, சாலையோரங்கள், கால்வாய் வரப்புகள், குளங்களின் ஓரங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் பத்தி எண்.5ல் இடம் பெற்றுள்ள குடும்பங்களுக்கு பயன்படுத்துதல் உரிமையுடன் பழ மரக் கன்றுகள் நடுதல் போன்ற தோட்ட வளர்ப்பு.<br>• நீடித்து நிலைத்து வளர்கின்ற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல்<br>• மூங்கில், இரப்பர், மற்றும் தென்னை மர வளர்ப்பு.<br>• பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.<br>• மீன் உலர் களம், சேமிப்பு வசதிகள், பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் போன்ற மீன்வளர்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளர்ப்புக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்<br>• உயிர் உரங்கள் (நாடப், மண்புழு உரங்கள்) தயாரித்தல்<br>• மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல்<br>• மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல் | | கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொண்டு தயாரித்தல்..<br>• இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல். |



## 2011–12 முதல் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

### தொலை உணர் தொடர்பு

- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனத்தில் (Institute of Remote Sensing) உள்ள தொழில் நுட்ப உதவியாளர்கள் மூலம் வள ஆதார வரைபடங்கள் (Resource Map) தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் வரைபடங்கள் பணிகளை திட்டமிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் உதவுகிறது.

### கால நிர்ணய வேலை அளவீடு

- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, திருத்திய ஊரக விலைப்புள்ளி பட்டியலின்படி, செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

### பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.

- விவசாயிகள் பயன்பெறும் வகையில், 8 டெல்டா மாவட்டங்கள், 23 டெல்டா அல்லாத பிற மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலுள்ள டெல்டா அல்லாத வட்டாரங்களில் 65,000 பண்ணைக் குட்டைப் பணிகள் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயகளின் நிலங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2017–18 ஆம் ஆண்டில் 10000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மரம் வளர்ப்பு பணிகள்**

- பசுமைப்பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களே மரம் வளர்ப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 385 வட்டாரங்களிலும் 'வட்டார நாற்றங்கால்' அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பெருமளவு மரம் நடவு (Massive Tree Plantation) மற்றும் வட்டார மரம்வளர்ப்பு பணிகள் வனத்துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம்



பசுமைமயமாக்குதல் அதிகரிக்கப்படுவதுடன், சுற்றுச் சூழல் மாசுபடுத்தும் காரணிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனிதன் மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்கள், அரசு மற்றும் பொது நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், இதர அரசு நிறுவனங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு தனியாக ஊரக விலைப் புள்ளி பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

**சேவை மையங்கள் கட்டுதல்**

- அனைத்து அரசுத்துறைகளின் சேவைகளையும் எளிதில் அடையும் பொருட்டு 12,469 கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் 270 வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வறட்சி தடுப்பு நடவடிக்கை**

- 2016–17 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் வறட்சி தடுப்பு நடவடிக்கை மற்றும் ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக 100 வேலை நாட்களிலிருந்து 150 வேலை நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

## 2017–18 ல் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள்

2017–18 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் புதிய முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. ஊரக இணைப்பு (Rural Connectivity)
2. உறிஞ்சுக் குழி (Soak Pit)
3. நாடப் உரக்குழி (NADEP Compost Pit)
4. ஊராட்சி அளவில் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்
5. பள்ளி கட்டடங்களுக்கு சுற்றுசுவர் / வெள்ள தடுப்புச்சுவர் கட்டுதல் (Compound Wall)
6. தடுப்பணை கட்டுதல் (Check Dams)
7. கல் வரப்பணை (Stone Bunding)
8. மீள்நிரப்புக் குழி (Recharge Pit)
9. மீள்நிரப்புத் தண்டு (Recharge Shaft)

### 1. ஊரக இணைப்பு (Rural Connectivity)

- தமிழகத்தில் நல்ல இணைப்புச் சாலை (Road network) அமைப்பினை வழங்கும் நோக்கில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பல்வேறு பகுதிகளையும் இணைத்து சுகாதார வசதி, கல்வி, வேலை மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சந்தை மையங்கள் போன்ற இதர சேவைகளை பெறத்தக்க வகையிலான இணைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஓரடுக்கு மெட்டல் சாலைகள் அமைக்கும் (WBM GR-II) பணிகள் ஊரக இணைப்புத் திட்டத்தின்கீழ்



எடுக்கப்பட்டுள்ளது. 2017–18 ஆம் நிதியாண்டில், 2500 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

### 2. உறிஞ்சுக் குழி (Soak Pit)

- ஊரக பகுதிகளில், கழிவு நீரை மிகச் சிறப்பாக மேலாண்மை செய்திடவும், குடியிருப்பு பகுதிகளில் திரவ கழிவுகள் புகுவதை தடுத்திடவும், கழிவு / சாக்கடை நீரை ஒவ்வொரு வீட்டிலும் மேலாண்மை செய்திடல் மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு வீட்டிலும் உறிஞ்சுக் குழி அமைப்பதினால், தெருக்களில் கழிவு நீர் ஓடுவது தடுக்கப்படுவதுடன் நீர் சேமிப்பு அமைப்பாகவும் செயல்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டில், 25,000 சமுதாய உறிஞ்சுக் குழிகள் மற்றும் 1,75,000 தனிநபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### 3. நாடப் உரக்குழி (NADEP Compost Pit)

- தனிநபர் விவசாயிகளுக்கு ‘நாடப்’ உரக்குழிகளை உருவாக்குதன் மூலம் உயிர் சிதைவுறும் வீட்டுக் கழிவு மற்றும் விவசாய கழிவுகளை உயிரி உரமாக திறம்பட மாற்றவும் அதன் மூலம் விவசாய உற்பத்தியினை அதிகரிக்கவும் செய்யலாம். இம்முறையில் உரம் தயாரிப்பது தனித்துவமானது. ஏனெனில் குறைந்த மனித சக்தியினைக் கொண்டு, குறிப்பிட்ட கால அளவிற்குள் கூடுதல் செலவின்றி நாடப் உரக்குழிகள் மூலம் நல்ல உரத்தினை

பெருமளவில் தயாரிக்க முடியும். **2017–18** ஆம் ஆண்டில் **50,000** எண்ணிக்கையிலான NADEP உரக்குழிகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**4. ஊராட்சி அளவில் சுயஉதவிக்குழுக்களின் கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்**

- **2017–18** ஆம் ஆண்டில் **1000** சுயஉதவிக் குழு கூட்டமைப்பு கட்டடங்கள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஊரக உட்கட்டமைப்பு கட்டங்கள் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களால் திறன் வளர்ப்பு மற்றும் வாழ்வாதார பயிற்சிகள், கூட்டங்கள் நடத்துவதற்கும் சுய உதவிக் குழுவின் தயாரிப்பு பொருட்கள் இடம்பெறும் பொருட்காட்சி மற்றும் கண்காட்சி நடத்துவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இக்கட்டங்கள் அறிவுசார் மையங்களாகவும் செயல்படும்.

**5. பள்ளி கட்டிடங்களுக்கு சுற்றுச்சுவர் / வெள்ள தடுப்புச்சுவர் கட்டுதல் (Compound Wall)**

- பள்ளி மாணவர்களை அறிமுகம் இல்லாத நபர்களிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்திடவும், பள்ளி சொத்துக்களை அழிவிலிருந்தும், வெள்ள அபாயங்களிலிருந்தும் பாதுகாத்திடவும், மாணவர்கள் கல்வி கற்று வளர்ந்திட பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும்



பொருட்டும், ஊரகப்பகுதிகளில் ஆரம்ப மற்றும் நடு நிலைப்பள்ளி கட்டடங்களுக்கு சுற்றுசுவர் / வெள்ளத் தடுப்புசுவர் அமைத்து தர உத்தேசிக்கப்பட்டு **2017–18** ஆம் ஆண்டில் **100** கி.மீ நீளத்திற்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு சுற்றுசுவர் / வெள்ளத் தடுப்புசுவர் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**6. தடுப்பணைகள் கட்டுதல் (Check Dam)**

- நிலத்தடி நீரினை அதிகரிக்கும் விதமாக அரசு பண்ணைக்குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகளை தூர் வாருதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. எனவே மழைநீரினை சேமிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் அளவை மீள்நிரப்புவதற்கும் **2017–18** ஆம் ஆண்டில் இயற்கை வள மேலாண்மை பணிகளின் ஒரு பகுதியாக **20000** தடுப்பணைகள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- பாறை, சிமெண்ட் கான்கீரிட் மற்றும் கம்பிவலைத் தடுப்பணை கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வாய்க்கால் வழியாக ஓடும் நீரோடைகளில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. வாய்க்கால், கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்படும் இந்த சிறிய

தடுப்பணைகளானது மழைக்காலங்களில் ஓடும் நீர் ஓட்டத்தை தடுத்து நிலத்தடி நீரினை அதிகரிக்கச் செய்யும்.

## 7. கல் வரப்பணை (Stone Bunding)

- மழைநீரை மண்ணில் தேக்கி வைக்கவும், மண் அரிப்பை குறைப்பதற்காகவும் கல் வரப்பு அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இவை மழைநீரை மண்ணில் ஆழமாக ஊடுருவி மண்ணில் பரப்பவும், மண் அரிப்பை கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. இப்பணிகள் மலை சார்ந்த மாவட்டங்கள் மற்றும் அதன் அருகில் உள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள் ஆகியோரின் விவசாயத்திற்கு பயனற்ற, பாறைகள் நிறைந்த தனிநபர்களின் நிலங்களில் கல் வரப்பு கட்டும் பணியினை மேற்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ், நிலத்தில் 0.03 மீட்டர் ஆழத்திற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களைக் கொண்டு நிலத்தை ஆழப்படுத்திய பின்னர் அதிலுள்ள 40 மி.மீ. கல் பாறைகளை எடுத்து பயனாளிகளின் நிலங்களின் கரையில் சேர்க்கப்பட்டு, கல்வரப்பனை உருவாக்கப்படும். தமிழகத்தில், 2017–18 ஆம் ஆண்டில் 250 கி.மீ நீளத்திற்கு கல் வரப்பணைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## 8. மீள்நிரப்புக்குழி (Recharge Pit)

- வறண்ட மற்றும் பாதி வறண்ட பகுதிகளிலும், நீர் மிகவும் குறைவாக உள்ள பகுதிகளிலும் நிலத்தடி நீர் சேமிப்பு மிகவும் அவசியமாகும். கன மழைக்காலங்களில் பெருமளவு நீர் சேகரிக்கப்படாமல் வாய்க்கால் வழியாக வழிந்தோடி ஆறுகள் மற்றும் கடலில் கலக்கிறது. இத்தகைய நீர் வெளியேற்றம் பெருமளவிலான நீர் நிலைகளை ஆவியாகச் செய்து நிலத்தடி நீர் வீணாக வழிவகுக்கிறது. ஆகவே, மீள் நிரப்புக்குழிகளானது குறைந்த செலவிலும் சிறந்த தொழிற்நுட்பத்துடனும் நிலத்தடி நீரினை சேமிக்க உதவுகிறது. 2017–18 ஆம் ஆண்டில் 9300 மீள் நிரப்புக்குழிகள் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## 9. மீள்நிரப்புத்தண்டு (Recharge Shaft)

- பொது இடங்களில் தற்பொழுது உபயோகத்திலுள்ள / கைவிடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் மீள் நிரப்புத்தண்டு / ஊடக வடிகட்டிகள் கட்டப்படுவதினால் நிலத்தடி நீரின் அளவு அதிகமாகிறது. நிலத்தடி நீர் அதிக ஆழத்தில் இருக்கும் இடங்களிலும் குறைந்த ஊடுருவுத் திறன் உள்ள படிநிலைகளைக் கொண்ட நீர் நிலை

மண்டலம் உள்ள இடங்களிலும் மீள் நிரப்புத்தண்டு நிலத்தடி நீரினை குறைந்த செலவில் மிகுந்ததிறனுடன் அதிகமாக்குகிறது. மழைநீர் கால்வாய் அல்லது மேற்பரப்பில் வழிந்தோடும் தண்ணீரை தற்போதுள்ள பயனற்ற ஆழ்குழாய் கிணறுகளில் செலுத்துவதின் மூலம் நிலத்தடி நீர் அதிகமாகிறது. 2017–18 ஆம் ஆண்டில் 6200 மீள் நிரப்புத்தண்டு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சாதனைகள்**

- 2017–18 ஆம் ஆண்டில் 23.89 கோடி மனிதசக்தி நாட்கள் 6352.74 கோடி ரூபாய் மொத்த செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதல்**

- 2017–18 ஆம் நிதியாண்டில் 15 நாட்களுக்குள் தரப்பட வேண்டிய ஊதியத் தொகையினை இதுவரை உரிய காலத்தில் வழங்கி 99.18 சதவிகித இலக்கினை எட்டியுள்ளதன் மூலம் தமிழ்நாடு நிதி விடுவிப்பு ஆணையை தயாரிப்பதிலும், குறித்த காலத்திற்குள் ஊதியத்தினை வழங்குவதிலும் தேசிய அளவில் முதல் மாநிலமாக திகழ்கிறது.

**சிறந்த ஆளுமை முயற்சிகள்**

மத்திய அரசின் அறிவுரைகளின்படி, சிறந்த ஆளுமை முயற்சிகள், வேலை அடையாள அட்டையினை



புதுப்பித்தல், ஊராட்சி அளவில் 7 பதிவேடுகள் பராமரித்தல், பணிக்கோப்பு மற்றும் மக்கள் தகவல் பலகை அமைத்தல் போன்றவற்றை மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின் படி சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ), அனைத்து உதவி இயக்குநர்கள் / மண்டல அலுவலர்கள் கொண்ட கண்காணிப்பு குழு ஏற்படுத்தப்பட்டு வட்டார அளவில், பின்வரும் சிறந்த ஆளுமை முயற்சிகள் கண்காணிக்கப்படுகின்றன.

- 7 பதிவேடுகள் 15 நாட்கள் / மாதம் / காலாண்டுகள் என சீரான முறையில் பராமரிக்கப்படுவதைக் கண்காணித்தல்.
- வேலை அடையாள அட்டையில் 15 நாட்கள் இடைவெளியில் பதிவுகள் மேற்கொள்ளுதல்
- நடைபெறும் அனைத்து வேலைகளுக்கும் மக்கள் தகவல் பலகைகளை நிறுவுதல் மற்றும் பாதுகாத்தல்.
- மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி அனைத்து பணிகளுக்கும் பணிக்கோப்பினை பராமரித்தல்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்து ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் / கிராம ஊராட்சி சேவை மையம் போன்ற ஏதேனும்

ஒரு அரசுக் கட்டடத்தின் சுவரில் தகவல், கல்வி, தொடர்பு முறையில் விளம்பரம் செய்தல்.

அதே நேரத்தில், மாநில அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு சிறந்த ஆளுமை முயற்சிகள் மாவட்ட அளவில் செயற்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

**ஊரக விலைப்புள்ளி பட்டியல் (Rural Schedule of Rates)**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட திருத்திய அட்டவணை–I பத்தி–7ன்படி தொழிலாளர்களுக்கான ஊதியம், அவர்கள் செய்கின்ற பணி அளவின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் மாநில வேலை உறுதி மன்றத்தினை கலந்தாலோசித்து பல்வேறு பணிகளுக்கு ஊரக விலைப் புள்ளி பட்டியல் நிர்ணயம் செய்து மாநில அரசு ஊதியம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு கால நிர்ணய வேலை அளவு (Time and Motion Study) நடத்தப்பட்டு, முதலில் ஊரக விலைப் புள்ளி பட்டியல் (அரசாணை (நிலை) எண்.110 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள். 05.11.2012 ல் வெளியிட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதல் மாநிலமாகும்.

மரக்கன்றுகள் நடும் பணிகளுக்கு தனியாக ஊரக விலை புள்ளி பட்டியல் அரசாணை (நிலை) எண்.104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை, நாள். 09.11.2012–ன்படி வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஊரக விலைப் புள்ளி பட்டியல் சிறப்பு வகை வேலைகளுடன் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை மற்ற மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, அட்டவணை –1 ல் மாற்று திறனாளிகளுக்கென தனியாக ஊரக விலை புள்ளி பட்டியலில் மத்திய அரசு திருத்தங்கள் மேற்கொண்டுள்ளது.

**வங்கிகள் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் / பொது நிதி மேலாண்மை மூலம் ஊதியம் வழங்குதல்**

வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013–14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்கப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியம் 1.04.2014 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் மட்டுமே ஈடுசெய்யப்பட்டு வருகிறது.

வங்கி பரிமாற்றம், ஒற்றைக் கணக்கு முறையில் மாற்றம் செய்யப்பட்டு 10.04.2015 முதல் பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகளுக்கு, 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத்தொகை வரவு வைக்கப்படுகிறது.

இதைப்போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் நிர்வாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) முறையை செயற்படுத்துதல்**

- மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ் நாட்டில் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- திருவள்ளூர் மாவட்டம் கருணாகரச்சேரி கிராம ஊராட்சியில் மின்னணு வருகைப் பதிவேடு 31.08.2017 அன்று சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 05.10.2017 முதல் மின்னணு வருகைப் பதிவேடு மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராம ஊராட்சி வீதம் செயல்படுத்தப்பட்டது.
- 02.11.2017ல் மாநிலத்தில் உள்ள 50 சதவிகித கிராம ஊராட்சிகளிலும், 16.11.2017 ல் மீதமுள்ள 50 சதவிகித கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது.



**தொழிலாளர்களின் வங்கி கணக்குகளுடன் ஆதார் எண்ணை இணைத்தல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கி கணக்கில் ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியத்தினை ஈடு செய்யும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகிறது. ஆதார் எண்களை இணைப்பதன் மூலம் மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தகவல் தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு ஊதிய மாற்றம் செய்யப்படுவதை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குகிறது.

இதுவரை மொத்தம் உள்ள 84.68 இலட்சம் தொழிலாளர்களில், 84.21 இலட்சம் (99%) தொழிலாளர்களின் ஆதார் எண்கள் இணைக்கப்பட்டு, ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியம் 70.56 இலட்சம் (83%) பயனாளிகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சொத்துக்களுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging) :**

புவிசார் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் புவிக்குறியிடுதல் **(Geo tagging)**

குறிக்கோளானது, புவிசார் தகவல் மைய தீர்வை உருவாக்கி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துகளின் தகவல்களை காட்சிபடுத்தி ஆராய்வதேயாகும். இதன் மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organisation) ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Corporation) மூலம் புவன் என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் NREGASoft என்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை புவன் மென்பொருள் மூலம் பயன்படுத்தப்படுகிறது. NREGASoft மற்றும் புவன் மென்பொருளின் தனித்துவ திறமைகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு ஜியோ நரேகா (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதுவரை, 16,98,886 சொத்துக்கள் பகுதி 1, 2 மற்றும் 3 மூலம் புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.



**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் மாநிலம், மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகள் பெற்ற தேசிய அளவிலான விருதுகள்:**

தமிழ்நாட்டிற்கு 2 முறை சிறந்த மாநிலத்திற்கான விருதுகளும், கண்காட்சிக்கான 1 தேசிய விருதும், திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக 7 மாவட்டங்களுக்கு சிறந்த விருதுகளும் மற்றும் 3 கிராம ஊராட்சிகளுக்கு சிறந்த விருதுகளும் மத்திய அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

**2018–19 ஆம் ஆண்டின் தொழிலாளர் வரவு செலவு திட்ட செயலாக்க முயற்சிகள்**

தொழிலாளர் வரவு செலவு திட்டமானது ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ் மட்ட அணுகு நிலையிலிருந்து கிராம சபையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 2018–19 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம் தொகுதி வாரியாக பகுத்தாய்வு செய்யப்பட்டு 2.10.2017 அன்று நடைபெற்ற கிராம சபை மற்றும் 13.10.2017 அன்று நடைபெற்ற சிறப்பு கிராம சபைகளின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் 2018–19 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 27.02.2018 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மத்திய அதிகாரக் குழுக் கூட்டத்தில் 25 கோடி மனித சக்தி நாட்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதில் 65 சதவிகித செலவினம் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கு செலவிடப்பட வேண்டும். வேளாண்மைப் பணிகளுக்குத் தேவையான நீர் வள பாதுகாப்பு மற்றும் நில மேம்பாடு செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இயற்கை வள மேலாண்மை பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**சமூக தணிக்கை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் நோக்கமானது ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற முனைப்புடன் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் 18 வயது நிரம்பிய உறுப்பினர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டும் 100 நாட்களுக்கு குறையாமல் பகுதி திறன் சார்ந்த மற்றும் திறன் சாரா உடலுழைப்பினை அடிப்படையாகக் கொண்டு வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான நிலையான சொத்துக்கள் உருவாக்கப்படுதலாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை, வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மக்களால் நடத்தப்படுகின்றது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக



ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சி திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**நோக்கம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதலின் படி, ஊராட்சிகளிலுள்ள கிராம சபைகளால் சமூக தணிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் வழிவகை செய்கிறது.

**நிர்வாகம்**

1. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 27.07.2012–ன் படி, தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கூடுதல் இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் இதற்கு இயக்குநராக

பணியமர்த்தப்பட்டுள்ளார். மேலும், **இயக்குநரது பணிகளில் உதவும் வகையில்** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த இரு இணை இயக்குநர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநருடன் இதர பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

2. அரசாணை (நிலை) எண்.125 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.12.2012ன் படி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கி துணை விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

**மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பணியாளர்கள்**

| | |
|---|---|
| மாவட்ட வள அலுவலர்கள் : 31 | • சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் சமூக தணிக்கை நிகழ்வுகளை கண்காணித்தல்.<br>• சமூக தணிக்கையின் முடிவுகள் மற்றும் அதன் மீதான சிறப்பு அறிக்கையை மாநில சமூக தணிக்கை சங்க இயக்குநருக்கு அனுப்புதல். |
| உதவி பணியாளர்கள் : 31 | • மாவட்ட வள அலுவலகத்தில் தினசரி அலுவலக நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.<br>• சமூக தணிக்கை தொடர்பான பதிவேடுகள்/கோப்புகள் பராமரித்தல். |



| | |
|---|---|
| வட்டார வள அலுவலர்கள் : 770 | • வருடாந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை பணியினை ஒருங்கிணைத்தல்.<br>• சமூக தணிக்கையின் முடிவுகளை கிராம சபையின் முன்வைத்தல். |

**திட்ட செயலாக்கப்பகுதி**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் திட்ட செயலாக்கப்பகுதியானது அனைத்து ஊரகப்பகுதிகளை உள்ளடக்கிய 31 மாவட்டங்கள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 கிராம ஊராட்சிகள் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ''பாலமோர்'' என்ற கிராம ஊராட்சியைத் தவிர மற்ற அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கைப் பணி செயல்படுத்தப்படுகிறது. பாலமோர் கிராம ஊராட்சியானது முழுவதும் இரப்பர் தோட்டங்களால் சூழப்பட்டுள்ளதால் இக்கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

**கிராம ஊராட்சி வள அலுவலர்கள்**

சமூக தணிக்கைப் பணியில் கிராம ஊராட்சி வள அலுவலர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் குறைந்தபட்சம் 25 நாட்கள் பணிபுரிந்த 8ஆம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்ற திட்டப்பயனாளிகள், 18 வயது நிறைவு பெற்றோர் தேர்வு செய்யப்பட்டு சமூக தணிக்கை

தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு கிராம ஊராட்சி வள அலுவலர்களாக செயல்படுகின்றனர்.

மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களிலிருந்து கிராம ஊராட்சிகளின் வள அலுவலர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சி வள அலுவலர்களுக்கு மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கையேட்டின் அடிப்படையில் 4 நாட்கள் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒரு கிராம ஊராட்சிக்கு சமூக தணிக்கை பணி மேற்கொள்ள சராசரியாக 5 கிராம ஊராட்சி வள அலுவலர்கள் வீதம் 12,523 கிராம ஊராட்சிகளுக்கு 62,615 கிராம ஊராட்சி வள அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**சமூக தணிக்கை நிகழ்வுகள்**

சமூக தணிக்கை நிகழ்வுகளானது பின்வருமாறு 5 நாட்களுக்கு மேற்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| நாள் 1: | (அ) வட்டார அளவிலான திட்ட செயலாக்கத்தினர், கிராம ஊராட்சி அளவில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு சமூக தணிக்கை பணி சிறப்பாக நடைபெறுவதற்காக கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்புக் கூட்டமானது நடத்துதல்.<br>(ஆ) கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பதிவேடுகள்/ஆவணங்களை ஒப்பீட்டுச் சரிபார்த்தல்.<br>(இ) சமூகத் தணிக்கை குறித்து, குடியிருப்பு வாரியாக மக்களுக்கு விழிப்புணர்வு கூட்டம் மாலையில் நடத்துதல். |
| நாள் 2: | வசிப்பிடம் வாரியாக வேலை அட்டையினை வைத்திருக்கும் தொழிலாளர்களைத் தனித்தனியாகச் சந்தித்து வேலை அட்டையினை ஆவணங்களுடன் ஒப்பீடு செய்த பின்னர் பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று கலந்துரையாடல் பணி மேற்கொள்ளுதல். |
| நாள் 3: | கள ஆய்வு மற்றும் பணிகளை கள அளவீடு மேற்கொள்ளுதல். |
| நாள் 4: | சமூகத் தணிக்கை அறிக்கை தயார் செய்தல். |
| நாள் 5: | சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துதல். |



**திறன் வளர்த்தல்**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம் மற்றும் நடைமுறை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை இத்துறை சார்ந்த அனைத்து அலுவலர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், அனைத்து நிலை கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு வழங்கியுள்ளது. 2013–14 ஆம் நிதியாண்டில் திட்டத்தின் பங்குதாரர்கள் 24,874 நபர்களுக்கும், 2014–15 ஆம் நிதியாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் 92,109 நபர்களுக்கும், ஆக மொத்தம் 1,16,983 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

2017–18 ஆம் நிதியாண்டில் 21,131 கிராம ஊராட்சி வள அலுவலர்களுக்கான 4 நாட்கள் சமூக தணிக்கை தொடர்பான உறைவிடப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பயிற்சி கையேடுகள்:**

சமூக தணிக்கை சங்கத்தின் மூலம் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி கையேடுகள் இரண்டு, கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சி கையேடு ஒன்று, கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான பயிற்சி கையேடு ஒன்று, வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி கையேடு ஒன்று, கிராம ஊராட்சி வள அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு ஒன்று மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு

ஒன்று என ஏழு வகையிலான பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டன. மேலும் சமூக தணிக்கை குறித்த விழிப்புணர்வை பங்குதாரர்கள்/பயனாளிகளுக்கு ஏற்படுத்தும் பொருட்டு துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டது.

**சமூக தணிக்கை செயல்பாடுகள்**

2013–14 ஆம் நிதியாண்டில் 127 கிராம ஊராட்சிகளில் மாதிரி சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டன. 2014–15 ஆம் நிதியாண்டில் புதியதாக தேர்வு செய்யப்பட்ட வள அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக 1,140 கிராம ஊராட்சிகளில் மாதிரி சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டன. 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆகிய நிதியாண்டுகளில் 12,523 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018–19 ஆம் நிதியாண்டில் 12,523 கிராம ஊராட்சிகளில் 22 சுற்றுகளில் சமூக தணிக்கை மேற்கொள்ள விரிவான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால் சமூக தணிக்கையானது திட்டப்பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராமசபையில் நடைபெறும் விவாதமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை



உறுதித் திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால் இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பயன்களை அறிந்து கொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் கிராம சபை அமைகிறது. இச்சிறப்பு கிராம சபையிலேயே சமூக தணிக்கையில் கண்டறியப்படும் பத்திகள் பல உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

## 4.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

**திட்டத்தின் நோக்கம்**

மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய ஊரக குடியிருப்பு திட்டமான பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) நவம்பர் 20, 2016–ல் துவக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகளில் மற்றும் மிகப்பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடு கட்டிக் கொடுப்பதே பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கமாகும்.

**திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.72,000 மற்றும் மாநில அரசு ரூ.48,000).

- ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1,20,000 ஆக இருப்பினும், தமிழக அரசு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மாநில நிதியிலிருந்து கூடுதலாக ரூ.50,000 வழங்குவதால், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) த்தின் கீழ் ஒரு வீட்டிற்கான மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும்.
- ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தெகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படும் (90 X ரூ.224= ரூ.20160)
- மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.
- பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இரு பிரிவிலும் 3% மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- பயனாளிகளுக்கு 4 தவணைகளில் தொகை வழங்கப்படுகிறது. பொது நிதி மேலாண்மை முறை



(PFMS) மூலம் நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு தொகை வரவு வைக்கப்படுகிறது.

- பயனாளிகளுக்கு அம்மா சிமெண்ட் ஒரு மூட்டை ரூ.190–க்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது

**பயனாளிகளுக்குரிய தகுதிகள்**

- சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011–ன் அடிப்படையில் கிராம சபை மூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.
- பயனாளிகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்துதல் ஆகியன சேர்த்தல் மற்றும் நீக்கல் காரணிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
- 269 சதுர அடி கொண்ட வீடு கட்டுவதற்கு தேவையான அளவு நிலம் பயனாளிக்கு சொந்தமானதாக இருக்க வேண்டும்.
- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.
- பயனாளி அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களின் கீழ் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.
- பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்திற்காக (ஊரகம்) பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும் / நீக்கவும் மற்றும் தீர்வு காணவும் குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டு குழு ஏற்படுத்தப்பட்டு மாவட்ட அளவில் செயல்படுகிறது.

**பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) சாதனைகள்**

**2016–17** மற்றும் **2017–18** ஆம் ஆண்டுகளில் முறையே **1,76,338** வீடுகள் மற்றும் **1,30,214** வீடுகள் ரூ.**3004.21** கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் மொத்தம் ரூ.**5211.38** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

## 4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

**1993**ம் ஆண்டு மத்திய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிதியை **2011–12** ஆம் ஆண்டு முதல் ரூ.**2** கோடியில் இருந்து ரூ.**5** கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற



அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

**2017–18** ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. **290** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2**
**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்**
**2017–18 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ. எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 500 |
| 2. | சாலைகள் | 672 |
| 3. | குடிநீர் வழங்கல் | 330 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 748 |
| 5. | இதர பணிகள் | 923 |
| **மொத்தம்** | | **3173** |

## 4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், **500–**க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத் தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக **2000** ஆம்

ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. **2015–16–ம்** ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் **60%** மத்திய அரசு நிதி மற்றும் **40%** மாநில அரசு நிதி என்ற நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் I**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி I முதல் X வரை, **15,366** கி.மீ. நீளமுள்ள **7,289** கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள் , இதர மாவட்டச் சாலைகள் மற்றும் **72** பாலங்கள் ஆகியவை ரூ.**4,257** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3**

| வ.எண் | பகுதி | வருடம் | எடுத்துக் கொள்ளப்பட்டவை | | |
|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| 1 | I | 2000-01 | 862 | 1442.12 | 152.91 |
| 2 | II | 2001-02 | 444 | 795.09 | 114.27 |
| 3 | III | 2003-04 | 491 | 1096.40 | 159.07 |
| 4 | IV | 2004-05 | 393 | 778.31 | 111.35 |
| 5 | V | 2005-06 | 365 | 799.59 | 170.84 |
| 6 | VI | 2006-07 | 810 | 2049.02 | 459.82 |
| 7 | VII | 2007-08 | 1581 | 3010.32 | 853.72 |
| 8 | VIII | 2012-13 | 1339 | 3090.90 | 1126.24 |
| 9 | IX | 2014-15 | 401 | 940.47 | 352.97 |
| Total | | | 6686 | 14002.22 | 3501.19 |

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி I முதல் IX வரை, **2000–ம்** ஆண்டிலிருந்து **2015–ம்** ஆண்டு வரை



**6,686** சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி X-ன் கீழ் **603** பணிகள் எடுக்கப்பட்டு **547** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்லாது, இந்த சாலைகளின் **5** வருட தொடர் பராமரிப்பிற்கு ரூ.**240** கோடி நிதியினை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் **I–ன்** வெற்றிகரமான செயலாக்கத்திற்குப் பின், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II–ஐ செயல்படுத்த தமிழ்நாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது. வளர்ச்சி வாய்ப்பு மிக்க மையங்களான ஊரக சந்தை மற்றும் ஊரக மையங்களை இணைக்கும் முக்கிய ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொள்வதே பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II–ன் நோக்கமாகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் –II–ன் கீழ், **2659** கி.மீ. நீளமுள்ள **769** ஊரகச் சாலைகளை மேம்பாடு செய்வதற்கும் மற்றும் **25** பாலங்கள் கட்டும் பணிகளுக்கும் ரூ.**1244.35** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கான ரூ.**540.33** கோடியும் அடங்கும். இப்பணிகள் யாவும் துவங்கப்பட்டு மார்ச் **2019–ல்** அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் –II பகுதி I (2018-19) கீழ், 286.84 கி.மீ. நீளமுள்ள 94 ஊரகச் சாலைகள் மற்றும் 10 பாலங்கள் ரூ.192.80 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் செயல்திறன் ஊக்கத் தொகை**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தை 2016–17ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசு ரூ.55.58 கோடி நிதியை 5 ஆண்டு பராமரிப்பு முடிந்த, மாநிலத்தின் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட ஊரகச் சாலைகளின் கால முறை பராமரிப்பு பணிகளுக்காக விடுவித்துள்ளது. இப்பணிகளுக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.37.05 கோடிக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் ரூ.92.63 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் துவங்கப்படும்.

2017–18 ஆம் ஆண்டிற்கு ஊக்கத் தொகையாக ரூ.45.32 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

**இணைப்புசாலை வசதி இல்லாத குக்கிராமங்களின் நிலை**

தமிழ்நாட்டில் 1.4.2000–ன்படி 500 மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள இணைப்புசாலை வசதி இல்லாத குக்கிராமங்களின் எண்ணிக்கை 2402 என கண்டறியப்பட்டது. இவற்றில் வனத்துறை நிலம் மற்றும்



பட்டா நில பிரச்சனை உள்ள 16 குக்கிராமங்கள் நீங்கலாக மீதமுள்ள 2,386 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் மற்றும் இதர மாநில திட்டங்களின் மூலம் கடந்த 2000 ஆண்டு முதல் இணைப்புசாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 2018–19ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், “மாநில அரசு அனைத்து ஊரக கிராமங்களுக்கும் சாலை இணைப்பு வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகள் வழங்க முடிவு எடுத்துள்ளது. மேலும் அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகளின் மூலம் இணைக்கப்படாத 500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 16 பழங்குடி குக்கிராமங்களுக்கும் சாலை இணைப்பு வசதி வழங்கப்படும்”.

இவற்றில், மாநில திட்டத்தின் கீழ் இணைப்புசாலை வசதி வழங்கப்பட்ட 4 குக்கிராமங்கள் நீங்கலாக இணைப்புச் சாலை வசதி இல்லாத 12 குக்கிராமங்கள் எஞ்சியுள்ளன.

எனவே, 2018–19ம் ஆண்டு, 12 இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களை மாநில திட்டத்தில் இணைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வனத்துறை நிலத்தில் சாலை வசதி அமைப்பதற்கான அனுமதியும் மற்றும் பட்டா நில பிரச்சனைக்கு தீர்வு காணவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.5. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

1999 முதல் 2012 வரை செயல்படுத்தப்பட்ட முழு சுகாதார திட்டம், 1.4.2012 முதல், "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசால் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் மத்திய அரசால், "தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" தொடங்கப்பட்டு, அனைவருக்குமான சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன் மூலம், மகாத்மா காந்தியடிகளின் 150–வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செலுத்தும் வகையில் 2019 ஆம் ஆண்டிற்குள்ளாக 'தூய்மை பாரதம்' என்ற நிலையை எய்த அனைத்து முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



**திட்டத்தின் நோக்கங்கள்**

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடையச் செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதம் என்ற இலக்கினை எய்த, ஊரகப் பகுதிகளில் முழு அளவிலான சுகாதார செயல்பாடுகளை முடுக்கி விடுதல்.

இ) சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட செய்தல். நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.

ஈ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, தேவையான இடங்களில் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்:**

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை

தூய்மை பாரத இயக்கத் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறை**

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு தனி நபர் இல்லக்கழிப்பறை கட்ட தலா ரூ. 12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த தொகை 2015–16 ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் அதாவது மத்திய அரசு ரூ.7,200 மற்றும் மாநில அரசு ரூ. 4,800 ஆக மாற்றியமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், 2013ம் ஆண்டு சுகாதார நிலை குறித்த அடிப்படை கணக்கெடுப்பிற்கு பின் 2013–14 முதல் 2017–18ம் ஆண்டு வரை சாதனை அளவாக 48.07 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 2018–19 ஆம் ஆண்டு ரூ.244.80 கோடி மதிப்பீட்டில், கணக்கெடுப்பின்படி



மீதமுள்ள கழிப்பறை இல்லாத 2.04 இலட்சம் குடும்பங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட உள்ளன.

**(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

**(இ) சமூக சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் வரை, மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

## 4.6. தேசிய ரூர்பன் மிஷன்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக ஏற்படுத்த **“தேசிய ரூர்பன் மிஷன்”** திட்டம் மத்திய அரசால் **16.09.2015** அன்று துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய **“ரூர்பன் தொகுப்பினை”** உருவாக்குவதாகும்.

### ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்

தேசிய ரூர்பன் மிஷன் வழிகாட்டுதலின்படி **“ரூர்பன் தொகுப்பு”** என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் **25000** முதல் **50000** வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ் நாட்டிற்கு பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை தேர்வு செய்ய புதுடெல்லி, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின் படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.



| | **முக்கியத்துவம்** |
|---|---|
| • 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி<br>• நிலங்களின் மதிப்பு உயர்வு<br>• 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு<br>• மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம் | **80 சதவீதம்** |
| • பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம்<br>• தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாடு | **20 சதவீதம்** |

அதன்படி மத்திய அரசு மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட **11** தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கியுள்ளது.

| **வ.எ.** | **மாவட்டத்தின் பெயர்** | **தொகுப்பின் பெயர்** | **கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **நிலை – I** | | | |
| 1 | திருவள்ளூர் | குத்தம்பாக்கம் | 11 |
| 2 | சிவகங்கை | வாணியன்குடி | 7 |
| 3 | திருப்பூர் | வேலாயுதம்பாளையம் | 6 |
| 4 | கோயம்புத்தூர் | மதுக்கரை | 9 |
| 5 | திருநெல்வேலி | சுத்தமல்லி | 14 |
| | | **மொத்தம்** | **47** |
| **நிலை – II** | | | |
| 1 | காஞ்சிபுரம் | சிங்கபெருமாள் கோவில் | 7 |
| 2 | மதுரை | கோவில் பாப்பாக்குடி | 16 |
| 3 | தஞ்சாவூர் | திருமலை சமுத்திரம் | 9 |
| | | **மொத்தம்** | **32** |
| **நிலை – III** | | | |
| 1 | கன்னியாகுமரி | சடையமங்களம் | 5 |
| 2 | தேனி | சீலயம்பட்டி | 7 |
| 3 | கிருஷ்ணகிரி | அலசபள்ளி பட்ரவபள்ளி | 7 |
| | | **மொத்தம்** | **19** |

**நிதி செயல்பாடு**

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதி, மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட இடைநிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடைநிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

**அட்டவணை – 4.4**

**தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடைநிரவல் நிரப்பு நிதி**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எ. | நிலை | திட்ட காலம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1 | நிலை – I | 2016–2019 | 5 | 150.00 |
| 2 | நிலை – II | 2017–2020 | 3 | 90.00 |
| 3 | நிலை – III | 2018–2021 | 3 | 90.00 |
| மொத்தம் | | | 11 | 330.00 |

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின் மூலம்



பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப்பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, கணினி எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

## 4.7. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3000 முதல் 5000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை

கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக



வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

## 4.8. தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் (NBMMP)

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டமான, தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதிகளில் இயற்கைக் கழிவுகளைத் திறம்பட பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்வதே ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு வகுத்துள்ள முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு –

i) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

ii) ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

iii) கிராமப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

iv) மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் / அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல் / உயிர் செரிமானக் குழம்பினை



செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

v) திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**அனுமதிக்கப்படும் மானிய விவரம் பின்வருமாறு**

| வ. எண் | பிரிவுகள் | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்களின் (NBMMP)விவரங்கள் (1 முதல் 6 கன அடி வரை) | |
|---|---|---|---|
| | | 1 கன அடி (ரூ.) | 2–6 கன அடி (ரூ.) |
| 1 | பொது பிரிவு | 5,500 | 9,000 |
| 2 | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 7,000 | 11,000 |
| 3 | மலைப்பகுதி | 7,000 | 11,000 |
| 4 | கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம் | ஒரு கலனுக்கு ரூ.1,200 வீதம் | |
| 5 | பணி கட்டணம் (Turn key Cost) | ஒரு கலனுக்கு ரூ.1,500 வீதம் | |

2017 –18 ஆம் நிதி ஆண்டில் 250 கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

# 5. பணியமைப்பு



### 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையானது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி ஏற்படுத்தப்பட்ட, மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகள் ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு மாநில மற்றும் மத்திய நிதிகள் மூலமாக ஊரக கட்டமைப்பு உருவாக்குதல், அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்பு சாலைகள், சுகாதாரம், வீடுகள், வாழ்வாதாரம் மற்றும் ஊராட்சி நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளை அர்ப்பணிப்போடு செயல்படுத்துகிறது. இத்தகைய பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையில், மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் திட்டமிட்டு, செயல்படுத்தி, கண்காணிப்பு செய்து வருகின்றனர்.

**அட்டவணை 5.1.**
**வகைவாரியான பணியாளர்கள் விபரம்**
**அரசுப் பணியாளர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 19 | ரூ..123400-216300 |
| 2. | இணை இயக்குநர் | 89 | ரூ.61900-196700 |
| 3. | உதவி இயக்குநர் | 406 | ரூ.56100-177500 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1066 | ரூ.37700-119500 |
| **மொத்தம்** | | **1580** | |

தமிழக அரசு போதுமான அளவிலான பணியிடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி அலுவலர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்ளிட்ட பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 19 கூடுதல் இயக்குநர்களும், இதர துறைகளில் 3 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 89 இணை இயக்குநர்களும், இதர துறைகளில் 14 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 406 உதவி இயக்குநர்களும், இதர துறைகளில் 2 உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

500 ஊராட்சிகளுக்கு மேல் உள்ள மாவட்டங்களான விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (துணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக உள்கட்டமைப்பு, பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான பணிகளை மேற்கொள்ள



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,293 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**அட்டவணை 5.2.**

**வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | ரூ..123100-215900 (நிலை 28) |
| 2. | செயற்பொறியாளர் | 50 | ரூ.61900-196700 (நிலை 26) |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 191 | ரூ.59300-187700 (நிலை 25) |
| 4. | உதவிப் பொறியாளர் | 947 | ரூ.56100-177500 (நிலை 22) |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 34 | ரூ.37700-119500 (நிலை 20) |
| 6. | இளநிலை பொறியாளர் | 316 | ரூ.35900 – 113500 (நிலை 13) |
| 7. | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2605 | ரூ.35400 – 112400 (நிலை 11) |
| 8. | சாலை ஆய்வாளர் | 1147 | ரூ.19500-62000 (நிலை 8) |
| **மொத்தம்** | | **5293** | |

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 39 செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் 11 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- உதவி செயற்பொறியாளர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 179 உதவி

செயற்பொறியாளர்களும், மாற்றுப்பணியில் இதர துறைகளில் 12 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- தொழில்நுட்ப துறையில் பல்வேறு பிரிவுகளில் 947 உதவிப் பொறியாளர்களும், 316 இளநிலை பொறியாளர்களும், 34 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,605 பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் உள்ளனர். மேலும், அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ3) துறை நாள் 31.03.2015ல் சாலை ஆய்வாளர் நிலை-2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை-1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டு, 1,147 சாலை ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக் குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு



முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (TANUVAS) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், தேசீய மாநில நலவாழ்வு சங்கம் (NRHM), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை (NRRDA) சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD assisted PTSLP), இந்து சமய அறநிலையத் துறை (HR & CE), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் பெறப்படும் அனுபவங்களை கொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், பொது மக்களுக்கு சேவை புரிந்திடவும் உறுதுணையாக உள்ளது.

### 5.4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ், கீழ்நிலை பணியாளர் முதல் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை வரையிலான பணியிடங்களின் பணியமைப்பு தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ்

வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் விபரம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதியக்கட்டு விகிதம் ஆகியவை கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

### அட்டவணை – 5.3

### அரசிதழ் பதிவுபெறா பணியாளர்களின் விபரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| **அ) அரசுப் பணியாளர்கள்** | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3938 | ரூ.36900–116600 |
| 2 | உதவியாளர் | 5563 | ரூ.20600–65500 |
| 3 | இளநிலை உதவியாளர் | 3137 | ரூ.19500–62000 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 182 | ரூ.20600–65500 |
| 5 | தட்டச்சர் | 1042 | ரூ.19500–62000 |
| 6 | ஒட்டுநர் | 899 | ரூ.19500–62000 |
| 7 | பதிவுரு எழுத்தர் | 137 | ரூ.15900–50400 |
| 8 | அலுவலக உதவியாளர் | 716 | ரூ.15700–50000 |
| 9 | இரவுக் காவலர் | 128 | ரூ.15700–50000 |
| 10 | மசால்ஜி | 14 | ரூ.15700–50000 |
| **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | | |
| **ஆ)ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் விவரம்** | | | |
| 1 | ஒட்டுநர் | 770 | ரூ.19500–62000 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 387 | ரூ.15900–50400 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரூ.15700–50000 |
| 4 | இரவுக் காவலர் | 377 | ரூ.15700–50000 |
| 5 | மசால்ஜி | 9 | ரூ.15700–50000 |



| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| **இ)கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12,524 | ரூ.7700–24200 |
| 2 | துப்புரவு பணியாளர் | 25,155 | ரூ.4100–12500<br>(காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு)<br>ரூ.2600/–<br>( தொகுப்பு ஊதியம் பெறுபவர்களுக்கு) |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40,419 | ரூ.2600/– தொகுப்பு ஊதியம் |

### 1) காலிப் பணியிடங்களை நிரப்புதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2017–2018ம் ஆண்டில், 161 இளநிலை உதவியாளர்கள், 101 தட்டச்சர்கள் மற்றும் 4 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய காலிப்பணியிடங்கள் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலர் மற்றும் ஊராட்சி செயலர்களுக்கு முறையே 10% மற்றும் 20% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 2017–2018 ம் ஆண்டில் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலராக பணியாற்றிய 36 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 132 ஊராட்சி செயலர்கள் 20% இட

ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவற்றுடன் 2017–2018 ஆம் ஆண்டில், 208 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 452 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 505 தட்டச்சர்கள் / இளநிலை உதவியாளர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிநிலை உயர்த்தப்பட்டுள்ளனர்.

**2) கருணை அடிப்படை பணி நியமனம்**

பணியிடைக் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அவர்களது கல்வித்தகுதிக்கேற்ப இரவுக் காவலர் / அலுவலக உதவியாளர் / இளநிலை உதவியாளர் நிலைகளில் பணிநியமனம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2016–17 ஆம் ஆண்டு முதல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு பணியிடைக்காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கும் பணிநியமனம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பணியிடைக்காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 67 நபர்களுக்கு, 2017–2018 ஆம் நிதியாண்டில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



**3) கிராம ஊராட்சி பணியாளர்களுக்கான சலுகைகள்**

கிராம ஊராட்சி பணியாளர்களின் நலன் கருதி சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல், சிறப்பு படிகள், அறுதியிட்ட பயணப்படி, பெண் ஊராட்சி செயலாளர்களுக்கு 180 நாட்களாக மகப்பேறு விடுப்பினை நீட்டித்தல், சிறப்பு ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குதல் தொடர்பாக 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் பொருட்டு அரசாணை (நிலை) எண்.76, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ.5) துறை, நாள் 05.07.2017 வெளியிடப்பட்டு, அதன்படி 10.05.2000க்கு பிறகு நியமனம் செய்யப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கும் 10.05.2000க்கு முன்பாக நியமனம் செய்யப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கு இணையாக ரூ.2000 தொகுப்பூதியம் மற்றும் ரூ.40 (ஆறு மாதத்திற்கு ஒரு முறை) அகவிலைப்படியாகவும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்தொகுப்பூதியம் ரூ.2600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி செயலர்கள், காலியாக உள்ள ஊராட்சி செயலர் பணியிடத்தினையும் கூடுதல் பொறுப்பாக கவனிப்பதால் அவர்களின் பணிச்சுமையையும் பணிப்பொறுப்பையும் கருத்தில் கொண்டு, கூடுதல் பொறுப்பு

படியாக ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ.500 வழங்க அரசாணை எண்.86, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ5) துறை, நாள் 27.07.2017ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

**4) துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற விதித்தளர்வு ஆணை**

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை பதவி உயர்வுக்கு ஊர்நல அலுவலர் நிலை–I நிலையில் ஓராண்டுக்கு குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என தமிழ்நாடு ஊராட்சி சார்நிலைப்பணி சிறப்பு விதிகள் விதி எண் 3(ஆ)(3) ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பணித்தகுதி விதிக்கு அரசாணை எண் (நிலை) எண் 55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ5) துறை நாள். 26.05.2017–ல் விலக்கு அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**5) அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி**

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய நிலை பணியிடங்களின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கு தேவையான அலுவலக நடைமுறை சார்ந்த அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை அளிப்பதில் அடிப்படை பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, இப்பயிற்சியினை அடைவதற்கான பின்னடைவுகளை களைய சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, 1750 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



# 6. திறன் மேம்பாடு

## 6. திறன் மேம்பாடு

அரசின் எந்தவொரு திட்டமும் பெருமளவில் வெற்றி பெறுவது செயல்திறன் மிக்க பயிற்சிகள் மற்றும் அத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது ஆகியவற்றை சார்ந்ததாகும். திறன் மேம்பாடு என்பது தனி நபர்களின் திறன் வளர்ப்பு மட்டும் அல்லாது அவர்கள் திறமையாகவும், சிறப்பாகவும் செயல்படும் வகையில் அவர்கள் சார்ந்த நிறுவனங்களில் ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் திறனை மேம்படுத்துவதாகும். ஒரு தனி நபரின் திறனை அவரின் பணியினை சிறப்பாக செய்யும் வகையில் மேம்படுத்துவது அத்தியாவசியமானது. எனவே சிறந்த மனித வள மேம்பாட்டிற்காக பொருத்தமான கால அட்டவணை உருவாக்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

இத்துறையின் நிர்வாக அமைப்பின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை ஒருங்கிணைந்து நடத்த தனி ஆணையரகம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து இடங்களில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிறுவனங்களின் மூலம்



பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 6.1**

**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்**

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அமைந்துள்ள மாவட்டம் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்கப் பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூர், திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்) | 1956 |
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம்,தர்மபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்) | 1954 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | தே .கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்) | 1948 |

பல்வேறு திட்டங்களை ஊரக மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக செயல்படுத்துவதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனவே

அவர்களின் திறனை மேம்படுத்துவது ஊராட்சி நிர்வாகத்தின் ஒரு அடிப்படை அம்சமாகும். இப்பயிற்சியானது அவர்களின் திறன் மற்றும் அறிவினை மேம்படுத்தவும், அவர்தம் கடமைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கும் உதவுகிறது. மேலும் ஊரகப் பகுதிகளின் வளர்ச்சி மற்றும் ஊரக மக்களின் நலன் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துவதற்கான சிறந்த தொழில் நுட்ப ஆலோசகராகவும், செயல்படுத்துபவராகவும் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் விளங்கிட, பயிற்சி உதவி செய்கிறது.

### 6.1.1.மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 6.1.2. பயிற்சிகள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை,



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, ஆளுமை வளர்ச்சி, சமூக தணிக்கை, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), மின் ஆளுமை, கணினி பயிற்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டம், பணமில்லா பரிவர்த்தனை, வாழ்வாதாரம் போன்ற பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள் போன்ற கட்டமைப்பு பணிகள் தரமான முறையில் மேற்கொள்ள தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

### 6.1.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 6.1.4. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு தேவையான நிதியினை வழங்குகிறது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு ஒவ்வொரு

ஆண்டும் பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின் கீழ் 100% நிதியினை வழங்குகிறது.

**அட்டவணை 6.2**
**2017–18 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சி விவரங்கள்**
**(பொது, கணினி மற்றும் சிறப்புப் பயிற்சிகள்)**

| வ .எண். | பயிற்சியின் பெயர் | அணிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | பொதுப் பயிற்சி | 339 | 9056 |
| 2 | கணினி பயிற்சி | 159 | 3864 |
| | **சிறப்பு மற்றும் இதர பயிற்சிகள்** | | |
| 3 | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவருக்கான பயிற்சி | 8 | 370 |
| 4 | ஊர் நல அலுவலர் (பெண்), சமூக நலத் துறை | 3 | 110 |
| 5 | மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கான சமூக தணிக்கைப் பயிற்சி | 94 | 3863 |
| 6 | கிராம வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் | 92 | 2899 |
| 7 | பருவ நிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை பயிற்சி | 176 | 7110 |
| 8 | பணமில்லா பரிவர்த்தனை பயிற்சி | 128 | 4372 |
| 9 | சுகாதார மேம்பாட்டில் சமுதாய அணுகுமுறை | 14 | 467 |
| 10 | தகவல் தொழில்நுட்ப பயிற்சி | 30 | 1037 |
| 11 | தூய்மை பாரத இயக்கம் தொடர்பான வெளி வளாகப் பயிற்சி | 2 | 109 |
| 12 | பொறியாளர்களுக்கான பயிற்சி | 3 | 91 |
| 13 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கக பயிற்சிகள் | 5 | 160 |



| | | | |
|---|---|---|---|
| 14 | நரிக்குறவர்களுக்கான திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 6 | 190 |
| 15 | நீர் வள ஆதாரப் பயிற்சி (வட்டார நிலை அலுவலர்கள்) | 12 | 154 |
| 16 | ஊராட்சிகள் சொந்தமாக வருவாய் ஈட்டுதல் குறித்த பயிற்சி (ஊராட்சி செயலர்கள்) | 12 | 218 |
| 17 | ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் – பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் பயிற்றுநர்களுக்கான பயிற்சி | 11 | 330 |
| 18 | சுகாதாரம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் – பயிற்றுநர்களுக்கான பயிற்சி | 10 | 282 |
| 19 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – பயிற்றுநர்களுக்கான பயிற்சி | 9 | 294 |
| 20 | மின் ஊராட்சி செயலி பயன்பாடு பயிற்சி | 9 | 243 |
| 21 | ஊராட்சிகளுக்கான நிதி மேலாண்மை – பயிற்றுநர்களுக்கான பயிற்சி | 11 | 328 |
| 22 | ஓட்டுநர்களுக்கான சாலை பாதுகாப்பு மற்றும் முதல் உதவி பயிற்சி | 7 | 219 |
| 23 | பழங்குடியினருக்கான சிறப்பு பயிற்சி | 6 | 107 |
| | **மொத்தம்** | **1,146** | **35,873** |

2017–18 ஆம் ஆண்டில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், மாநில அரசு, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பணியாளர் மற்றும் பயிற்சி துறை நிதி உதவியுடன் அலுவலர்கள் உட்பட 35,873 நபர்களுக்கு 1,146 அணிகளில் பலவகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.1.5. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு

சத்திய விஜயநகரம், பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை மற்றும் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சூழல் சுற்றுலா

மற்றும் வாழ்வாதாரம் போன்ற சிறப்புத் திட்டங்களை மேற்கொள்ளவும் அரசாணை நிலை எண்.59, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (பரா-3) துறை, நாள்.24.4.2018ல் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.1.6.மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் சிறப்பு செயல்பாடுகள்

### அ) கிராம தத்தெடுப்பு திட்டம்

கிராம தத்தெடுப்பு திட்டம் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் கீழ்க்காணும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

1) பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் பயிற்றுநர்கள்/நிர்வாக பணியாளர்கள் கள அளவில் தற்போது உள்ள வளர்ச்சி போக்குகளை முழுமையாக தெரிந்து கொண்டு அதனை பயிற்சி பாடத் திட்டத்தில் தேவைக்கேற்ப சேர்த்துக் கொள்ள வழி வகை செய்தல்

2) பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் மூலம் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சியை அடைவதற்கு உள்ளூர் சமுதாயத்தை அணி திரட்டுவதற்கான பல்வேறு வழிமுறைகளை சோதனை முறையில் அறிந்து கொள்ளுதல்

3) கிராம ஊராட்சிகளில் உள்ள சமூக மூலதனமான மக்களை அடையாளம் கண்டு அவர்களை கிராம தன்னார்வலர்களாக செயல்பட ஊக்குவித்தல்



4) ஆராய்ச்சி மற்றும் ஆவணபடுத்துதலை மேம்படுத்துதல்

5) தத்தெடுக்கும் கிராமத்தை சமூக ஆய்வகமாக பயிற்சி நிறுவனங்கள் பயன்படுத்துதல்

6) பல்வேறு அரசு திட்டங்கள் குறித்த தகவல்களை ஊரக மக்களுக்கு தெரிவித்தல்

**அட்டவணை 6.3**
**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள்**

| வ எண் | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | தத்தெடுக்கப்பட்ட கிராமம் | ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | ச.வி.நகரம் | ஆரணி ஊராட்சி ஒன்றியம் திருவண்ணாமலை மாவட்டம் |
| | | நெத்தபாக்கம் | |
| 2 | பவானிசாகர் | பனயம்பள்ளி | பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் ஈரோடு மாவட்டம் |
| | | முடுக்கன்துறை | |
| 3 | பட்டுக்கோட்டை | நம்பிவயல் | பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் தஞ்சாவூர் மாவட்டம் |
| | | மூணாம்சேத்தி | மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம் திருவாரூர் மாவட்டம் |
| 4 | கிருஷ்ணகிரி அணை | கங்கலேரி | கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் கிருஷ்ணகிரி மாவட்டம் |
| | | மொரமடுகு | |
| 5 | தே .கல்லுப்பட்டி | வெள்ளம்பூர் | தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம் |
| | | அம்மாபட்டி | |

### ஆ) வெளி நபர் மூலம் மதிப்பீடு – புதிய முயற்சி

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் தங்களுடைய பயிற்சிகளை மதிப்பீடு செய்ய வெளி நபர்கள், அதாவது புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள்/சிறப்பு மிக்க நபர்கள் /துறை நிபுணர்கள், தேசிய மற்றும் மாநில அளவிலான வல்லுநர்கள்

மூலம் மேற்கொள்கின்றன. வெளி நபர்களால் மதிப்பீடு செய்ய கீழ்க்கண்ட தலைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.4**

**வெளி நபர் மதிப்பீடு செய்யும் தலைப்புகள் விவரம்**

| வ எண் | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | பொருள் | மதிப்பீடு செய்யும் வெளி நபர் விவரம் |
|---|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் | அண்ணாமலை பல்கலைக்கழகம், கடலூர் மாவட்டம் |
| 2 | பவானிசாகர் | கணினி பயற்சி | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3 | பட்டுக்கோட்டை | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | அண்ணாமலை பல்கலைக்கழகம், கடலூர் மாவட்டம் |
| 4 | தே.கல்லுப்பட்டி | பொது பயிற்சி | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம் |
| 5 | கிருஷ்ணகிரி அணை | சுகாதாரம் | பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் |

**இ.ஆராய்ச்சி பணிகள்**

பல்வேறு தலைப்புகள் மீது ஆராய்ச்சிகள் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி ஆணையர் பயிற்சி அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி நுட்பங்களை அறிந்து கொண்டு பல்வேறு ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வல்லுநர்களை கொண்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும்



ஊராட்சி நிறுவனத்தில் ஐந்து நாள் ஆராய்ச்சி செயல்முறைகள் குறித்த சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டது.

**அட்டவணை 6.5**

**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி பணிகள்**

| வ எண் | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | ஆராய்ச்சி தலைப்புகள் |
|---|---|---|
| 1 | ச.வி.நகரம் | கிராம ஊராட்சிகளில் உள்ள பொது சொத்துகளை மேலாண்மை செய்தல் |
| 2 | பவானிசாகர் | கிராம ஊராட்சிகளின் வரியில்லா வருவாயினை பெருக்குதல் குறித்த விளக்கமான ஆய்வு |
| 3 | பட்டுக்கோட்டை | மின்சார சிக்கனம் மூலம் ஊராட்சியின் சொந்த வருவாயை பெருக்குதல் குறித்த விளக்கமான ஆய்வு |
| 4 | கிருஷ்ணகிரி அணை | தமிழ்நாடு ஊரக பகுதிகளில் மின்னணு சேவைகள் செயல்பாடு குறித்த ஆய்வு |
| 5 | தே.கல்லுப்பட்டி | கிராம ஊராட்சிகளுக்கு தேவையான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் குறித்த ஆய்வு |

## 6.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனமாகும். இது 1961–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக 1990–ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் அதற்கு சொந்தமான 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

**6.2.1. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் குறிக்கோள்**

பல்வேறு நிலையிலான பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறனை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் கற்றுக்கொள்ளும் திறமை மற்றும் மனப்பான்மையை மாற்றுவதன் மூலமும் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோள்களாகும்.

ஊரகப் பகுதி மற்றும் ஊரக மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை கண்டறிந்து அவைகளை கையாள தொடர்புடைய துறைகளுக்கு ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்க,

- பயிற்சிகளை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் மாநாடு கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல்.
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ள இதர பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்தோ அல்லது தனித்தோ ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அல்லது அதற்கான உதவிகளை வழங்குதல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிர்வாகம் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்து அதற்கான தீர்வுகளை கண்டறிதல்.



- அரசின் புதிய கொள்கைகளை வரையறை செய்ய ஆலோசகராக செயல்படுதல்.

**6.2.2. விரிவுரையாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள்**

ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சி நிர்வாக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் நடத்த தேவையான விரிவுரையாளர்கள், பயிற்றுனர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மேலாண்மை, வாழ்வாதாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம் (கணினி வல்லுநர்), கூட்டுறவு மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பிரிவுகளில் பயிற்சியளிக்க ஐந்து சிறப்பு விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக்கொள்ள மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

**6.2.3. பயிற்சிக்கான நிதி ஆதாரம்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில/மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்காக கீழ்க்கண்ட விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

**அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம், இந்திய அரசு**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி துறையின் பல்வேறு முக்கியத் திட்டங்கள் பற்றிய விளக்க

பயிற்சிகளுக்கான 100 சதவீதம் நிதி உதவியினை இவ்வமைச்சகம் வழங்குகிறது.

- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100 சதவீதம் நிதி உதவி வழங்குகிறது.

**ஆ. ஊராட்சி நிர்வாக அமைச்சகம், இந்திய அரசு**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு தலைப்புகளில் வழங்க 100 சதவீதம் நிதி உதவி வழங்குகிறது.



**இ. தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத்**

இந்நிறுவனம் இணைந்து நடத்தும் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சிகள் நடத்த 100 சதவீத நிதி உதவி வழங்குகிறது.

**ஈ. புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை அமைச்சகம், இந்திய அரசு**

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சிகள் மேற்கொள்ள நிதி உதவி அளிக்கிறது.

**உ. பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறை, இந்திய அரசு**

மத்திய அரசுத் துறைகள் மற்றும் அமைச்சகங்களில் உள்ள சார்பு செயலர்கள் மற்றும் முதுநிலை பிரிவு அலுவலர்களுக்கு களப்பணியுடன் கூடிய பயிற்சிகளுக்கான நிதி உதவி அளிக்கிறது.

**6.2.4. பயிற்சி பங்கேற்பாளர்கள்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் இதர பிற துறை அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குகிறது.

### 6.2.5. பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 6.2.6. பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலை நகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

### 6.2.7. பயிற்சி வல்லுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம் சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து



வல்லுநர்கள் பயிற்சி வழங்க பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள், பிற துறையில் பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள், வல்லுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

### 6.2.8. உட்கட்டமைப்பு

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அரங்குகள், ஒலி ஒளி சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்களுக்கு உணவுடன் கூடிய விடுதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.

- **மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் அமைந்துள்ள புதிய பல்நோக்கு கட்டடம்**

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் ரூ.12.71 கோடியில் 55,200 ச.அடி பரப்பளவில் பல்நோக்கு கட்டடம் கட்ட ஒப்புதல் அளித்தது. மேற்படி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 01.03.2018 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

➢ **பல்நோக்கு கட்டடத்தில் உள்ள வசதிகள்:**

- 300 நபர்கள் அமரக்கூடிய கூட்டரங்கம்
- 101 இருக்கைகள் கொண்ட பயிற்சி அறை
- 101 முனையங்கள் கொண்ட கணினி கூடம்
- 220 நபர்கள் அமரக்கூடிய திறந்தவெளி அரங்கம்
- உணவருந்தும் கூடம்
- மின்–நூலகம்
- கண்காட்சி அரங்கு.

### 6.2.9. 2017–18–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் விவரம்

இந்நிறுவனம் 2017–18ம் ஆண்டில் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி 15,42,574 ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி துறை அலுவலர்கள், ஊராட்சி அமைப்பின் களப்பணியாளர்கள், பிற துறை பணியாளர்கள், வள அலுவலர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

**அட்டவணை 6.6**
**மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் வழங்கப்பட்ட பயிற்சி விவரம் – 2017–18**

| வ.எண் | திட்டம் | வருடம் | சாதனை | |
|---|---|---|---|---|
| | | | அணிகள் | எண்ணிக்கை |
| 1. | தேசிய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவன வெளி பயிற்சி | 2017-18 | 16 | 471 |
| 2. | பொதுப் பயிற்சி | 2017-18 | 47 | 2643 |
| 3. | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டப் பயிற்சி | 2017-18 | 1691 | 29092 |
| 4. | ஊரகத் தொழில் நுட்ப வள மையம் | 2017-18 | 10 | 296 |
| 5. | தேசிய கிராம சுயராஜ்ய திட்டம் | 2017-18 | 18144 | 1509732 |
| 6. | தேசிய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவன இணைப்பு பயிற்சி | 2017-18 | 4 | 86 |
| 7. | பயிற்சி வைப்பு நிதி | 2017-18 | 8 | 254 |
| | **மொத்தம்** | | **19,920** | **15,42,574** |



மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 2017–18 –ஆம் ஆண்டில் ரூ.53.70 கோடியில் திறன் மேம்பாடு மற்றும் பல்வேறு பயிற்சி திட்டங்களுக்கு தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 6.2.10. சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்

தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் வருவாய் துறை மூலம் 12 கடலோர மாவட்டங்களில் கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தி வரும் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தும் அமைப்பாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் காலகட்டங்களில் சமுதாய பாதிப்புகளைக் குறைக்கவும் மற்றும் அவற்றை சமாளிக்க

அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்தும் வகையிலும் ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட சமுதாயத்தினர் இத்திட்டத்தின் முதன்மை பங்காளர்களாகவும், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் இரண்டாம் நிலை பங்காளர்களாகவும் உள்ளனர்.

தமிழ்நாட்டில் **12** கடலோர மாவட்டங்களில், **45** வட்டார வளர்ச்சி அலுவலக எல்லைக்குட்பட்ட **561** கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஜூலை 2013 முதல் ஜூலை 2018 வரையிலான காலகட்டத்தில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி அளவில் ஒரு கிராம பேரிடர் மேலாண்மை குழு மற்றும் ஒவ்வொரு கடலோர குக்கிராம அளவில் 5 கிராம பேரிட மேலாண்மை அணிகள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம பேரிடர் மேலாண்மைக் குழு மற்றும் கிராம பேரிடர் மேலாண்மை அணி உறுப்பினர்களைக் கொண்டு பேரிடர் மேலாண்மைத் திட்டம் சமுதாய அளவில் தயாரிக்கப்பட்டு, அது பேரிடர் அபாய காலத்தில் செயல்படுத்தப்படுகிறது. பேரிடர் மட்டுப்படுத்தும்



நடவடிக்கைகளை வளர்ச்சிப் பணிகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த இத்திட்டத்தில் வழி வகை உள்ளது.

கிராம பேரிடர் மேலாண்மைக் குழு மற்றும் 5 கிராம பேரிடர் மேலாண்மை அணி உறுப்பினர்களுக்கு பேரிடர் சவால்களை எதிர் கொள்ளும் வகையில் ஆரம்ப எச்சரிக்கை நடவடிக்கைகள், வெளியேற்றம், தேடுதல் மற்றும் மீட்பு, பாதுகாப்பு புகலிடம் மேலாண்மை மற்றும் முதல் உதவி ஆகியவற்றில் வல்லுநர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதனுடன் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய கடலோரக் கிராமங்களிலிருந்து, நல்ல உடல் திறன் மிக்க **1,500** இளைஞர்கள் முதன்மை பொறுப்பாளர்களாக கண்டறியப்பட்டு அவர்களுக்கு தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் தீயணைப்புத்துறை மூலமாக **2017–18** ஆம் ஆண்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

2017-18 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில் **1,691** பயிற்சிகளின் மூலமாக **29,092** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் **561** கடலோர கிராமங்களில் உள்ள **1,09,332** நபர்களுக்கு **2,481** அணிகளில் ரூ.**5.84** கோடி செலவினத்தில் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

**6.2.11. ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சிகளை மறு சீரமைத்தல்.**

ஊரக மக்களின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, சாலை வசதிகள், குடிநீர், தெருவிளக்கு, சுகாதாரம் ஆகியவற்றை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூன்று முக்கிய பிரிவுகளாக செயல்படுகிறது. கிராம, வட்டார, மாவட்ட அளவிலான மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நல்ல உள்ளாட்சி நிர்வாகத்தை வழங்க இத்துறை உதவுகிறது. மேலும் இத்துறையில் வாழ்வாதாரத்தை மையமாக வைத்துச் செயல்படும் பிரிவுகளாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஊரக புனரமைப்புத் திட்டம், பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியன உள்ளன. இப்பிரிவுகளின் எல்லா செயல்பாடுகளிலும் திறன் மேம்பாடு என்பது ஒரு அங்கமாக உள்ளது. ஊரக வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளிலும் ஒரு மாறுதல் தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



1. ஊரக வளர்ச்சித் துறையின் அனைத்து திறன் மேம்பாட்டு பயிற்சிகளை குறிப்பாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மேற்கொள்ளும் பயிற்சிகளை மறு சீரமைக்க ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்க ஐதராபாத்தில் இயங்கிவரும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டது.
2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் “சீர்மிகு மையங்கள்” உருவாக்குவதற்கும் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் உரிய தொலைநோக்கு திட்டத்தை இறுதி செய்ய துறை அளவிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்வதற்கு உதவிட மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி ஆணையரகத்தில் ஒரு தற்காலிக பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.
4. தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்துள்ளது

இதற்காக அரசு ஆணை எண்.59, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (பரா-3) துறை நாள்.24.4.2018ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள, அரசு ரூ.1076.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## அட்டவணை 6.7

| | | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | **மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம்** | |
| | கிராம தொழில்நுட்ப பூங்கா | 65.51 |
| | மின்னணு நூலகம் - நூலகம் கட்டடம் சீராக்குதல், நூல்கள் மற்றும் அலமாரிகள் வாங்குதல், மின்னணு நூலகம் அமைத்தல் | 50.00 |
| | திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை | 20.61 |
| | விரிவுரையாளர்கள் திறன் மேம்படுத்துதல் | 40.00 |
| | தளவாட சாமான்கள் வாங்குதல், தானியங்கி மற்றும் தகவல் தொழில் நுட்ப முறையில் பயிற்சி அளித்தல் | 100.00 |
| | ஆக மொத்தம் | **276.12** |
| 2. | ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 500.00 |
| 3. | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (பயிற்சி) ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நிர்வாகம் மற்றும் பயிற்சி மையம் அமைத்தல் | 300.00 |
| | மொத்தம் | **1076.12** |

### 6.2.12. தொழில்நுட்ப பயிற்சி மையம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தொழில் நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளித்திட ரூ.31.65 இலட்சத்தில் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி பிரிவு ஏற்படுத்த அரசாணை எண்.150 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (பரா-3) துறை நாள்.21.12.2017ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

### 6.2.13. மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவன நடவடிக்கையினை அந்தமான் நிக்கோபார் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்களுக்கு விரிவுப்படுத்துதல்

அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்களில் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் அல்லது விரிவாக்க பயிற்சி மையங்கள்



ஏதுமில்லை. அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச பகுதிகளில் பயிற்சி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை தேசிய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவன இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச பகுதிகளில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாடு பயிற்சிகள் மேற்கொள்ள அரசாணை எண்.192 ஊரக வளர்ச்சி(ம) ஊராட்சி துறை (பரா-3) நாள் 18.08.2017–ல் அரசு ஆணையிட்டுள்ளது தேசிய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் 8 பயிற்சிகள் அளித்திட ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது மேற்கண்ட பகுதிகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.2.14. மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்

மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் மற்றும் பிற அலுவலர்கள் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான யுத்திகள் மற்றும் நுணுக்கங்களை அடையும் வகையில் 13.11.2017 முதல் 17.11.2017 வரை 5 நாட்களுக்கு தேசிய ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம், ஐதராபாத் சிறப்பு வல்லுநர்களை கொண்டு சிறப்பு பயிற்சியினை நடத்தியது.

தமிழ்நாட்டில் கடலோர ஊராட்சிகளில் வசிக்கும் ஊரக சமுதாயத்தில் தீவிர பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கண்டறிவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கீழ்க்காணும் இனங்களிலும் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தால் ஆராய்ச்சி படிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அ). ஊரக தமிழ்நாட்டின் உள்ளூர் சமுதாயம், தீவிர பருவநிலை மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவும், மட்டுப்படுத்தவும் மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள், குறிப்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சி.

ஆ). கிராம ஊராட்சிகளின் தணிக்கை நடைமுறைகள் மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வு.

இ). நகர பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலிப்பதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தல்.

**6.2.15. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அயல்நாட்டு பிரதிநிதிகளின் வருகை**

**i) வங்காளதேசம், தேசிய ஊரக வளர்ச்சி அகாடமியின் பிரதிநிதிகள் வருகை**

வங்காளதேசம், தேசிய ஊரக வளர்ச்சி அகாடமியின் 6 உறுப்பினர்களைக் கொண்ட குழு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு 14.03.2018 அன்று வருகை



புரிந்து கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (பயிற்சி) அவர்களுடன் கலந்துரையாடல் செய்தது.

**ii) ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளில் இருந்து மூத்த அதிகாரிகளின் வருகை**

ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளின் மூத்த அதிகாரிகளுக்கு தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் பன்னாட்டு பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. இதன்படி மேற்படி நாடுகளிலிருந்து மூத்த அதிகாரிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு 22.03.2018 முதல் 24.03.2018 முடிய வருகை புரிந்தனர். இக்குழு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கரசங்கால் மற்றும் முடிச்சூர் கிராம ஊராட்சிகள் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டாரத்தை பார்வையிட்டனர்.

**iii) தென் ஆப்பிரிக்கக் குழு வருகை**

கவாசுழு நட்டல் மாகாண நாடாளுமன்ற விவசாய குழு உறுப்பினர்கள் 11.06.2017 முதல் 17.06.2017 முடிய தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த நாட்களில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை 14.06.2017 அன்று பார்வையிட்டனர்.

**6.2.16. நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG):**

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊராட்சி அமைப்பு அலுவலர்கள் மற்றும் இதர பங்களிப்பாளர்கள்,

நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் பற்றி தெரிந்துகொள்ளும் வகையில் பயிற்சி திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு பயிற்றுநர்களுக்கான பயிற்சி மற்றும் 12 இடைநிலை அலுவலர்களுக்கான (வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொது சுகாதாரம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, கல்வித்துறை, வனத்துறை மற்றும் வருவாய்த் துறை பயிற்சிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் நடைபெற்றது. இதுவரையில் நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் பயிற்சியின் கீழ் 1400 அலுவலர்களில் 735 அலுவலர்ளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அலுவலர்களுக்கு 2018–19 – ஆம் ஆண்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

### 6.2.17. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (VPDP)

14வது மத்திய நிதி ஆணைய மானியத்தினை பயன்படுத்துவதற்கு மத்திய ஊராட்சி அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறையில் ஒவ்வொரு ஊராட்சியும் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிப்பது கட்டாயமாகியுள்ளது. அரசு ஆணை எண்.108 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 24.07.2015 மற்றும் அரசு ஆணை எண்.34 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 02.03.2016–ன்படி பங்களிப்புடன் கூடிய திட்டமிடுதல் அணுகுமுறையை பின்பற்றி தமிழ்நாட்டில் உள்ள 12,524 ஊராட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் கிராம



ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிக்க அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பணி மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் படி வெவ்வேறு நிலையில் உள்ள 14,58,251 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 6.2.18. மாநில ஊராட்சி வள மையம் (SPRC) மற்றும் ஊராட்சிக்கான மாவட்ட வள மையம் (DRCP)

ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் தனி கவனம் செலுத்தும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் மாநில ஊராட்சி வள மையத்தினையும், 15 மாவட்டங்களில் ஊராட்சிக்கான மாவட்ட வள மையங்கள் அமைத்திடவும் மத்திய ஊராட்சி நிர்வாக அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் படி மாநிலங்களுக்கு தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் கிராம உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள அலுவலர்களுக்கு திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றை மேம்படுத்திட நிதி வழங்கப்படுகிறது. தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்தின் கீழ் மாநில ஊராட்சி வள மையம் மற்றும் 15 ஊராட்சிக்கான மாவட்ட வள மையம் கட்ட ரூ.7 கோடியும் ( மாநில ஊராட்சி வள மையம் கட்ட ரூ.1 கோடி, மாவட்ட வள

மையம் கட்ட தலா ரூ.40 இலட்சம்), பயிற்சிக்கான மனித வளம் மற்றும் தொடர் செலவினத்திற்கு ரூ.86 இலட்சமும் மத்திய ஊராட்சி அமைச்சகத்தால் 2017–2018 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**6.2.19. அழைப்பின் பேரில் பயிற்றுநர்கள்**

பரவலாக காணப்படும் பயிற்சி மையங்களில் நல்ல தரமான பயிற்சியினை உறுதி செய்யும் பொருட்டு போதுமான திறன்மிக்க பயிற்றுநர்களை உருவாக்குவது மிக இன்றியமையாதது. ஏற்கனவே, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் கண்டறியப்பட்டுள்ள பயிற்றுநர்கள், தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் (ம) ஊராட்சி நிறுவனத்தின் மூலம் சான்றளிக்கப்பட்டு, மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி அளிப்பர்.

2018–19ம் ஆண்டில் தோராயமாக 13,720 அணிகளை கொண்ட 5,75,482 நபர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனங்கள் மூலமாக பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



# 7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

## 7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு ஆகியவற்றின் மூலம் பெண்கள் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாடு அடையவேண்டும் என்ற நோக்கோடு 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரித்து சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்காணும் இரண்டு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:**
ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

ii. **தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்:**
நகர்ப்புற ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.



### 7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் துவக்கத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்து மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தர்மபுரி மாவட்டத்திலும் பின்னர் சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பெரும் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு இத்திட்டத்தில் சில மாற்றங்களை செய்து **‘மகளிர் திட்டம்’** என்ற பெயரில் இந்த மாவட்டங்களில் செயல்படுத்தி, பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியது. சமூக பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்த இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் யாவும் மகளிர் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும்.

### 7.1.1. சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தையும், அவர்களுக்குள்ளேயே உள்கடன் வழங்குதலையும், ஒன்றுகூடி ஒற்றுமையாகவும் மற்றும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதும் சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களாகும். மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், ஒன்றுகூடி முடிவெடுத்தல், வங்கிக்கடன் பெற்றுத்தருதல் மற்றும் கடன்களை திரும்ப செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை 7.1**
**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம் (30.04.2018)**

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 6.57 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 98.41 இலட்சம் |
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.48 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 66.90 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 2.09 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 31.51 இலட்சம் |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ. 7,726 கோடி |
| 5 | ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 5.58 இலட்சம் |
| 6 | சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு (2011–2018) | ரூ. 41,180 கோடி |



## 7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர் இலக்கு மக்கள் ஆவர். இலக்கு மக்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக அவர்களைக் கொண்டு செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

### 7.2.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

- பிற திட்டங்களைப் போல் அல்லாது ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.

- ஊரகப் பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்மேம்பாடு பயிற்சி அளித்தல்.
- அரசுத்துறைகள் மூலம் கிடைக்கப் பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 7.2.2. திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் **31** மாவட்டங்களில் **385** வட்டாரங்களில் (முந்தைய புது வாழ்வுத் திட்ட **120**



வட்டாரங்கள் உட்பட) செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் **4** மாவட்டங்களில் உள்ள **16** வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டமும் (NRLP) அடங்கும்.

**அட்டவணை 7.2**
**திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் – முதற் கட்டம் | 4 | 16 | 48 | 450 |
| 2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – முதற் கட்டம் | 11 | 44 | 151 | 1800 |
| 3 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – இரண்டாம் கட்டம் | 27 | 110 | 317 | 3391 |
| 4 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – மூன்றாம் கட்டம் | 21 | 95 | 226 | 2471 |
| 5 | தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் (30.06.2017 முடிவடைந்தது) | 26 | 120 | 302 | 4174 |
| **கூட்டுத்தொகை** | | **31** | **385** | **1,044** | **12,286** |
| 6 | சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | – | – | – | 238 |
| **மொத்தம்** | | **31** | **385** | **1,044** | **12,524** |

**முதற் கட்டம்:–** 2012–13 ஆம் ஆண்டு முதல் 44 வட்டாரங்களில் உள்ள **1,873** கிராம ஊராட்சிகளில் **1,800** கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார

இயக்கத்தின் கீழும், 73 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும், 450 கிராம ஊராட்சிகள் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது. 30.06.2018 அன்று நிறைவு பெறும் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

**இரண்டாம் கட்டம்:–** 2013–14 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களிலுள்ள 110 வட்டாரங்களைச் சார்ந்த 3,491 கிராம ஊராட்சிகளில் 3,391 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், எஞ்சியுள்ள 100 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் பயன்பெற்று வருகின்றன.

**மூன்றாம் கட்டம்:–** 2014–15 ஆம் ஆண்டு முதல் மூன்றாம் கட்டமாக 95 வட்டாரங்களில் உள்ள 2,536 கிராம ஊராட்சிகளில் 2,471 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள 65 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.


### 7.2.3. இயக்க செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு



நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.2.4. வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்



## 7.3. திட்ட செயல்பாடுகள்

### 7.3.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமங்களிலுள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சுவர் ஓவியங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவைகளும் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 7.3.2. அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புது வாழ்வு திட்டத்தில் செயலாற்றிய சமூக வல்லுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்கள், செயலிழந்த மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்களின் விவரங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இந்த அடிப்படை விவரக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்ப்பு பயிற்சிகள் மூலமாக மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகிறது.



### 7.3.3. மக்கள் நிலை ஆய்வு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரைக் கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றி மக்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலை அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுப்புகள் மற்றும் புதிதாக சேர்த்தல் போன்ற விவரங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் பெற்று இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது. இத்தகைய மக்கள் நிலை ஆய்வு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களை சார்ந்த அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது.

### 7.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் போன்ற இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சங்கமாகும். இச்சங்கம் இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தனி நபர் கடன் வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்கவும், அவர்களின் நலிவுநிலையைக் குறைக்கவும் உதவுகின்றது. இதுவரை 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் திட்ட செயலாக்கப் பகுதிகளான 385 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### 7.3.5. சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

### 7.3.6. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. 2017–18 ஆம் ஆண்டில் 15,000 சுய உதவிக் குழுக்கள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட குழுக்கள் சேர்த்து) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார



இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தக பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் முறையான கூட்டங்கள், சேமிப்பு, உள்கடன், கணக்கு பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் கடன் திருப்பம் ஆகிய பஞ்சசூத்திரங்களைக் கடைப்பிடிக்கின்றன.

ஆறு மாதங்கள் முழுமையடைந்த சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதார செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதி / ஆதார நிதி மற்றும் வங்கிக் கடன் போன்ற நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

### 7.3.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து தகுதிவாய்ந்த சுய உதவிக் குழுக்களும் ஜனநாயக முறையில் ஒன்றாக இணைந்து செயல்படவும், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திடவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும்.

மேலும் இந்த அமைப்பானது ஊராட்சி அளவிலான முதல் நிலை கூட்டமைப்பாக செயல்பட்டு, ஊரக வாழ்வாதார

இயக்கத்திற்கும் கிராம சமுதாயத்திற்கும் இடையே மிக முக்கியமான இணைப்பாக உள்ளது.

**கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தகுதிவாய்ந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை அமைத்தல்.
- தேவையான நிதியினை பெற்று வழங்குவதன் மூலம் சுய உதவிக் குழுக்களை வலிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்.
- திட்டம் சார்ந்த தகவல்கள் சுய உதவிக் குழுக்களிடம் சென்றடையச் செய்தல்.
- சுய உதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், குழுக்களை தரம் பிரித்தல் மற்றும் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
- அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மகளிரின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடு தொடர்பான சமூக பிரச்னைகள், சுகாதாரம், ஊட்டச்சத்து, மற்றும் பாலின பிரச்னைகள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**துணைக் குழுக்கள்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது கிராம வளர்ச்சி மற்றும் குழு உறுப்பினர்களின் நலனுக்காக பல்வேறு



செயல் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொருட்டு கீழ்க்காணும் துணைக் குழுக்களை அமைத்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

- குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் துணைக் குழு
- கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு துணைக் குழு
- வாழ்வாதார துணைக் குழு
- சமூக மேம்பாட்டிற்கான துணைக் குழு

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 385 வட்டாரங்களில் உள்ள 12,524 ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.3**
**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலை**

| வ. எண் | திட்டம் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 249 | 7662 | 7662 |
| 2 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 16 | 450 | 450 |
| 3 | தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் (30.06.2017 முடிவுடைந்தது) | 120 | 4174 | 4174 |
| 4 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் | | 238 | 238 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **12,524** |

### 7.3.8. வட்டார அளவிலான கூட்டமைப்பு

வட்டார அளவிலான கூட்டமைப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உயர்நிலை அமைப்பாகும். இவை வட்டார அளவில் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்ற அடிப்படை அமைப்புகளை வலுப்படுத்தும் நிறுவனங்களாக விளங்கும்.

**பணிகள்**

- வங்கிக்கடன் இணைப்பைப் பெறுவதில் சுய உதவிக் குழுக்களின் திறனை மேம்பாடு செய்தல்.
- வங்கிக்கடனை குறித்த காலத்தில் திருப்பி செலுத்துவதை உறுதி செய்தல்.
- நிலையான வருமானம் தரக்தக்க இலாபகரமான வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளைக் கண்டறிதல்.
- பாலின சமத்துவம், மகளிருக்கான பல்வேறு அரசு நலத் திட்டங்களில் உள்ள உரிமைகள் மற்றும் உதவிகளை பெற வழிவகை செய்தல்.
- திட்டம் குறித்த பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை சமூக வள பயிற்றுநர், சமூக வல்லுநர்கள் மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படுதல்.



### 7.3.9. சமூக உள்ளாக்கம்

நலிவுற்றோர் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், நிலமற்றோர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஆதிப்பழங்குடியினர், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொலை தூர மற்றும் தனித்த கிராமப் பகுதியில் வாழும் நலிவுற்றோர் குடும்பங்களை அடையாளம் கண்டு சமூக உள்ளாக்கத்தின் கீழ் கொண்டுவர சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட குடும்பங்களில், கடத்தலிலிருந்து மீட்கப்பட்ட மகளிர், சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள மகளிர், திருநங்கைகள், எய்ட்ஸ் / எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தீராத நோயால் பாதிக்கப்பட்டோர் போன்றோர்களுக்கு முன்னுரிமை அளித்து சமூக உள்ளாக்கத்தின் கீழ் பயன்பெறும் விதமாக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

**2017–18** ஆம் ஆண்டு சமூக ஒருங்கிணைப்பின் கீழ் **1,444** மாற்றுத் திறனாளிக் குழுக்கள், **68** முதியோர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் **65** பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

**7.3.10. சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவிகள்**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி**

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.15,000 வீதம் நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2017–18 ஆம் ஆண்டில் தகுதியான 4,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.15,000 வீதம் மொத்தம் ரூ.600 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி**

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சமுதாய முதலீட்டு நிதியானது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாற்றப்பட்டு பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000 வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகையானது குறைந்தது 50% சுய உதவிக்



குழுக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக விடுவிக்கப்படுகிறது.

2017–18 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கான சமுதாய முதலீட்டு நிதி ரூ.50,000 வீதம் 20,650 சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் ரூ.10,325 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**இ.நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி**

மக்கள் நிலை ஆய்வின்போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000/– முதல் ரூ.25,000/– வரை தனி நபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத்திறனாளிகளின் உணவுப் பாதுகாப்புக்கும், வாழ்வாதார செயல்பாடுகளுக்கும், உடல்நலக் குறைவு அல்லது எதிர்பாரா மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது.

2017–18 ஆம் ஆண்டில் ரூ.2,072.50 இலட்சம் நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக 5,839 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ.25,000 முதல் ரூ.50,000 வரை வழங்கப்பட்டுள்ளது.

## 7.4. திறன் வளர்ப்பு

### 7.4.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களுக்கான வழிமுறைப் பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தன்னுடைய பணியாளர்களுக்கு அவசியத் தேவையாக திட்டம் குறித்த பல்வேறு கூறுகளில் பயிற்சிகள் வழங்குகின்றது. இவ்வியக்கத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை இயக்கப் பணியாளர்கள் அறிந்து கொள்ளவும் அவைகளை சீரான முறையில் செயல்படுத்தவும் இயக்கம் குறித்த கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

1. தூண்டல் பயிற்சி – I (நிறுவனக் கட்டமைப்பு)
2. தூண்டல் பயிற்சி – II
3. கருப்பொருள் சார்ந்த பயிற்சி

### 7.4.2. சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகள்

கிராம அளவில் ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்ட சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மிக முக்கியமான அங்கமாக விளங்கி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணிகளை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சிறந்த சேவை பெறுவதை உறுதிபடுத்துவதற்காக இந்த சமுதாய அமைப்புகளுக்கு தொடர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பொதுவாக இப்பயிற்சிகளின் ஆதாரமாக சுய உதவிக்குழுக்களின் நிர்வாகமும் நிதிமேலாண்மையும் திகழ்கின்றன. சமுதாயம் சார்ந்த



அமைப்புகளின் ஒருங்கிணைந்த துடிப்பான செயல்பாடுகளே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படை என்பதால் திறன் வளர்ப்பிலுள்ள கீழ்க்கண்ட அனைத்து நிலை பயிற்சிகளும் இவ்வமைப்புகளுக்கு அளிக்கப்படுகின்றன.

- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடுகள் விளக்கப் பயிற்சி
- புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்கள் மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்குக்கான பயிற்சி

### 7.4.3. முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் தொகுப்பை உருவாக்குதல்

மக்களே முன் நின்று தங்கள் வளர்ச்சியை உறுதி செய்யும் வண்ணம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு கருப்பொருள்களில் வளப்பயிற்றுநர்களை

உருவாக்குகிறது. இந்த வளப்பயிற்றுநர்கள் பல்வேறு நிலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதில் மிகச்சிறந்த செயல்திறன் படைத்த வளப்பயிற்றுநர்கள் அடையாளம் காணப்பட்டு முதன்மைப் பயிற்றுநர்களாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மைப் பயிற்றுநர்கள் பிற வளப்பயிற்றுநர்களுக்கு திட்டம் சார்ந்த கருப்பொருட்களை விளக்கும் பயிற்சியாளர்களாக செயல்படுகின்றனர். இவர்களிடம் பயிற்சி பெற்ற வளப்பயிற்றுநர்கள் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்றுநர்களாக செயல்படுகின்றனர்.

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட பயிற்றுநர்கள் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பயிற்சிகள் அளித்திடும் வல்லுநர்கள் ஆவர். இப்பயிற்றுநர்களை உருவாக்கிடும் முனைப்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சீரிய முறையில் செயல்பட்டு திட்டம் சார்ந்த பயிற்சிகள் பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்கிறது. பயிற்சிகளின் மூலம் உருவாக்கப்பட்ட பல்வேறு சமுதாய பயிற்றுனர்கள் விபரம் பின்வருமாறு.

- **சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் (CSTs) –** சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் சுய உதவிக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அக்குழுக்களின் தொடர் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திட கண்டறியப்படுகின்றனர். இவர்கள் அடிப்படையில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆவர். கிராம அளவில் துடிப்புடன் செயல்படும் சுய உதவிக் குழுவில் இருந்து



சிறப்பாக செயல்படும் உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அவ்வுறுப்பினர்கள் தொடர் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு திறன் மேம்பாடு பெற்று சுய உதவிக் குழுக்களின் கண்காணிப்பு மற்றும் அக்குழுக்களுக்கான தேவை சார்ந்த நிகழ்வுகளில் உதவி புரிகின்றனர். சுய உதவிக் குழுக்களின் பஞ்சசூத்திரம் எனப்படும் தொடர் கூட்டங்கள், சேமிப்பு, உள்கடன் வழங்குதல், கணக்கு பராமரிப்பு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றை மேற்பார்வையிடுதல் இவர்களின் முக்கிய பணியாகும். இவர்கள் சுமார் 10 முதல் 15 குழுக்களை கண்காணித்து வருகின்றனர்.

- **சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர்கள் (CDFs) –** ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் ஒருவர் என்ற முறையில் சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு சமுதாயம் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மேலாண்மைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கண்டறிந்து, நிறுவனம் சார்ந்த தேவையான மறுவாழ்வு பயிற்சிகளை வழங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளை ஒருங்கிணைத்து உதவிகள் பெற்றுத் தந்திட வழிவகை செய்வர்.

- **சமுதாய வல்லுநர்கள் – வேலை வாய்ப்பு (CP-Jobs) –** இளைஞர்களுக்கான பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகளை செவ்வனே செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது இளைஞருக்கான திறன் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இப்பயிற்சிகளை வழங்குவதற்காக கிராமங்கள் தோறும் இளைஞர்களை திரட்டுவதற்கு சமுதாய வல்லுநர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வல்லுநர்கள் கிராம அளவில் தகுதிடைய இளைஞர்களைத் தேர்வு செய்வதோடு அவர்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை திரட்டி நிர்வகிக்கிறார்கள். அந்த தகவல்களின் அடிப்படையில் தகுதியான இளைஞர்களை அவர்கள் விருப்பப்படும் தொழில் சார்ந்த பயிற்சி பெற வகை செய்வதோடு அவர்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கின்றனர்.

- **சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBCs) –** சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பை ஏற்படுத்தி செயல்படுத்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் தொகுப்புகளில் (Clusters) தொகுப்பு ஒன்றுக்கு 2 நபர்கள் வீதம் சிறப்பாக செயல்படும் குழுக்களின் உறுப்பினர்கள் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு தங்கள் பணியினை திறம்பட செய்திடும் விதமாக வங்கி இணைப்பு, நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிதகவல்கள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின் மூலம் இச்சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பை ஏற்படுத்துவதுடன், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் காப்பீடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை குறித்த கூட்டங்கள் நடத்தி அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொள்கின்றனர்.



### 7.4.4. வங்கியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அதன் பல்வேறு பங்கேற்பாளர்களுக்கு சுய உதவிக் குழு – வங்கி இணைப்பை மேம்படுத்துவதில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. மேலும், சுய உதவிக் குழு – வங்கி இணைப்பை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கேற்பாளர்களான வங்கி மேலாளர்களின் ஆதரவு இன்றியமையாதது.

ஆகையால், வங்கியாளர்களுக்கு மகளிர் சுய உதவிக்குழு வங்கிக்கடன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நிதி உள்ளாக்கம், நிதி மேலாண்மை குறித்த கல்வியறிவு போன்ற பயிற்சிகளை கருத்தரங்குகள் மற்றும் சிறப்பு கூட்டங்கள் வாயிலாக ஏற்படுத்தி வருகிறது. மாவட்ட

அளவில் வங்கியாளர்களுக்கு சிறப்பு கூட்டங்கள் மற்றும் கருத்துப் பட்டறை மூலம் பயிற்சி வழங்குவதற்காக வளப் பயிற்றுநர்களின் தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**7.4.5 வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு பயிற்சி**

மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிர்வாக மேம்பாடு மற்றும் நிதிமேலாண்மை குறித்து பயிற்சி வழங்கப்படும். இந்த கூட்டமைப்புகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்ட உயர் நிலை சமுதாயம் சார்ந்த நிறுவனங்களாக விளங்கும்.

இவ்வமைப்புகள் சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பயிற்சி வழங்கும் வட்டார அளவிலான பயிற்சி மையங்களாகவும் (BLTCs) செயல்படும். இதன் மூலம் சமுதாய வல்லுநர்களுக்கு இயக்கம் குறித்த பயிற்சி வழங்கும் வாய்ப்பு போதிய அளவில் கிடைக்கப்பெறும். இம்மையங்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்துவதில் உறுதுணையாக இருக்கும். வட்டார அளவிலான பயிற்சி மையங்களில் வழங்கப்படும் திறன் வளர்ப்பு சார்ந்த பயிற்சிகளுக்காக 15% சேவைக் கட்டணம் பெறப்படும். வட்டார அளவிலான பயிற்சி மையங்கள் எதிர்காலத்தில் சுய சார்பு மிக்க அமைப்புகளாக உருவெடுப்பதோடு பிற நிறுவனங்களுக்கும் பயிற்சிகள் வழங்கி நிலையான, நீடித்த வளர்ச்சி பெறும்.



**7.4.6. 2017–18 ஆம் ஆண்டில் திறன் வளர்ப்பு செயல்பாடுகள்:**

- 12,118 சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்களுக்கு சுய உதவிக் குழு புத்தக பராமரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்குகான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றாம் கட்ட மாவட்டங்களிலுள்ள 5,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- நிதி கல்வியறிவு குறித்து 2,480 வங்கியாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளும் பயிற்சி பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வட்டார அளவிலான 2,000 வழிநடத்துநர்களுக்கு இத்திட்டத்தின் செயல்பாடுகளுக்கான பயிற்சி (மேலாண்மை தகவல் அமைப்பு, டிடியூ–ஜிகேஒய், இ–மதி, ப்ராஜக்ட்– லைஃப், மதி அங்காடி, மகளிரை குடும்பத் தலைவியாக கொண்ட குடும்பம்) வழங்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழு புத்தகப் பராமரிப்பு குறித்து 5,854 கிராம வறுமை ஒழிப்புச் சங்களிலுள்ள 7,562 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகம் மற்றும் நிதி ஆளுமை குறித்த பயிற்சி 30,568 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படும் 507 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் உள்ள 10,140 உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் நான்கு மாவட்டத்திலுள்ள 450 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக பிரதிநிதிகளுக்கு கூட்டமைப்புகளின் ஆளுமை மற்றும் நிதி நிர்வாகம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நான்கு மாவட்டத்திலுள்ள 507 கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நிறுவன அமைப்புகள் மற்றும் நிர்வாகம் குறித்து பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 7.5. திறன் மேம்பாடு மற்றும் பணியமர்வு திட்டம்

#### 7.5.1. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது ஊரக இளைஞர்களின் திறனை மேம்படுத்தி 2023ஆம் வருடத்திற்குள் இம்மாநிலம் திறன் மேம்பாட்டில் முழுமை பெறும் நோக்கோடு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது 2012 முதல் 2014ஆம் ஆண்டுகளில்



'ஆஜீவிகா' திறன் பயிற்சி திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு, 2014–2015ஆம் நிதியாண்டு முதல் "தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா" என்ற பெயரில் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊரக ஏழைக் குடும்பங்களின் வறுமையை ஒழிப்பதில் இத்திட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய, மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டமானது மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் வழங்கப்படும் நிரந்தர பதிவு எண் (PRN) பெற்ற அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| ஆட்டோ மொபைல் | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் |
| சுகாதாரம் | மின் மற்றும் மின்னணு |
| தோல் மற்றும் தோல் பொருட்கள் | கட்டுமானம் |
| தகவல் தொழில்நுட்பம் | விவசாய பண்ணை உபகரணங்கள் பராமரிப்பு |
| சில்லறை வர்த்தகம் | வெல்டிங் |
| ஆயத்த ஆடைகள் | தொழிற்சாலைகளின் உற்பத்தி சம்பந்தமானவை |
| வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு | தளவாடங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மை |
| அழகு கலை | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி |

**திறன் பயிற்சியின் (DDU-GKY) தனித்துவ சிறப்பம்சங்கள்:**

1) வேலை வாய்ப்புச் சந்தையில் நிலவுகின்ற வாய்ப்புகளின் அடிப்படையிலான பணியமர்வுடன் கூடிய பயிற்சித் திட்டம்.
2) பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களில் குறைந்தது 70 விழுக்காடு மாதாந்திர ஊதிய வேலையில் பணியமர்த்தப்பட வேண்டும்.
3) பணியமர்வுக்குத் தேவையான திறனுக்கு ஏற்றவாறு 3 முதல் 12 மாதங்கள் வரை பயிற்சிகள் வழங்கப்படும்.
4) உண்டு உறைவிட வசதியுடனும் இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.
5) இத்திட்டத்தில் 18 முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்கள் பயன் அடைகின்றனர். பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர்கள் மற்றும் திருநங்கைகளுக்கான அதிக பட்ச வயது வரம்பு 45 ஆகும்.
6) இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்கள் பின்வருமாறு: அட்டவணை வகுப்பினர் 50%, சிறுபான்மையினர் 15%, மாற்றுத் திறனாளிகள் 3%, பெண்கள் 33% (அனைத்து பிரிவினரையும் சேர்த்து)
7) இத்திட்டத்தின் கீழ் இளைஞர்களை தேர்வு செய்வதற்கு களப்பணியாளர்களான சமூக



வல்லுநர்கள் (வேலைவாய்ப்பு) மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (திறன்) பங்களிப்பு செய்வதோடு தொடர்ந்து சமுதாயம் சார்ந்த கண்காணிப்பையும் மேற்கொள்கின்றனர்.

8) திட்டம் பற்றிய விபரங்கள் பயிற்சியாளர்களுக்கு மட்டுமல்லாது அவர்களது பெற்றோர்களுக்கும் தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
9) மென்திறன், ஆங்கிலத்தில் பேசும் திறன், அடிப்படை கணிணி மற்றும் பணியிடப் பயிற்சி (OJT) ஆகியவை முக்கிய பாடத்திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
10) பயிற்சியினையும் மதிப்பீட்டினையும் நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு அரசு நிறுவனங்களான தொழிற்பயிற்சி தேசிய குழுமம் (NCVT) மற்றும் துறை திறன் குழுமம் (SSC) மூலமாக தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
11) பயிற்சி நிறைவடைந்தபின் குறைந்தது ரூ.6,000 அல்லது மாநிலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதித் திறன் பெற்றவர்களுக்கான குறைந்த பட்ச மாத ஊதியம், இவற்றில் எது அதிகமோ அதற்கு குறையாத அளவிலான ஊதியத்துடன் பணியமர்வு செய்யப்பட வேண்டும்.
12) பயிற்சி பெற்றோர் பயிற்சிக்குப் பின்னர் தொடர்ந்து பணியில் நீடித்தல், பணியமைப்பில் கூடுதல் ஊதியம் பெற்று முன்னேறுதல் மற்றும் பணிபுரியும் நகரத்தில்

தங்குவதற்கு வசதியாக இடம் பெயர்வு ஆதரவு மையங்கள் (MSC) ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

13) பணியமர்வானது உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14) பயிற்சி பெற்ற இளைஞர்கள், பணியில் நீடித்திருப்பதை உறுதி செய்வதற்காக பணியமர்வுக்கு பின்னர் ஒரு வருடத்திற்கு தொடர் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

**2012–13** முதல் இதுவரை **40,604** இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் **31,642** இளைஞர்கள் கீழ்க்கண்ட விபரப்படி பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 7.4**
**மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை (2012 – 13 முதல் 2017–18)**

| வ. எண் | மாவட்டம் | இலக்கு | சாதனை | பணியமர்வு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 385 | 285 | 221 |
| 2 | கோயம்புத்தூர் | 3,550 | 2,280 | 1,753 |
| 3 | கடலூர் | 1,660 | 1,560 | 1,288 |
| 4 | தர்மபுரி | 425 | 325 | 282 |
| 5 | திண்டுக்கல் | 1,385 | 1,180 | 910 |
| 6 | ஈரோடு | 1,950 | 1,745 | 1,529 |
| 7 | காஞ்சிபுரம் | 5,130 | 1,944 | 1,560 |
| 8 | கன்னியாக்குமரி | 620 | 620 | 366 |
| 9 | கரூர் | 750 | 510 | 445 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,560 | 927 | 749 |
| 11 | மதுரை | 1,860 | 730 | 302 |
| 12 | நாகப்பட்டினம் | 1,207 | 973 | 716 |
| 13 | நாமக்கல் | 1,756 | 1,156 | 913 |
| 14 | நீலகிரி | 450 | 345 | 271 |
| 15 | பெரம்பலூர் | 592 | 492 | 414 |
| 16 | புதுக்கோட்டை | 1,790 | 1,410 | 1,072 |
| 17 | இராமநாதபுரம் | 1,200 | 1,200 | 952 |
| 18 | சேலம் | 1,530 | 951 | 752 |
| 19 | சிவகங்கை | 980 | 840 | 712 |
| 20 | திருவண்ணாமலை | 3,335 | 2,133 | 1,675 |
| 21 | தஞ்சாவூர் | 1,533 | 1,513 | 1,166 |
| 22 | தேனி | 718 | 613 | 542 |
| 23 | திருவள்ளூர் | 3,295 | 1,760 | 1,241 |
| 24 | தூத்துக்குடி | 250 | 150 | 88 |
| 25 | திருநெல்வேலி | 1,480 | 980 | 650 |
| 26 | திருப்பூர் | 3,350 | 2,850 | 2,553 |
| 27 | திருவாரூர் | 845 | 745 | 521 |
| 28 | திருச்சி | 1,300 | 1,060 | 670 |
| 29 | வேலூர் | 4,215 | 2,357 | 1,637 |
| 30 | விழுப்புரம் | 4,150 | 1,800 | 1,450 |
| 31 | விருதுநகர் | 1,810 | 1,570 | 1,302 |
| **புதுவாழ்வுத் திட்டம்** | | **3,600** | **3,600** | **2940** |
| **மொத்தம்** | | **58,661** | **40,604** | **31,642** |

அட்டவணை 7.5
திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின் கீழ்
தொழில் வாரியான இலக்கு மற்றும் சாதனை
(2012–13 முதல் 2017–18 வரை)

| வ. எண் | தொழில் வர்த்தகம் | பயிற்சி பெற்றவர்கள் | பணியமர்வு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தொழில்கள் | 3,753 | 3,034 |
| 2 | தகவல் தொழில்நுட்பம் | 13,013 | 11,028 |
| 3 | ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை | 9,423 | 7,516 |
| 4 | விருந்தோம்பல் | 2,837 | 2,214 |
| 5 | கட்டுமானம் | 771 | 540 |
| 6 | ஆட்டோமொபைல் | 3,903 | 2,717 |
| 7 | அழகுக்கலை | 786 | 653 |
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 8 | 7 |
| 9 | சுகாதாரம் | 1,921 | 1,247 |
| 10 | சில்லறைவணிகம் | 1,703 | 1,067 |
| 11 | தோல் பொருட்கள் | 270 | 233 |
| 12 | ஓட்டுநர் | 2,115 | 1,386 |
| 13 | வாகனத்துறை | 66 | 0 |
| 14 | மின் மற்றும் மின்னணு சார்ந்தவை | 35 | 0 |
| **மொத்தம்** | | **40,604** | **31,642** |

* மீதமுள்ள இளைஞர்களுக்கு சம்மந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வேலையில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2016–17ம் ஆண்டு முதல் பயிற்சி நிறுவனங்கள் மூன்றாண்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. 2016–17 ஆம் ஆண்டு முதல் 2018–19 ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 44,416 இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 23 நிறுவனங்களுக்கு 26,631 நபர்களுக்கு பயிற்சி வழங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



### 7.5.2. வேலை வாய்ப்பு முகாம் வாயிலாகப் பணியமர்வு

தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் வேலை தேடுபவர்க்கும் வேலை தருபவர்க்கும் தொடர்பு ஏற்பட வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகுகளால் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் பங்கேற்கும் நிறுவனங்கள், வழங்கப்படும் பணி விபரங்கள், முகாம்கள் நடக்கும் நாள், இடம் போன்ற தகவல்கள் வேலை தேடும் இளைஞர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு தகவல் தொடர்புகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

முகாம்களில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு பணியில் சேரும் நிறுவனங்களிலுள்ள நன்மைகள், வசதிகள் குறித்து விரிவாக தெரிவிக்கப்படுகிறது. முகாம்கள் நடைபெறும் பொழுது தேவையான விவரங்களை வேலை தேடி வருபவர்களுக்கு வழங்கி அவர்களது கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சரியான வேலையினை தேர்வு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

2016–17ஆம் நிதியாண்டில் 366 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதன் மூலம் 35,660 நபர்களுக்கு பணியமர்வு பெறப்பட்டுள்ளது. 2017–18ஆம் நிதியாண்டில் இதுவரை மாவட்ட அளவில் 48 முகாம்களும், வட்டார அளவில் 289 முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம்

5,217 நிறுவனங்களில் மொத்தம் 41,657 நபர்கள் பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 7.6**
**வேலைவாய்ப்பு முகாம்கள் 2017–18**

| வ. எண் | மாவட்டம் | இலக்கீடு | | சாதனை | | கலந்து கொண்ட விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட அளவில் | வட்டார அளவில் | மாவட்ட அளவில் | வட்டார அளவில் | முகாமில் கலந்து கொண்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | 1 | 6 | 1 | 5 | 62 | 782 |
| 2 | கோயம்புத்தூர் | 2 | 12 | 2 | 10 | 386 | 1,413 |
| 3 | கடலூர் | 2 | 13 | 2 | 13 | 291 | 1,728 |
| 4 | தர்மபுரி | 1 | 8 | 0 | 8 | 93 | 276 |
| 5 | திண்டுக்கல் | 2 | 14 | 2 | 10 | 262 | 1,386 |
| 6 | ஈரோடு | 2 | 14 | 2 | 5 | 409 | 2,174 |
| 7 | காஞ்சிபுரம் | 2 | 13 | 1 | 11 | 42 | 1,351 |
| 8 | கன்னியாக்குமரி | 1 | 9 | 1 | 4 | 56 | 1,184 |
| 9 | கரூர் | 1 | 8 | 1 | 8 | 65 | 1,009 |
| 10 | கிருஷ்ணகிரி | 1 | 10 | 1 | 10 | 68 | 446 |
| 11 | மதுரை | 2 | 13 | 2 | 9 | 143 | 2,215 |
| 12 | நாகப்பட்டினம் | 2 | 11 | 2 | 11 | 220 | 1,907 |
| 13 | நாமக்கல் | 3 | 15 | 3 | 15 | 321 | 2,195 |
| 14 | நீலகிரி | 1 | 4 | 1 | 4 | 105 | 427 |
| 15 | பெரம்பலூர் | 1 | 4 | 1 | 4 | 87 | 368 |
| 16 | புதுக்கோட்டை | 2 | 13 | 1 | 10 | 87 | 712 |
| 17 | இராமநாதபுரம் | 2 | 11 | 2 | 8 | 41 | 235 |
| 18 | சேலம் | 3 | 20 | 0 | 2 | 15 | 217 |
| 19 | சிவகங்கை | 2 | 12 | 2 | 9 | 160 | 1,745 |
| 20 | திருவண்ணாமலை | 3 | 18 | 2 | 16 | 82 | 2,245 |
| 21 | தஞ்சாவூர் | 2 | 14 | 2 | 14 | 296 | 1,299 |
| 22 | தேனி | 1 | 8 | 1 | 5 | 152 | 625 |
| 23 | திருவள்ளூர் | 2 | 14 | 2 | 12 | 43 | 679 |
| 24 | திருவாரூர் | 1 | 10 | 1 | 5 | 48 | 693 |
| 25 | தூத்துக்குடி | 2 | 12 | 2 | 12 | 98 | 1,622 |
| 26 | திருநெல்வேலி | 3 | 19 | 2 | 3 | 208 | 745 |
| 27 | திருப்பூர் | 2 | 13 | 0 | 6 | 114 | 439 |
| 28 | திருச்சி | 2 | 14 | 2 | 13 | 478 | 1,571 |
| 29 | வேலூர் | 3 | 20 | 3 | 20 | 219 | 2,319 |
| 30 | விழுப்புரம் | 3 | 22 | 2 | 19 | 412 | 6,119 |
| 31 | விருதுநகர் | 2 | 11 | 2 | 8 | 154 | 1,531 |
| | **மொத்தம்** | **59** | **385** | **48** | **289** | **5,217** | **41,657** |

## 7.6. நிதி உள்ளாக்கம்

### 7.6.1. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு

சுய உதவிக் குழு – வங்கி இணைப்புத் திட்டத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. போதுமான கடனுதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் வழங்குவதன் வாயிலாக ஏழை மகளிர் கடன் வலையிலிருந்து விடுபடுவதோடு அல்லாமல், வருவாய் ஈட்டும் தொழில்களைத் தொடங்கி அதன் மூலம் தங்களது குடும்ப வருமானத்தை அதிகரித்து வறுமையிலிருந்து வெளிவர உதவுகின்றன.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தங்களின் பொருளாதார செயல்பாட்டை உயர்த்திக் கொள்ள வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்தி போதுமான அளவு கடன்களைக் குறைந்த வட்டி விகிதத்தில் தொடர்ந்து பெறுவதற்கு வங்கிக்கடன் இணைப்பு உதவுகின்றது.

நியாயமான வட்டி விகிதத்தில் குறித்த நேரத்தில் தேவையான கடன் உதவியினை இத்திட்டத்தின் கீழ் பெறுவதின் மூலம் மகளிரின் பொருளாதார ஆற்றல் இம்மாநிலத்தில் மேம்பட வழிவகை ஏற்பட்டுள்ளது.

**2017–18**ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக ரூ.**7,000** கோடி நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரையில் **2,72,089** சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.**8,332** கோடி வழங்கி சாதனை எய்தப்பட்டுள்ளது. கடந்த **7** ஆண்டுகளில் மட்டும் ரூ.**41,180** கோடி பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 7.6.2. சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம்

மத்திய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் சுய உதவிக் குழுக்களிலுள்ள ஏழை எளிய மகளிர் வறுமையிலிருந்து விடுபட உதவும் வகையில் நிதி உள்ளாக்க குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வட்டி மானியத் திட்டத்தை **2013–14**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து பெறும் **3** லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையினை முறையாக திருப்பிச் செலுத்தும் போது அக்குழுக்களுக்கு **7** விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக **5.5** விழுக்காடு வரை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.



வட்டி மானியத் திட்டம் மத்திய அரசால் தர்மபுரி, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய **9** மாவட்டங்களில் நேரடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள **22** மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எந்தவித தாமதமுமின்றிக் கடன் தவணையை முறையாக வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் சுய உதவிக் குழுக்கள் வட்டி மானிய திட்டத்தின் கீழ் தகுதி பெறுவர்.

இதுவரை பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்ற **1,29,408** சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**27.31** கோடி வட்டி மானியத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. **2017–18**ஆம் ஆண்டு, **9,488** சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக ரூ.**1.46** கோடி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் துறை வங்கிகள் மூலம் வழங்கப்படும் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களின் விபரங்களையும் வட்டி மானியத் திட்டத்தில் சேர்த்து பயன் பெற ஏதுவாக மாநில அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.6.3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

சுய உதவிக் குழுக்களின் பெருகும் தேவைகளையும் மற்றும் அவர்களுடைய இருப்பு நிதி ஆதாரங்களையும் இணைக்கும் வகையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடனைப் பெற்று தேவையான கடன் வசதிகளை வழங்குவதை உறுதி செய்கிறது. கடந்த 7 ஆண்டுகளில் 597 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக ரூ.140.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2017–18ஆம் ஆண்டு 34 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.11.85 கோடி பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 7.7. வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழிலில் ஈடுபடும் மகளிரின் வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு பல்வேறு வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவ்வாழ்வாதார திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



### 7.7.1. பண்ணைத் தொழில் (Farm Activity)

**முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்**

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் 30 மகளிரை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பயிர் மற்றும் பிற தொழில்களுக்கு ஏற்றவாறு திறன் பயிற்சி மற்றும் நவீன தொழில் நுட்ப பயிற்சி விவசாயத்துறை மற்றும் பிற துறை மூலம் இணைந்து உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதுவரை, 768 முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு 30,720 பெண் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். விவசாய உற்பத்தியாளர் குழுக்களைப் போலவே பண்ணை சார்ந்த ஆடு மற்றும் மாடு வளர்ப்பு உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு குழுவிற்கும், தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், இடு பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக ரூ.30,000 நிதி உதவி அளிக்கப்படுகிறது.

மேலும், கூடுதலாக 3,044 கிராம ஊராட்சிகளில் பண்ணை சார்ந்த தொழில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 76,100 பயனாளிகள் பயன் பெறுவர். ஒரு ஊராட்சிக்கு ஒரு விவசாய உற்பத்தியாளர் குழு என்ற அடிப்படையில், 3,044 விவசாய உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்படும்.

இக்குழுக்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்கு ரூ.40,000 முதல் ரூ.1,00,000 வரை ஆதார நிதி வழங்கப்படும்.

### 7.7.2. பண்ணை சாரா தொழில் மேம்பாடு: (Non - Farm Activity)

பண்ணை சாரா தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, இத்திட்டமானது முதல் கட்ட மாவட்டங்களில் 800 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 10 நபர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் புதிதாக தொழில் தொடங்கவோ, ஏற்கனவே செய்து வரும் தொழிலை மேம்படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000 கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 8,000 பயனாளிகளுக்கு ரூ.8.00 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், 160 சிறு தொழில் நிறுவனங்கள் நிறுவிட அல்லது மேம்படுத்திட ஒரு அலகிற்கு ரூ. 2.90 இலட்சம் கடனுதவி வழங்கப்படும். ஒவ்வொரு அலகிலும் 15 பயனாளிகள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.19,000 (ரூ.15,000 ஆதார நிதி மற்றும் ரூ.4,000 திறன் வளர்ப்பு பயிற்சி) வழங்கப்படுகிறது. இக்கடனுதவி பெற்ற 2 மாதங்களுக்கு பிறகு பயனாளிகள் தொகையினை திரும்ப செலுத்த தொடங்குவர்.



### 7.7.3. வாழ்வாதார சமூக வள பயிற்றுநர்கள்:

தேசிய ஊரக வாழ்வாதார வழிகாட்டு நெறிமுறைகளின்படி வாழ்வாதார நடவடிக்கைகளை மேலாண்மை செய்திடும் சமூகம் சார்ந்த ஒருவரே வாழ்வாதார சமூக வள பயிற்றுநராக செயல்படுவார். ஒரு ஊராட்சிக்கு 2 நபர்கள் வீதம் மொத்தம் 1,536 சமூக வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு ஊராட்சிகளில் பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழில்களில் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், 3,044 விவசாயிகள் உற்பத்தி குழுக்களை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும் 6,088 சமூக வள பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.7.4. பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் – மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக “பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மகளிரின் பங்கேற்பினை விவசாயத் தொழிலில் அதிகப்படுத்துவதும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 வட்டாரங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

மொத்தம் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இது வரை 14,800 பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கென பெறப்பட்ட ரூ.3.99 கோடி நிதியில் ரூ.3.52 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மூன்று வருடங்களில் 12,000 பெண் விவசாயிகள் பயனடையும் விதமாக ரூ.8.39 கோடியில் கரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 4 வட்டாரங்களில் 2வது கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 7.7.5.ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான (WHH) சிறப்பு வாழ்வாதார திட்டம்

2011 ம் ஆண்டு மக்கள்தொகையின்படி, 25.88 இலட்சம் குடும்பங்கள் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் புதிய திட்டம் அரசு ஆணை எண் 82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சிஜிஎஸ் 3) துறை நாள் 25.5.2015 மூலம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதி ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ஏற்கனவே செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதார இயக்க திட்டங்களின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது. தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 2,522 மகளிருக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு ரூ.3.14



கோடி நிதி சிறப்பு ஒதுக்கீடாக செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,342 மகளிர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளை சார்ந்த 81,209 மகளிர் பிற திட்ட இணைப்புகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 7.7.6. கிராமிய தொழில் முனைவோர் திட்டம் (Start-Up Village Entrepreneurship Programme)

கிராமிய தொழில் முனைவோர் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகள், தங்களின் வறுமை நிலையிலிருந்து முன்னேறுவதற்கும், தொழில் தொடங்கவும், அத்தொழிலில் நிலையாக நிற்கும் வகையில் அவர்களுக்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது கிராமிய தொழில் முனைவோருக்கு தொழில்திறன் மேம்பாடு, பட்டறிவு, துவக்கநிலைக் கடன் மற்றும் தொழிலுக்கான உதவி ஆகியன தொழிலின் முக்கிய கட்டமாகிய முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும்.

இத்திட்டமானது தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்ளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்போரூர் வட்டாரத்திலும், விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலும் தலா 2,400 தொழில் நிறுவனங்கள் நிறுவப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு நான்கு ஆண்டுகளுக்கு ரூ.11.96 கோடி ஆகும். இந்நிதி 60:40 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகளால்

பகிர்ந்துகொள்ளப்படும். இதுவரை ரூ.60 இலட்சம் பெறப்பட்டு அதில் ரூ.20 இலட்சம் திட்டத்தினைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அடிப்படை ஆய்வுகள் மற்றும் திறன் பயிற்சிக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 7.7.7. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

#### அ) கண்காட்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை கண்காட்சிகள், சந்தைகள் மற்றும் வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்திட தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இந்த கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு மேம்பட்ட சந்தைக்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வணிகத் திறனுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப் பொருட்கள், செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறுதானியங்கள் போன்ற மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்திடவும் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றின்



திறனை வளர்ப்பதற்கும் இக்கண்காட்சிகள் உதவுகின்றன. 2017–18 ஆம் ஆண்டில் நவராத்திரி கண்காட்சி நடத்தப்பட்டு இதில் 120 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.55.34 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்து பயனடைந்தனர்.

மாநில அளவிலான கண்காட்சிகளுடன் மாவட்ட அளவிலும் உள்ளூர் திருவிழாக்கள் மற்றும் பிற முக்கிய நிகழ்வுகளின் போதும் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. 2017–18 ஆம் ஆண்டில் 50 மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்தப்பட்டதில் 1,181 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு ரூ.230.70 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

சாராஸ் (SARAS) என்பது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற ஊரக கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் நாடு முழுவதுதிலிருந்தும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்த சிறந்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. 2017–18ஆம் ஆண்டில் 13 மாநிலங்களில் நடைபெற்ற சாராஸ் கண்காட்சிகளில் தமிழ் நாட்டைச் சார்ந்த 602 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு ரூ.113.16 இலட்சத்திற்கு பொருட்கள் விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**ஆ) மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்**

தேசிய மற்றும் மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தியும், மாவட்ட அளவில் உள்ள விற்பனை வளாகங்கள் மற்றும் விற்பனை அங்காடிகளை மேலாண்மை செய்தும் வருகின்றன. மாவட்ட அளவில் உள்ள வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**இ) கல்லூரிச் சந்தைகள்**

மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச் சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளன. இச்சந்தைகள் சுய உதவிக் குழுக்களுக்கு நல்ல வருவாய் தருவதோடு மட்டுமின்றி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தற்போதைய சந்தைத் தேவைகளை அறிந்து கொள்வதற்கும் உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் வாய்ப்பாக உள்ளன.



2017–18 ஆம் ஆண்டில் 126 கல்லூரிச் சந்தைகள் மூலம் 3,173 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்குகொண்டு ரூ.224.73 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

**ஈ) மதி அங்காடி (Mathi KIOSK)**

மதி அங்காடிகள் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் 137 மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான மூலிகைப் பொருட்கள், அலங்கார சணல் பொருட்கள், கைவினைப் பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள், கைவினை பொம்மைகள் போன்றவை இதுவரை மதி அங்காடிகள் மூலம் ரூ.247.75 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**உ) சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 54 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்கு

தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி நாப்கின்களை விற்பனை செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 458, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (பி2) நாள்.08.12.2017ன் படி ஒரு வருடத்திற்கு 36,00,000 சானிடரி நாப்கின் பாக்கெட்டுகள் விநியோகம் செய்யப்படும்.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் நாப்கின் பாக்கெட் ஒன்றிற்கு ரூ.21 வீதம் சுகாதாரத்துறை கொள்முதல் செய்யும். மாதம் ஒன்றுக்கு 3 இலட்சம் வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.7.56 கோடி மதிப்பிலான 36 இலட்சம் சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை தயாரித்து வழங்குவதன் மூலம் 54 சுய உதவிக் குழுக்களிலுள்ள 500க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறுவர்.

**7.8. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS)**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஒவ்வொரு ஆண்டும், திட்டம் குறித்த சமூக பொருளாதார தகவல்களை பெருமளவில் திரட்டுகிறது. இந்தத் தகவல்கள் பல்வேறு சேவைகளை பயனுள்ள வகையில் வழங்குவதற்கும், கொள்கைகளை உருவாக்குவதற்கும் இன்றியமையாததாய் உள்ளன. எனவே, இந்நிறுவனத்தின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஏற்கெனவே உள்ள தகவல் தொகுப்புகளை ஒருங்கிணைக்கவும் மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு முறையை சீரமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



**7.8.1 இ–மதி (eMathi) வலைத்தளம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்காக ஒரு தனிப்பட்ட மாநில மேலாண்மை தகவல் அமைப்பு வலைத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டு 2016–17 ஆம் ஆண்டு 3 வட்டாரங்களில் பரீட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட்டது. இந்த இ–மதி வலைத்தளம் சுய உதவிக்குழுக்கள், கூட்டமைப்புகள் மற்றும் வறுமை ஒழிப்புச் சங்கங்களின் அடிப்படை தகவல்கள் மற்றும் பரிவர்த்தனைகளை கையாளும் வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வலைத்தளம் 2018–19 ஆம் ஆண்டில் முழுமையாக செயல்படும் வண்ணம் குழுக்களின் சேமிப்பு, வங்கிக் கடன், கடன் திருப்பம் மற்றும் புத்தக பராமரிப்பு விவரங்கள் ஆகிய அனைத்தும் இதில் பதிவேற்றம் செய்து வங்கிக் கடன் இணைப்பு பெறப்படுவதை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**7.8.2. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் – மேலாண்மை தகவல் அமைப்பு**

சுய உதவிக்குழு விவரங்கள் பதிவேற்றம், ஆதார் எண்கள் இணைப்பு, நிதி விடுவிக்கப்படுதல் மற்றும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல் போன்றவற்றிற்காக தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மேலாண்மை தகவல் அமைப்பிற்கான வலைத்தளம் ஒன்றை உருவாக்கி நிறுவியுள்ளது. இந்த வலைத்தளத்தில் உறுப்பினர்களின் விவரங்கள் உள்ளிட்ட சுய உதவிக்குழுவின் அடிப்படை விவரங்கள் அனைத்தும் பதிவு

செய்யப்படுகிறது. சுய உதவிக்குழு உறுப்பினர்களுடைய ஆதார் எண்களும் இவ்வலைத்தளம் வாயிலாக இணைக்கப்படுகிறது. **2018–19** ஆம் ஆண்டில் இந்த தகவல் தொகுப்புடன் 'இ–மதி' **(eMathi)** வலைத்தளம் செவ்வனே ஒருங்கிணைக்கப்படும்.

### 7.8.3 பரிவர்த்தனை அடிப்படையிலான சுய உதவிக் குழுக்களின் மின்னணு கணக்கியல் அமைப்பு (TBSDAS):

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், கணக்கியல் மற்றும் நிதி மேலாண்மை பற்றிய விவரங்களை உடனுக்குடன் மின்னணு முறையில் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட "பரிவர்த்தனை அடிப்படையிலான சுய உதவிக் குழுக்களின் மின்னணு கணக்கியல் அமைப்பானது" தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் சிறப்பு முயற்சியாகும். சுய உதவிக் குழுக்களை கண்காணிக்கவும் மற்றும் வலுப்படுத்தவும் இவ்வமைப்பானது **385** வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2018–19** ஆம் ஆண்டில் இந்த அமைப்பில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து சுய உதவிக் குழுக்களின் பரிவர்த்தனை தகவல்கள் சேகரிக்கப்பட்டு இ–மதி **(eMathi)** வலைத்தளத்தில் ஒருங்கிணைத்து குழுக்கள் வலுப்படுத்தப்படும்.

### 7.9. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

தீன் தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது மத்திய மற்றும் மாநில



அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை அடிமட்ட நிலையிலிருந்து லாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் நோக்கமாக நகர்ப்புற உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை படிப்படியாக உயர்த்தித் தருவது, மேலும் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் நிதி ஆதாரங்களின் மூலம் கடன், சமூக பாதுகாப்பு மற்றும் திறன் வளர்ப்பின் மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுகிறது.

**திட்ட உட்கூறுகள்**

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)
2. வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி (EST&P)
3. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)
4. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)

5. நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் (SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH) மற்றும்
7. புதிய முயற்சிகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP)

**அட்டவணை 7.7**

**2017–18 ஆம் ஆண்டின் சாதனை விபரம்**

| வ. எண் | விபரம் | சாதனை |
|---|---|---|
| 1 | நகர்ப்புறங்களில் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் (எண்ணிக்கை) | 9733 |
| 2 | சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல் (எண்ணிக்கை) | 7925 |
| 3 | சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்கிய தொகை (ரூ. கோடியில்) | 7.24 |
| 4 | சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெற்ற தனி நபர்கள் எண்ணிக்கை | 9284 |
| 5 | சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தனி நபர்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்) | 55.70 |
| 6 | சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெற்ற குழுக்கள் எண்ணிக்கை | 14986 |
| 7 | சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குழுக்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்) | 269.75 |
| 8 | வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வு பயிற்சியின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கை | 9874 |
| 9 | நகர்புற வீடற்றோர்க்கு உறைவிடம் (எண்ணிக்கை) | 115 |
| 10 | நகர்புற நடைபாதை வியாபாரிகளுக்கான நலத் திட்டம் (எண்ணிக்கை) | 1,16,431 |

## 7.10. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இதர திட்டங்கள்

### 7.10.1. விருதுகள்

சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும் அதன் முக்கிய திட்டப் பங்காளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பல விருதுகள் வழங்கப்படுகின்றன.



**அ) சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள்**

சுய உதவிக் குழுக்களுக்கிடையே சிறந்த நிர்வாகம் மற்றும் சமூக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுகள் சிறப்பாக செயல்படுபவர்களை பெருமைப்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சுய உதவிக் குழுக்களுக்கும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 3 சுய உதவிக் குழுக்களுக்கும், வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

**விருதுகள் மற்றும் ரொக்கப் பரிசுகளின் விபரம்**

| வ. எண். | விருதுகளின் பெயர் | பரிசுகள் விபரம் |
|---|---|---|
| 1. | **சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருது** | |
| அ | மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 10 சுய உதவிக் குழுக்கள் | தலா ரூ. 1 இலட்சம் வீதம் |
| ஆ | மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்கள் | தலா ரூ. 25,000 வீதம் |

| வ. எண். | விருதுகளின் பெயர் | பரிசுகள் விபரம் |
|---|---|---|
| இ | வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் 1 சுய உதவிக் குழு | சான்றிதழ் |

| 2. | சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருது | |
|---|---|---|
| அ | மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | தலா ரூ. 3 இலட்சம் வீதம் |
| ஆ | மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு | ரூ. 1 இலட்சம் |

## ஆ) வங்கிகளுக்கான விருதுகள்

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு முழு ஆதரவு நல்கி அவைகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வங்கிகளின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்க கீழ்க்கண்ட விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வங்கிகளுக்கான விருதுள் மற்றும் ரொக்கப் பரிசுகள்**

| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| அ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு – நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| ஆ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட – சுய உதவிக் குழு / பெண்களுக்கான தனி வங்கிக்கிளை விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாவது பரிசு – ரூ. 75,000/– |
| இ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட – பிற வங்கிக் கிளை விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாவது பரிசு – ரூ.75,000/–<br>மூன்றாம் பரிசு – ரூ.50,000/– |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | ஒரு நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |



| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவது பரிசு – ரூ.10,000/–<br>மூன்றாவது பரிசு – ரூ.5,000/– |

## 7.11. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC - NRO)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையமானது 2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டது. இந்த மையமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் – 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் நோக்கமானது, அதன் பங்காளர்களான திட்டப் பணியாளர்கள் சமுதாயம் சார்ந்த அமைப்புகள், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் வழங்கி திறன் வளர்ப்பை உறுதி செய்தலும் பயிற்சி உபகரணங்கள், பயிற்சி கையேடுகள், விளக்கப் படங்கள் மற்றும் பிற திட்டத் திட்டங்களுக்கு ஏற்ற பயிற்சிப் புத்தகங்கள் உருவாக்குதலும் ஆகும். இம்மையமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திறன் மற்றும் பணியமர்த்துதல் அலகாகவும் செயல்பட்டுவருகிறது.

**தேசிய வள மையம், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்துடன் இணைப்பு**

புதுவாழ்வு திட்ட தேசிய வள மையமானது, இதர மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுக்கு தேவையான தொழில் நுட்ப உதவி மற்றும் திறன் வளர்ப்பு சேவைகளை அளித்து வந்தது. புதுவாழ்வு திட்டமானது 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிவுற்றதைத் தொடர்ந்து, தேசிய வளமையமானது, தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், இம்மையத்தினை தேசிய வள மையமாக பிப்ரவரி 2, 2018ல் அங்கீகரித்துள்ளது. இத்தேசிய வள மையமானது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் மேம்பாட்டுப் பணிகள், முதியோர்களுக்கான சேவைகள், பண்ணை மற்றும் பண்ணைசாரா வாழ்வாதார செயல்பாடுகள், நிறுவனக் கூட்டமைப்புகளை அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல், மக்கள் கற்றல் மையம் வலுப்படுத்துதல், ஒத்த தொழில் கூட்டமைப்பு அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு தொழில் நுட்ப சேவையினை வழங்கி வருகிறது.

புதுவாழ்வு திட்ட தேசிய வள மையமானது, மேற்கு வங்க மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (ஆனந்ததாரா), பீகார் மாநில ஊரக வாழ்வாதார சங்கம் (ஜீவிகா), புதுச்சேரி



மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றுடன் 2015–16ஆம் ஆண்டு முதல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நிறுவன அமைப்பு மற்றும் திறன் வளர்ப்பு, உயர்மட்ட அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வந்தது.

தற்போது, தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்துடன் தேசிய வள மையம் இணைக்கப்பட்ட பின் மேற்கு வங்க மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தை 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து அடுத்த ஓராண்டிற்கும், பீகார் மாநில ஊரக வாழ்வாதார சங்கத்துடன் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் வெற்றிகரமாக நீட்டிப்பு செய்து செயலாற்றி வருகிறது.

**7.12. முற்றம் – மாத இதழ்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் முற்றம் ஒரு மாதாந்திர இதழாகும். இவ்விதழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக, அக்குழுக்களைப் பற்றிய பல பயனுள்ள தகவல்களை உள்ளடக்கி 1998 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. மத்திய மாநில அரசுகள் பெண்களுக்காக செயல்படுத்தும் திட்டங்களைப் பற்றியும் மற்றும் கல்வி, உடல் நலம், சுகாதாரம், மகளிர் மேம்பாடு, வறுமை ஒழிப்பு, நுகர்வோர் உரிமைகள், பெண்களுக்கான சட்ட உரிமைகள்

மற்றும் கடமைகள், சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக அணி திரட்டல் பற்றிய வெற்றிக் கதைகள் என பெண்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான செய்திகளை அனைவருக்கும் கொண்டு சேர்க்கிறது. தற்பொழுது, இவ்விதழானது 69,000 மகளிர் சுய உதவிக் குழுக்களை சந்தாதாரர்களாகப் பெற்று அக்குழுக்களுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் சென்று பயன் தருகிறது.

### 7.13. உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

இத்திட்டம் மாநில அரசின் நிதியில் 2017–18 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் ஒரு சிறப்புத் திட்டமாகும். உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இவ்வாகனங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி கியர் இல்லாத அல்லது ஆட்டோ கியர் உடைய இரு சக்கர வாகனங்கள் மட்டுமே இத்திட்டத்தின் மூலம் வாங்க முடியும். மாற்றுத் திறனாளிகளின் உபயோகத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட இரு சக்கர வாகனங்களும் வாங்கலாம்.



**இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் பயனாளிகள்:**

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக / ஊதிய வேலை வாய்ப்புக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொலை தூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் நோக்கத்திற்கான பயனாளிகள் ஆவர். மேலும், கீழ்க்காணும் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் தகுதியுடையவராவர்.

1. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.
2. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர்.
3. சுய தொழில் மற்றும் சிறு தொழில் செய்யும் பெண்கள்.
4. அரசாங்க நிதி உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்கள்/சமூகம் சார்ந்த நிறுவனங்கள் – ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை) ஆகியவற்றில் பணிபுரியும் மகளிர், தொகுப்பூதியம் தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் மகளிர்.
5. வங்கி தொடர்பாளர்கள் / வங்கி வழி நடத்துநர்கள் மற்றும் “ASHA” பணியாளர்கள்.

2017–18 ம் ஆண்டில் அரசு இத்திட்டத்திற்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத / ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125 CC–க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன் பெறுவர். இத்திட்டம் 24.2.2018 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு, 25.5.2018 வரை 14,214 வாகனங்கள் வாங்கப்பட்டு 12,428 வாகனங்களுக்கு ரூ.31.05 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.



## 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (புதுவாழ்வு திட்டம் – II)

## 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (புதுவாழ்வு திட்டம்–II)

### முன்னுரை

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டமானது (TNRTP) உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டத்தில், ஊரக தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதோடு, கிராமப்புற சமூகங்களின் வருவாயை இருமடங்காக்குவதே இதன் நோக்கமாகும். தமிழ்நாட்டின் 120, புது வாழ்வு திட்டம் அல்லாத வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய 26 மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, கன்னியாகுமரி, பெரம்பலூர், தஞ்சாவூர் மற்றும் சென்னை நீங்கலாக) செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் புது வாழ்வு திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் தொடங்கப்பட்ட திட்டமாகும். புது வாழ்வு திட்டமானது நவம்பர் 2005ல் தொடங்கப்பட்டு, 26 மாவட்டங்களிலுள்ள, 120 பின்தங்கிய வட்டாரங்களில், 4174 கிராம ஊராட்சிகளில் 1871.85 கோடி ரூபாயில் உலக வங்கியின் உதவியுடன் வெற்றிகரமாக செயல்படுத்தபட்டது. இத்திட்டத்தால், மக்களால் முன்னெடுக்கப்பட்ட மேம்பாட்டு அணுகுமுறை மூலம் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு, பெண்களை அதிகாரப்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக்கொண்டு 9.8 லட்சம் கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தமிழ்நாடு புது வாழ்வு



திட்டம் ஜூன் மாதம் 30 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு 12 ஆண்டுகள் முடிந்தபின் வெற்றிகரமாக நிறைவுற்றது.

### திட்டத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் ஒரு புதுமையான திட்டம் ஆகும். தமிழ்நாடு அரசு கிராமப்புற வாழ்வாதார திட்டம் (TNSRLM) மற்றும் தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டம் (NRLP) ஆகியவற்றின் மூலம், உருவாக்கப்பட்டுள்ள நிறுவன அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், ஊரக பகுதிகளில் வறுமை ஒழிப்பிற்கு அடுத்த கட்டமான ஊரக புத்தாக்கத்திற்கு உதவிடும் வகையில், தொழில் மேம்பாடு, நிதி சேவைகள் மற்றும் வேலை வாய்ப்புகள் ஆகியவை உருவாக்கப்படும்.

### சட்ட ஒப்பந்தம் மற்றும் திட்ட செயல்திறன்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட வரைவு திட்டத்தினை ஏற்று உலக வங்கி ஒப்புதலளித்தது. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டதிற்கான கடன் ஒப்பந்தம் பொருளாதார விவகாரங்கள் துறை/நிதி அமைச்சகம், இந்திய அரசு மற்றும் உலக வங்கி இடையேயும் மற்றும் திட்ட ஒப்பந்தம் ஊரக புத்தாக்கத்திட்டம், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை, தமிழ்நாடு அரசு இடையேயும் 30.01.2018 அன்று புதுடெல்லியில் கையெழுத்தானது.

திட்ட ஒப்பந்தம் கையெழுத்தானத்தின் தொடர்ச்சியாக மாநிலத்தின் சட்டரீதியான கருத்தாக்கம் பெறப்பட்டு, உலக வங்கி இத்திட்டத்தை 28.02.2018 அன்று செயலாக்கப்படுத்தியது.

**திட்ட செயலாக்கம்**

இத்திட்டம் 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில் 3 கட்டங்களாக செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக 26 மாவட்டங்களில் 26 வட்டாரங்களில், திட்டம் தொடங்கிய 8 மாதங்களிலும், இரண்டாம் கட்டமாக 52 வட்டாரங்களில், திட்டம் தொடங்கிய 12 மாதங்களிலும் மற்றும் மூன்றாம் கட்டமாக மீதமுள்ள 42 வட்டாரங்களில், திட்டம் தொடங்கிய 18 மாதங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 6 வருட காலங்களில் செயல்படுத்தப்படும்.

| வரி. என். | கட்டங்கள் | வட்டாரங்கள் | ஊராட்சிகள் |
|---|---|---|---|
| 1. | முதல் கட்டம் | 26 | 858 |
| 2. | இரண்டாம் கட்டம் | 52 | 1716 |
| 3. | மூன்றாம் கட்டம் | 42 | 1420 |
| | **மொத்தம்** | **120** | **3994** |

**நிதி பங்கீடு**

இத்திட்டத்திற்கான பங்கீட்டுத்தொகை உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற விகிதாச்சார அடிப்படையில் 919.73 கோடி (142.75 மில்லியன் டாலர்) மதிப்பீட்டில் அமையும். இந்நிதியில் உலக



வங்கியின் கடனுதவி ரூ. 644.30 கோடியாகும் (100 மில்லியன் டாலர்). ரூ 275.43 கோடி 42.75 மில்லியன் டாலர்) மாநில அரசின் பங்களிப்பாகும்.

**திட்ட பயனாளிகள்**

இத்திட்டத்தில், முந்தைய திட்டத்தால் உருவாக்கப்பட்ட சொத்துகள், வளங்கள் மற்றும் திறன்களை கொண்ட சுய உதவி குழு உறுப்பினர்கள் அடங்கிய குடும்பங்களின் உறுப்பினர்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் தொழில் ஆர்வலர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டத்தின் பயனாளிகள், தேர்வு செய்யப்பட்ட வட்டாரங்களில் உள்ள விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாரா துறைகளை சேர்ந்த உற்பத்தியாளர் குடும்பங்கள் ஆவர்.

இத்திட்டத்தின் மூலம் 4,11,620 நேரடியாக பயனாளிகள் பயன்பெறுவர். அவற்றுள் 3,25,000 குடும்பங்களில் உள்ள உறுப்பினர்கள் மூலம் தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு அமைக்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாக 6,620 தனிநபர் தொழில்முனைவோர்கள் மற்றும் 80,000 பயனாளிகளுக்கு (40,000 இளைஞர்களுக்கு தமிழக அரசின் பிறதுறைகளின் திட்டங்கள் மூலமும் 40,000 பயனாளிகளுக்கு

இத்திட்டத்தின் சமுதாய பயிற்சி பள்ளிகள் மூலமும்) தொழில் சார்ந்த திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

| வரிசை. எண். | செயல்பாடுகள் | விவரம் | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | குழு தொழில் நிறுவனங்கள் | 6000 உற்பத்தியாளர் குழுக்கள் | 3,00,000 |
| | | 1000 தொழில் குழுக்கள் | 25,000 |
| | | | **3,25,000** |
| 2. | தனிநபர் தொழில் நிறுவனங்கள் | நுண் | 6,000 |
| | | குறு | 500 |
| | | சிறு | 120 |
| | | | **6,620** |
| 3. | திறன் பயிற்சி | கூடுகை மூலமாக திறன் பயிற்சி | 40,000 |
| | | திட்ட பயிற்சி பள்ளிகள் மூலமாக | 40,000 |
| | | | **80,000** |
| | **மொத்தம்** | | **4,11,620** |

**திட்ட கூறுகள்: -**

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் நான்கு கூறுகளை உள்ளடக்கியது:

**1.கிராமப்புற தொழில் முனைவு சூழல் மேம்பாடு**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் தொழில் முனைவுகளுக்கான சூழல்களை உருவாக்குதலாகும். முதற்கட்டமாக மாவட்ட அளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இவ்வாய்வின் மூலம் துறைகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் கண்டறியப்பட்டு, ஊரக அளவில் தனிநபர் மற்றும் குழு சார்ந்த தொழில்கள் உருவாக்கப்படும், நடப்பில் உள்ள ஊரக தொழில்களும் வலுப்படுத்தப்படும். இத்தொழில்களுக்கு தேவையான



சந்தை மற்றும் மதிப்பு சங்கிலி மேம்பாட்டு வாய்ப்புகள் கண்டறியப்பட்டு, தொழில் மேம்பாடு சார்ந்த சேவைகள் வழங்கப்படுவதோடு நிலையான வணிக சூழல்களுக்கான வழிவகைகளும் செய்யப்படும். இத்திட்டத்தில் பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் பசுமை சார்ந்த நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

**2.தொழில் நிறுவனங்களுக்கான நிதி திட்டம்**

இக்கூறின் கீழ் கிராமப்புறங்களில் உருவாக்கப்படும் தொழில்களுக்கு தேவையான நிதியினை பெற்றுத் தர வழிவகை செய்யப்படும். வங்கிகள் கடன் வழங்குவதை ஊக்குவிக்கும் விதமாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 70% பங்களிப்பு தொகையினை முழுமையாக திரும்ப செலுத்தும் பயனாளிகள், 30% பங்களிப்பு தொகையினை மானியமாக பெற தகுதியுடையவர் ஆவர். மேலும் அரசின் மூலம் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின் மூலமாகவும் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் (வணிக வங்கிகள், சிறு நிதி நிறுவனங்கள், மதிப்பு சங்கிலி நிதி நிறுவனங்கள்) மூலமாகவும் கடன் பெறுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும். மேலும், பங்குகொள்ளும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடன்களுடன் இத்திட்டத்தின் மானிய பங்களிப்பு நிதியும் சேர்க்கப்படும்.

**3. திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகள்**:

இக்கூறின் நோக்கமானது a) நிலையான ஊதியம் மற்றும் சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதல், b) உயர் மதிப்புடைய வேளாண் மற்றும் அதை சார்ந்த நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய திறன்களை மேம்படுத்துதல் மற்றும் c) சந்தைக்கொப்ப திறன்கள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக தொழில்முனைவை மேம்படுத்துதல் ஆகும்.

**4. திட்ட மேலாண்மை கண்காணிப்பு மற்றும் செயல்பாடு**

இக்கூறின் நோக்கமானது இந்தத் திட்டத்திற்கு தேவையான சேவைகளை வழங்குதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, நிதி மேலாண்மை, கொள்முதல் மேலாண்மை மற்றும் மனிதவள ஆதாரங்களை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**நிறுவன அமைப்பு: -**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊரக புத்தாக்க சங்கம், திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கிறது. இச்சங்கம், தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975 ன் கீழ் 7.7.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் மற்றும் வழிநடத்தவும் மாவட்ட ஊரக புத்தாக்க சங்கம், மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் அமைக்கப்படும்.



இத்திட்டம் மாநில, மாவட்ட மற்றும் வட்டார, திட்ட மேலாண்மை அலகுகள் மூலம் செயல்படுத்தப்படும்.

**மாநில திட்ட அலகு**

இத்திட்டம், மாநில திட்ட அலகு மூலம் நேரடியாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் உள்ள மாநில திட்ட மேலாண்மை அலகின் தலைமை செயல் அலுவராக, இந்திய ஆட்சி பணியை சார்ந்த அலுவலரின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இத்திட்டம் நடைமுறை படுத்தப்படும்.

**மாவட்ட திட்ட அலகு**

இத்திட்ட அலகானது மாவட்ட செயல் அலுவலர் தலைமையின் கீழ் இயங்கும். 26 மாவட்டங்களிலும் ஊரக புத்தாக்க திட்டமானது நடைமுறைப்படுத்தப்படும். இவ்வலகுகளில் மாவட்ட செயல் அலுவலர்களுக்கு, திட்ட செயலாக்கத்திற்கு உறுதுணையாக நான்கு செயல் அலுவலர்களும் இருப்பர்.

**வட்டார அலகு**

இந்த வட்டார அலகானது 26 மாவட்டங்களில் 120 வட்டார அலகுகள் ஏற்படுத்தப்படும். இது வட்டார அணித் தலைவரால் நிர்வகிக்கப்படும். மேலும் இவ்வலகில் மூன்று திட்ட நிர்வாகிகளும் இருப்பர்.

**வரவு செலவு திட்டம்**

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2018-19 ஆம் நிதி ஆண்டில் ரூ. 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2018-19 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

- இத்திட்டம், முதற்கட்டமாக 26 மாவட்டங்களை உள்ளடக்கிய 26 வட்டாரங்களில் தொடங்கப்படும்.
- மாநில, மாவட்ட, வட்டார அலகுகளுக்கான திட்ட ஊழியர்கள் பணியமர்த்தப்படுவர்.
- 24 மாவட்டங்களில் மாவட்ட செயல்திட்ட முகமை (DPMU) (கரூர் மற்றும் தேனி மாவட்டங்கள் முறையே திருச்சி மற்றும் மதுரை மாவட்ட செயல்திட்ட முகமையுடன் இணைக்கப்படும்) மற்றும் 120 வட்டாரங்களில் வட்டார முகமை ஏற்படுத்தப்படும்.
- இத்திட்டம் விவசாயம், விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத துறைகளில் மாவட்ட அளவிலான ஆய்வின் (DDS) மூலம் சாத்தியமான வாய்ப்புகளை பகுப்பாய்வு செய்யப்படும்.
- மதிப்பு சங்கிலி ஆய்வின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை பற்றிய ஆழ்ந்த பகுப்பாய்வு செய்யப்பட்டு திட்ட முதலீடுகளுக்கான சாத்தியக்கூறுகள் அடையாளம் காணப்படும்.



- திட்ட கிராமங்களில் தனிநபர் தொழில் முனைவோர், உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் நிறுவன குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு ஆகியவற்றினை கண்டறிய, மக்கள் பங்கேற்புடன் கூடிய பங்கேற்பு வளர்ச்சித் திட்டம் (PGP) உருவாக்கப்படும்.
- திட்டம் செயலாக்கப் பகுதி–I–ல் இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் பெற்றுதரக் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

## 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்



## 9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

### குறிக்கோள் மற்றும் நோக்கம்

டிசம்பர் 26, 2004–ல், தமிழ்நாடு கிழக்கு கடற்கரையை தாக்கிய சுனாமிப் பேரலையால், உயிர்கள் மற்றும் உடைமைகள் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு அழிவுக்குள்ளாயின. மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் சமுதாயக் கட்டமைப்பு வசதிகளும் பெரும் சேதமடைந்தன. மக்கள் இயல்பு நிலைக்கு மீண்டு வர தமிழக அரசு பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்துடன் இணைந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை உருவாக்கியது. சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டு அதை மேம்படுத்தி, நிலைத்த தன்மையை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய இலக்காகும். இலக்கு மக்களின் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த, அவர்களுக்கு உரிய திறன் மேம்பாடு பயிற்சிகளை வழங்கி, வருமானம் ஈட்டக்கூடிய நுண் தொழில்களை இனம் கண்டு உருவாக்கி தருதலும், அதனை தொடர ஊக்கப்படுத்துதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் இரண்டு பகுதிகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**திட்டம் – ஒரு பார்வை**

**அ. பகுதி – I மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| திட்ட காலம் | : | 11 ஆண்டுகள் (2008 முதல் 2019 வரை) |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| செயல்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகபட்டினம் மற்றும் கன்னியாகுமரி |

**ஆ. பகுதி – II மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| திட்ட காலம் | : | 3 ஆண்டுகள் (2016 முதல் 2019 வரை) |
| திட்ட மதிப்பீடு | | ரூ.279.49 கோடி |
| செயல்படும் மாவட்டங்கள் | : | திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, மற்றும் திருநெல்வேலி |

**திட்டப் பயனாளிகள்**

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது :–

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்



- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

**செயலாக்க அமைப்பு**

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களது தலைமையில் “மாநில திட்ட வழிகாட்டுக் குழு” அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. திட்ட மேலாண்மை அலகின் உறுதுணையுடன் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் அவர்களைச் சாரும். மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் கண்காணிப்பில், தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு வள மையங்களின் உதவியுடன் மாவட்ட அளவில் இத்திட்டத்தை மாவட்ட செயலாக்க அலகு செயல்படுத்தி வருகின்றது.

**திட்டக் கூறுகள்**

இத்திட்டத்தின் மூன்று முக்கிய உட்கூறுகள் பின்வருமாறு 1) கடலோர வள ஆதார மேலாண்மை, 2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள், 3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி போன்றவைகள் ஆகும்.

**அ. கடலோர வள ஆதார மேலாண்மை**

**1. சமுதாய ஆதரவு**

இத்திட்டத்தை ஊராட்சி அளவில் கூட்டு வள மையங்கள் செயல்படுத்துகின்றன. ஒவ்வொரு கூட்டு வள மையமும் 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளை கொண்டுள்ளது. அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் திட்டப்பகுதியில் 64 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு குழு ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator), ஒரு வியாபார ஊக்குநர் (Business Promoter) மற்றும் ஒரு கூடுதல் வியாபார ஊக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக, அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் தேவையான தளவாட சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன. இது வரை ரூ.8.23 கோடி செலவில் 108 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.



**2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்**

சமுதாயத்திற்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப்படுத்த ஏதுவாக சமுதாய பங்கேற்புடன் கூடிய வள ஆதார வரைபட முயற்சிக்கு பொது மக்கள் மற்றும் கூட்டு வள மைய பணியாளர்கள் முனைப்புடன் உதவி புரிகின்றனர். நுண் திட்டங்கள், ஊரக பங்கேற்பு மூலம் வடிவமைக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டங்கள் சுற்றுப்புற சூழல், பாலின வேறுபாடு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்வு செய்யும் நோக்கில் தயாரிக்கப்படுகின்றன. சமுதாய மக்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கு 2018–19 –ல் ரூ.19.28 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட உள்ளன.

**3. மீன் வள மேலாண்மை**

மீன் வளத் துறையுடன் ஒருங்கிணைந்து, அறிவியல் மேலாண்மை சார்ந்த மீன் வளம் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது. கடல் வளம் மற்றும் மீன் வளம் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிவதும், அவற்றை சரியாக மேலாண்மை செய்வதும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்வாதார மேம்பாடுத் திட்டமிடுதலில் மிகவும் முக்கிய அம்சங்களாகும். மேலும், மீன் துறையில் தேர்ந்த நிறுவனங்களின் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. மீன் வளத்தைப் பெருக்கும் பொருட்டு, மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் (CMFRI) தொழில் நுட்ப

உதவியுடன் மூன்று வகைகளில் செயற்கை பவளப் பாறைகள் தயாரிக்கப்பட்டு கடலில் 18 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

### ஆ. ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்

#### 1. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மைக்கு, எளிதாகவும், குறித்த காலத்திலும் தடையின்றி கிடைக்கும் கடன் முக்கிய காரணியாக அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கியில் கடன் இணைப்பு பெற ஏதுவாக, வங்கியாளர்களுடன் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் நுண்தொழில்களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி வங்கியின் துணை நிறுவனமான நாபின்ஸ், ஐசிஐசிஐ வங்கி, பல்லவன் கிராம வங்கி மற்றும் இந்தியன் வங்கி போன்ற வங்கிகளின் வணிக மேம்பாட்டு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் செயல்படுகின்றன. 2017–18 –ல், 800 சுய உதவிக் குழுக்களில் உள்ள 12,927 உறுப்பினர்கள் வங்கிகளின் மூலம் ரூ.3766 இலட்சம் கடன் தொகை பெற்று பயனடைந்துள்ளனர்.

மேலும், தலைச்சுமை மீன் விற்பனை செய்யும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களையும் சேர்த்து மொத்தம் 3763 கூட்டுப்



பொறுப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டு, வாழ்வாதாரத் தொழில் நடவடிக்கைகளுக்காக 6868.90 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

#### 2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு

பேரழிவின் போது ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய "துயர் குறைப்பு நிதி" மக்களுக்கு 6 சதவீத வட்டியில் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் 4/5 பங்கு திட்ட நிதியாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் பெறப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் (PLFs) நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இந்நிதி தனிநபர் கடனாக ரூ.1000 முதல் ரூ.7500 வரையும், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10,000 வரையும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை – 9.1**

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாட்டு விவரம்**

| வருடம் | பயன் பெற்றோரின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2010 – 11 | 1875 | 62.86 |
| 2011 – 12 | 1667 | 68.46 |
| 2012 – 13 | 3391 | 151.48 |
| 2013 – 14 | 3870 | 205.92 |
| 2014 – 15 | 6582 | 324.28 |
| 2015 – 16 | 6786 | 343.51 |
| 2016 – 17 | 4376 | 276.58 |
| 2017 – 18 | 7382 | 219.93 |
| **மொத்தம்** | **35929** | **1653.02** |

இத்திட்டத்தின் சிறப்பம்சங்களில் முக்கியமான ஒன்று இலக்கு மக்களுக்கான காப்பீட்டுத் திட்டமாகும். காப்பீடு தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, தங்களுக்கு பொருத்தமான காப்பீடு திட்டத்தை மக்களே தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்களுக்கும் இது தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றது. உயிர், உடல்நலம், தனிநபர் விபத்துகள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றில் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் வகையில் காப்பீட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு வழங்கும் பொருட்டு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் நிறுவனம் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.

**3. நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி**

ஒரு புதிய உத்தியாக வீட்டு சமையலறைக் கழிவுகளிலிருந்து சமையல் எரிவாயு உற்பத்தி செய்யும் 709 கலன்கள் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு கலனின் மதிப்பீட்டு தொகையின் 30 சதவீதம் திட்ட பங்கு தொகையாகவும், 24 சதவீதம் மத்திய திட்ட மானியமாகவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கடனாக 36 சதவீதமும் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை 10 சதவீதமுமாக இதன் மதிப்பீடு ரூ.20,900 ஆகும்.



2017–18 ஆம் ஆண்டில் ரூ.26.71 இலட்சம் செலவில் 140 சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தக் கலன்கள் சமையல் கழிவை மறுசுழற்சி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**இ. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி**

**1. சுய உதவிக் குழுக்களுக்கான உதவி**

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலையை கண்டறிய தரமதிப்பீடு செய்யப்படுகிறது. வலுவற்ற சுய உதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுக்கு இதர திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அன்றாட கணக்குகளை எளிதாக்கும் வகையில் டேலி மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பால் பண்ணை. விவசாயம், சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் போன்ற வாழ்வாதாரத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2. மீன் விற்பனை சங்கங்கள்**

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புடன் (SIFFS) இணைந்து மீன் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இது வரை 84 மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்கும் பொருட்டு ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.15,000/– முதல் ரூ.70,000/– வரை கடன் மீட்பு நிதி வழங்கப்படுகின்றது. அனைத்து மீன் விற்பனை சங்கங்களுக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இரண்டு மாவட்ட மீனவர்கள் கூட்டமைப்புகளும், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை ஒருங்கிணைத்து, விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மண்டல கூட்டமைப்பும் நிறுவப்பட்டுள்ளன. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மூன்றும், மூன்று படகு கட்டும் தளங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாளுவதற்காக நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தவிர, மீனவ மகளிருக்கு வலை பின்னுதல், மகளிர் மீன் வியாபாரிகளுக்கு கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்குதல் ஆகிய வாழ்வாதார செயல்பாடுகளுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளன.



**3. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி**

வாழ்வாதாரத் திறன்களை பயனாளிகளுக்கு வழங்குதல் மிகவும் அவசியமாதலால், இத்திட்டத்தின் மூலமாக 17,092 சமுதாய மக்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுதல், விற்பனை மேம்பாடு மற்றும் பொருள் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றை இப்பயிற்சிகள் மக்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளன. 2018–19–ல் 8000 பயனாளிகளுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற்சிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. நுண் தொழில் மேம்பாடு**

விவசாயிகளின் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மையான தனி நபர் ஆகியோர் வெற்றியடைய ஏதுவான தொழில்கள் துவக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தொழில் நுட்ப வல்லுநர்கள் / சிறப்பு நிறுவனங்கள் / கல்விக் கூடங்கள் ஆகியவை தொழில் உட்பிரிவுகளையும் அவை தொடர்பான ஆய்வுகளையும் மாவட்ட வாரியாக மேற்கொள்கின்றன. நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் திட்ட மேலாண்மை அலகு உடன்பாடு ஏற்படுத்தி குறிப்பிட்ட தொழில் உட்பிரிவில் தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த

முனைந்துள்ளது. திட்ட செயலாக்கப் பகுதியில் இதுவரை 189 நுண் தொழில்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மா விவசாயம், காய்கறி மற்றும் மூலிகைச் செடிகள், மலர்த் தோட்டம், மீன் மற்றும் கருவாடு விற்பனை, கோழி வளர்ப்பு, தென்னை விவசாயம், கயிறு தயாரித்தல், தென்னை ஓலை முடைதல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், புடவை வண்ணம் தீட்டுதல், மளிகை வியாபாரம், சிற்றுண்டியகம், அழகுக் கலை நிலையம், மின்னணு சேவை மையத்துடன் இணைந்த நகலகம் போன்ற தொழில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.9.78 கோடி செலவில் ஒரு மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. 2018–19 –ல், நுண் தொழில்கள் ஏற்படுத்திட 1449 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஈ. சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை**

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் மற்றும் பட்டறைகள் துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடலோர பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மைக் கல்வி அவசியம் என்பதால், தொடக்க பள்ளிகளில் சுற்றுச் சூழல் கல்வி பாடத்திட்டம் மற்றும்



அதற்கான கையேடுகள் தயாரித்தல் குறித்தும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான ஏடுகள் பள்ளி ஆசிரியர்களுக்கும் விளக்கப்படுகின்றன. கையேடுகள் தயாரித்தல், அச்சடித்தல் விநியோகித்தல் அவற்றின் சீராய்வு மற்றும் விழிப்புணர்வுக் கல்வியில் சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ஆகியவையும் இப்பிரிவில் அடங்கும். மேலும், கடலோர பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு நிதி மேலாண்மை குறித்த கல்வியறிவு புகட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

மாநில, மாவட்ட, கூட்டு வள மையம் மற்றும் ஊராட்சி நிலைகளில் பயனுள்ள எளிய பதிப்பான டேலி மென்பொருள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திட்ட செயல்பாடுகளின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையிலான முன்னேற்றம் இணையதளம் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. தனிப்பட்ட திட்ட உட்கூறுகளின் நடவடிக்கைகளின் குறிப்பிட்ட கால முன்னேற்றம் மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் காணொலி மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வருடமும் ஆண்டு திட்டவிளைவு (outcome) குறித்த மதிப்பீடு மூன்றாம் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. திட்ட செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு மாநில அளவில் திட்ட வழிகாட்டு குழுவும், நாடு அளவில் முத்தரப்பு நிதி செலவு குறித்த ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகின்றன.

திட்ட செயல்பாடுகளை 23.04.2018 முதல் 04.05.2018 வரை ஆய்வு செய்த பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழு, திட்ட செயல்பாடுகளுக்கு "திருப்திகரம்" என்ற சிறப்பான மதிப்பீடு வழங்கியுள்ளது.

திட்ட மேலாண் அமைப்பு (Project Management Structure) கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

| அடிப்படை | அலகு | வழிகாட்டுதல் |
|---|---|---|
| மாநில அளவில் | திட்ட மேலாண்மை அலகு | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் திட்ட வழிகாட்டுக் குழு செயல்படும் |
| மாவட்ட அளவில் | மாவட்ட செயலாக்க அலுவலகம் | மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டத்தை செயல்படுத்தும் ஆலோசனைக் குழு |
| கிராம அளவில் | கிராம கூட்டு மேம்பாட்டு மையம் | ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு மேம்பாட்டு ஆலோசனைக் குழு |

## திட்ட நிதி ஒதுக்கீடு

### அ. நிறுவன வாரியாக

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | |
|---|---|---|---|
| | | பகுதி - I | பகுதி – II |
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் | 132.32 | 142.15 |
| 2 | தமிழக அரசு | 12.00 | 16.08 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 94.32 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 26.94 |
| **மொத்த தொகை** | | **283.69** | **279.49** |



## அட்டவணை – 9.2

## திட்டக் கூறு வாரியான மொத்த செலவினம்

### அ. ஏற்கனவே செயல்படும் மாவட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டக் கூறு எண் | திட்டக் கூறு | திட்ட மதிப்பீடு தொகை | திட்ட இடைநிலை அறிக்கை (05.10.2017 தேதிய ஒரு டாலர் மதிப்பீடு (ரூ.65.15) | 2007 முதல் 2017 வரை | | 2017–18 (01.04.17 முதல் 31.03.2018 வரை) | | 31.03.2018 வரை உள்ள மொத்த செலவினம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 வரையான நிதி விடுவிப்பு | மேற்கொள்ளப் பட்ட செலவினம் | நிதி விடுவிப்பு | மேற்கொள்ளப் பட்ட செலவினம் | | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 3851 | 5632 | 5591.84 | 5484.87 | 272.23 | 479.81 | 5964.68 | 106 |
| II. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள | 983 | 1398 | 1391.25 | 1329.36 | 84.23 | 127.06 | 1456.42 | 104 |
| III. | வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி | 6631 | 9399 | 5063.18 | 5049.30 | 823.22 | 621.63 | 5670.93 | 60 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 180 | 242 | 235.80 | 235.51 | - | - | 235.51 | 97 |
| V. | திட்ட மேலாண்மை | 1592 | 2256 | 3340.12 | 3302.55 | 211.32 | 372.42 | 3674.97 | 163 |
| **மொத்தளம்** | | **13237** | **18927** | **15622.19** | **15401.59** | **1391.00** | **1600.92** | **17002.51** | **90** |

## அட்டவணை – 9.3

### ஆ. விரிவுப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள்:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | வகை | திட்ட மதிப்பீடு தொகை | 2016–17 | | 2017–18 (1.04.2017 முதல் 31.03.2018 வரை) | | 31.03.2018 வரை உள்ள மொத்த செலவினம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வருடாந்திர பணி திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள்ளப் பட்ட செலவினம் | வருடாந்திர பணி திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு | மேற்கொள்ளப் பட்ட செலவினம் | | |
| I. | பணிகள் | 4421.09 | 1557.40 | 0.29 | 1892.40 | 191.92 | 192.21 | 4.3 |
| II. | மானியம் | 3592.00 | 757.60 | 0.00 | 1946.00 | 224.86 | 224.86 | 6.2 |
| III. | உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | 312.02 | 227.09 | 3.30 | 174.57 | 99.54 | 102.84 | 33.0 |
| IV. | ஆலோசனை கட்டணம் | 2024.70 | 859.64 | 7.91 | 841.75 | 125.78 | 133.69 | 6.6 |
| V. | சரக்கு, சேவை மற்றும் உள்ளீடு | 3656.07 | 623.92 | 1.57 | 794.94 | 349.06 | 350.63 | 9.59 |
| VI. | சம்பளம் மற்றும் படிகள் | 1816.63 | 736.96 | 0.17 | 725.11 | 288.69 | 288.86 | 16.0 |
| **மொத்தம்** | | **15822.51** | **4762.61** | **13.24** | **6374.77** | **1279.85** | **1293.09** | **8.0** |



# 10. வரவு செலவுத் திட்டம் 2018–2019

## 10. வரவு செலவுத் திட்டம் 2018–2019

**2018–2019** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.17,869.931 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.15,783.081 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.2,086.850 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 11. முடிவுரை

## 11. முடிவுரை

ஊரகப் பகுதிகளின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குத் தேவையான ஊரக அடிப்படைக் கட்டமைப்பு, ஊரக வீட்டு வசதி, ஊரக இணைப்புச் சாலைகள், அடிப்படை வசதிகள், வறுமை ஒழிப்பு, தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் ஆகிய செயல்பாட்டின் செயல்திட்டங்களுக்கான இந்த அரசின் முயற்சிகள் மற்றும் உத்திகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட, இந்த அரசின் முன்னோடித் திட்டமான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், கிராமங்களில் உள்ள குடியிருப்பு பிரச்சனைக்கு தீர்வு கண்ட தனித்தன்மை வாய்ந்த சிறப்பான திட்டமாகும். கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில், ஒரு கிராம ஊராட்சியில் ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட பணிகளை மேற்கொண்டு அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்குதல், பணிகளைத் தெரிவு செய்ய செயற்கைக் கோள் வரைபடங்கள் பயன்படுத்துதல் மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், சிறு, குறு விவசாயிகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் நில மேம்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்படுகிறது.



ஊரக பகுதிகளில் கிராமச் சாலைகளை தரம் உயர்த்துதல், வலுப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மூலம் அனைத்து பருவகாலங்களுக்கும் ஏற்றவாறு ஊரகச் சாலைகளை மேம்படுத்த அதிகபட்ச நிதி பயன்பாட்டுடன் இந்த அரசு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை தொடர்ந்து நிறைவேற்றி வருவதுடன், சாலைப்பணிகளுக்கு பெருமளவு நிதியினை பல்வேறு இதர ஊரக வளர்ச்சி திட்ட நிதி ஆதாரங்களின் மூலம் செயல்படுத்தி வருகின்றது.


முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம் என்ற உன்னத முயற்சியை அடைந்திட இந்த அரசானது பல்முனை யுத்திகளை கடைபிடித்து வருகின்றது. பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதற்கு, மாநிலத்தில் பரவலாக உள்ள சமுதாய மூலதனமான மகளிர் சுய உதவிக் குழுக்களுடன், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி, சமூகநலம் ஆகிய இதர துறைகளைச் சார்ந்த பணியாளர்களும் களப்பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களை தொடர்ந்து ஈடுபடுத்துவதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்துக்கொள்வதற்கும் அதன் மூலம் ஒட்டு மொத்த மாநில வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள்


ஊரக ஏழைகளுக்கும், ஊரக மகளிருக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கியுள்ளது. ஆற்றல் மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் நிதியுதவி ஆகியவற்றின் மூலம் பெண்களை சுய சார்பு உள்ளவர்களாக ஆக்குதலே அரசின் நோக்கமாகும். இனி வரும் ஆண்டுகளில் நிலைத்த நீடித்த ஊரக தொழில்களையும் ஊரக வேலைவாய்ப்பினையும் உருவாக்கி மேம்படுத்தும் நோக்கமே ஊரக வளர்ச்சியின் முதன்மைச் செயல்பாடாக இருக்கும். மகளிர் சுய உதவிக்குழுக்களை அதிக அளவில் ஈடுபடுத்தி அனைவரும் போற்றும் வண்ணம் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு அவர்களை தொடர்ந்து வழி நடத்தும்.

அனைத்து நிலைகளிலும் நாட்டிலேயே சிறப்பாக செயல்படும் மாநிலமாக தமிழகம் தொடர்ந்து விளங்கிட **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா** அவர்கள் வகுத்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை உறுதியுடன் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றும்.


**எஸ்.பி.வேலுமணி,**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**





**மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை**





**மாவட்ட வாரியாக குக்கிராமங்களின் எண்ணிக்கை**





**2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராம ஊராட்சிகளின் விவரங்கள்**





வருவாய் வரம்பின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் விவரங்கள்




**மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை**




**மாவட்ட வாரியாக ஊரக பரப்பளவு ( ச.கி.மீ )**


31,376
5,832
7,032
98,884
3,049
3,273
தார்ச் சாலை
சிமெண்ட் சாலை
ஈரடுக்கு கப்பிசாலை
ஓரடுக்கு கப்பிசாலை
சரளைக்கல் சாலை
மண்சாலை

ஊரக சாலைகள் ( கி.மீ )



முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு



புதிய அங்கன்வாடி கட்டடம்



தார்ச் சாலை அமைத்தல்



புதிய பாலம் அமைத்தல்



புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாடுகள்




மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தடுப்பணை கட்டுதல்









அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம்




**'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 'தூய்மையே சேவை இயக்கம்' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.09.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**



மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் புதிய பல்நோக்கு மையம்




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில்**
**மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில்**
**அம்மா இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்**



மகளிர் சுய உதவிக் குழுவினரால் அமைக்கப்பட்ட மாடித் தோட்டம்




**கல்லூரிச் சந்தை**



சுய உதவிக் குழுவின் பொருளாதார செயல்பாடு